# மல்லிகை

'MALLIKAI' PROGRESSIVE MONTHLY MAGAZINE

ஆசிரியர்: டொமினிக் ஜீவா

## பொங்கல் மலர்

விலை 1-50

ஜனவரி 1978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது யுக

ஆடவர்

இளமங்கையர்

விரும்பும்

நவீன

நவநாகரிகமான

ஜவுளிகளை

தெரிவுசெய்ய

ஊவாப்

பிரதேசத்தில்

பிரபலமான

ஒரே

ஜவுளி மாளிகை

# வெங்கடேஸ்வரா

தொலைபேசி: 298

52, பஜார் வீதி,
பதுளை.

# அரஸ்கோ

## மாம்பழச் சாறு

முதலியவற்றிற்கு

கொழும்பில்

ஏக வினியோகஸ்தர்

**gokula**
DISTRIBUTORS

Telephone : 26381
26459

44-7/2, 2nd Floor,
Y. M. B. A. Building,
COLOMBO 1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேடியோ
மற்றும்
மின்சார
உபகரணங்கள்
திருத்திச் செப்பனிட்டுக் கொடுப்பதில்
பிரசித்தி பெற்றவர்கள்.

மற்றும்
மணிக்கூடுகளும்
மைக்குகளும்
பழுது பார்ப்பதில்
பிரக்கியாதி கொண்டவர்கள்

ஒரு தடவை ஜீவம் செய்யுங்கள்

MALAYAN RADIO SERVICE
45, Kasthuriar Road,
JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் - பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்'

1978

ஜனவரி

17

# பதிமூன்றாவது ஆண்டு

# மல்லிகை

*'Mallikai' Progressive Monthly Magazine*


முகவரி:
ஆசிரியர் டொமினிக் ஜீவ
234- A கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
இலங்கை

MALLIKAI
Editor: Dominic eeva
234A, K. K. S. Road,
JAFFNA.
Sri Lanka


மல்லிகையில் வெளி
யாகும் கதைகள், கவி
தைகளில்வரும் பெயர்கள்
நிகழ்ச்சிகள் யாவும்
கற்பனையே
சித்தனை, கருத்து
எல்லாம் ஆக்கியோர்
தனித்துவம்
பொறுப்பும் அவை

சகலருக்கும் — அபிமானிகள், ரஸிகர்கள், மல்லிகையின் இலக்கிய சேவையைக் கௌரவித்து விளம்பரம் தந்துதவும் வர்த்தகர்கள் — எமது மனப்பூர்வமான பொங்கல் வாழ்த்துக்களைக் கூறிக் கொள்ளுகின்றோம்.

புதிய ஆண்டு பிறந்துள்ளது.

இந்தப் புதிய ஆண்டை எதிர்கால நம்பிக்கையுடனும் பல எதிர்பார்ப்புகளுடனும் வரவேற்கின்றோம்.

பொங்கல் மலர் எனப் போட்டுவிட்டு. பொங்கலைப் பற்றி ஒன்றுமே இதில் இல்லையே எனச் சிலர் குறைபடலாம். பொங்கல் மகிழ்ச்சியின் சின்னம் புதிய நம்பிக்கைகளின் பேரொளி. உலகுக்கு உணவூட்டும் உழவன் திருநாள் எனவே நாமும் பொங்கலை ஒரு குறியீடாகக் கொண்டுள்ளோமே தவிர பொங்கலைப் பற்றி அரைத்த மாவையே திருப்பத் திருப்ப அரைக்க விரும்பவில்லை

தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் பொங்கல் மலர் போட வேண்டுமென்பதே எமது விருப்பம். அதே போல உங்களுடைய அன்பும் ஆதரவும் என்றும் எமக்குக் கிடைக்க வேண்டுமென அபிக்கின்றோம்.

தொடர்ந்து பல புதிய அம்சங்களை மல்லிகையில் தொடர வேண்டுமென்பதே எமது விருப்பம் என்ன மாதிரியான அம்சங்களை இதழ்களில் உள்ளடக்கலாம் என்ற ஆக்க பூர்வமான யோசனையை உங்களிடம் கேட்பது எங்கள் உரிமை

— ஆசிரியர்

எம்மிடம்

பிரபல எழுத்தாளர்களின் நூல்கள்

மற்றும்




ஆகிய ஆங்கில
தமிழ்
நூல்களும்
பாலர் வகுப்பு
முதல்
பட்டதாரி
வகுப்பு
வரையிலான
பாடநூல்களும் பெற்றுக்கொள்ளலாம்

அத்துடன்
பாடசாலை உபகரணங்களும்
எம்மிடம்
சகாயமாகக் கிடைக்கும்

தங்களது ஆதரவையும் அன்பையும் நாடும்

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

4, பஸ்நிலைய முகப்பு யாழ்ப்பாணம்.

கிளைகள் : முதலாம் குறுக்குத்தெரு, ஆஸ்பத்திரி வீதிச் சந்தி,
புகையிரத நிலையம், யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7631

மல்லிகை

## உனது புனிதமான நாமத்திற்கு—
## மனுக் குலம் நன்றியுடன் தலைவணங்கும்

முடிந்த ஆண்டு உருதுக் கவிஞரான உலகக் கவிக் கோமான் அல்லாமா இக்பாலின் நூற்றாண்டாகும்.

சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் — 1877-ம் ஆண்டு நவம்பர் 9-ம் திகதி — சியால் கோட் என்ற இடத்தில் ஓர் ஏழைத் தையல்காரனின் மகனாகப் பிறந்தார், இக்பால்.

இவருடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரிகள்; இரண்டு சகோதரர்கள். வீட்டில் வறுமை. இளமையும் வறுமை.

படிப்பில் சூடிகையான இந்த இக்பால் மாணவன் கல்லூரியை எட்டிப் பிடித்தான். படிப்படியாகப் பட்டப் படிப்பில் முன்னேறிய இவர் பி. ஏ. — எம். ஏ. பட்டங்களை வெகு சுலபமாகப் பெற்றுக் கொண்டார். பின்னர் தத்துவத்தில் டாக்டர் பட்டத்தையும் சுவீகரித்தார். சட்டப் படிப்பில் நுழைந்து பார்—அட்லா என்ற சட்ட நிபுணர் சன்னத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவைதான் சுருக்கமான இவரது வரலாறாகும்.

இவைகளல்ல நாம் இக்பாலை ஞாபகப்படுத்திப் போற்றுவதற்குரிய காரணங்கள்.

மாபெரிய மக்கள் கவிஞராக அவர் மிளிர்ந்ததுதான் அவரை இன்றும் உலகில் கோடானு கோடி மக்கள் மதித்துப் போற்றுவதற்குரிய அடிப்படையாகும்.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய மிகச் சிறந்த கவிஞர்களில் இக்பாலும் ஒருவர். இந்த நூற்றாண்டு கடைமைப்பட்டுள்ள கவிஞர்களில் இவரும் முக்கியமானவர்.

உழைக்கும் மக்களுக்காகவே அவரது பேனா முனை அசைந்தது. அவர் பாடுபடும் மக்களின் பக்கம் வலுவாகக் காலூன்றி நின்று கொண்டுதான் உலகத்தைப் பார்த்தார்; தனது கவிக் குரலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம்பாடிக் கீதமாக்கினர். உலகப் பாட்டாளி வர்க்கத்தை ஒரு சேர நோக்கிக் கீதமிசைத்தார்.

அவரிடம் மத உணர்ச்சி இருந்தது. அந்த மத உணர்ச்சியில் எந்தவிதமான குறுகிய தன்மைகளும் — தனிமைப்படும் போக்குகளும் — காணப்படவில்லை.

'குர் — ஆன் தொழிலாளிகளுக்கு உற்ற நண்பன் — முதலாளிகளுக்குச் சாவு மணி!' எனத் துணிந்துரைத்தவர் இக்பால்.

கவிதைத் துறையிலும் சரி, பொது வாழ்விலும், மத வாழ்க்கையிலும் சரி குறுகிய எண்ணங்கள், மனப்பான்மைகள் அவரிடம் கிஞ்சித்தும் இருந்ததில்லை. தன்னிடம் அப்படி இருக்க அவர் அனுமதித்ததுமில்லை.

இக்பாலுக்கு முன்னுள்ள உருதுக் கவிஞர்கள் சகலரும் நமது பாரதி காலத்து மரபுக் கவிஞர்களைப் போல, பெண்ணையும், விண்ணையும், மலரையும், தென்றலையும், சூரியனையும், சந்திரனையும் பாடிக் கொண்டிருந்தனர் தமது கவிதைக்குக் கவிப் பொருளாக இவைகளை மட்டுமே பயன்படுத்திக் கொண்டிருந்தனர்.

பாரதியைப் போல, இக்பால் மகாகவியும் பாமர மக்களைப் பாடினான்; சுரண்டப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட மனிதனங்களைப் பற்றி கவிப் பொருள் செய்தான்

'ஆகாவென்று எழுந்தது பார் யுகப் புரட்சி!' என அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் ரஷ்யாவில் ஏற்பட்ட அந்த மாபெரும் சோவியத் புரட்சிபற்றி முதன் முதலில் இனங் கண்டு பாடியவன் — கவிக்குரல் எழுப்பியவன் — பாரதி தமிழ்க் கவிஞனாக இருந்த போதிலும் கூட, உலகப் பிறழ்வைப்பற்றி வெகு தீர்க்கதரிசனத்துடன் மிகக் கூர்மையாக இனங் கண்டான், அக் கவிஞன்.

இந்தப் புரட்சி பற்றிச் சரியான கணிப்பீட்டுடன் இனங் கண்டு பாடிய இந்தியக் கவிஞர்கள் வெகு சிலரே. அவர்களுள் மகாகவிஞன் அல்லாமா இக்பாலும் ஒருவர்.

மகா கவிஞர்கள் ஒரு சகாப்தத்தின் தீர்மானமான குரலை ஒலிப்பவர்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. தீர்க்கதரிசனத்துடன் மனுக்குலத்துக்கு இச் சோவியத் புரட்சிபற்றி எடுத்துக் கூறினர்.

கம்பீரமான வார்த்தைப் பிரயோகங்களும் உலக அன்புத் தத்துவமும் மானுட மதிப்பின் மீது அசையாத பக்தியும் உழைக்கும் வர்க்கத்தின் மீது ஆழமான நம்பிக்கையும் கொண்ட கவிஞர், மனிதன் மீதும் மனிதன் செயல்கள் மீதும் எதிர்கால நம்பிக்கை கொண்டிருந்தார்.

அவருடைய கவிதை மொழி இது:

மன்தா! நீ ராஜாளிப் பறவை. ஓய்வறியாப் போராட்டத்தில் மேலே..... மேலே..... முன்னேறிச் செல்!


*With the Compliments*

*of*

**ARASAN PRINTERS**

30, HYDE PARK CORNER,
COLOMBO 2.

*Telephone :* 26482 *Telegrams :* "ARASPRINT"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடவைகள்
தயாரித்த உடைகள்
சாய்ப்புச் சமான்களுக்கு

JAS

# தீவம்

* * *

தொலைபேசி: 7423

14, மின்சார நிலைய வீதி,
புதிய சந்தை, யாழ்ப்பாணம்.

# ரோரா

32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7651

விவசாய கிருமிநாசினிகள்
விவசாய கூலி கொல்லிகள்
விவசாய உர வகைகள்

The RORA Ltd.

கிளைகள்:

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சுண்டிக்குளம் சந்தி, பரந்தன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SIVAYOGA JEWELLERS
JEWELLERS & GEMMERCHANTS
54, Sea Street, COLOMBO-11

உறுதிக்கும், உத்தரவாதத்திற்கும்
நேர்மையான ஸ்தாபனம்

சிவயோக நகை மாளிகை

ஓடர் நகைகள் குறித்த நேரத்தில்
சிறந்த முறையில் செய்பவர்கள்

சிவயோக நகை மாளிகை
54, செட்டியார் தெரு,
கொழும்பு - 11

# இலங்கையில் வெற்றிகரமான ஒரு வணிகரீதிச் சஞ்சிகைக்கான சாத்தியக் கூறுகள்

— எஸ். எம். ஜே. பைஸ்தீன்

இலங்கையில் நாளிதழ்களின் வார வெளியீடுகளுக்கு அடுத்த படியாகத் தமிழ்வாசகர்கள் குமுதம், விகடன், தினமணிக் கதிர் (கல்கி வெளியீட்டாளர்களாலேயே நிறுத்தப்பெற்றுள்ளது) ஆகிய தமிழ்நாட்டு வார இதழ்களையே அதிகமாக வாசிக்கின்றனர். இது இன்றைய உண்மையான நிலை. கசப்பானதாயினும் ஏற்றுக்கொள்வது இன்றியமையாதது.

மேற்குறித்த இதழ்கள் இலங்கை வாசகர்களின் ரசனையைக் கொச்சைப்படுத்துவனவாயினும், உள்நாட்டுச் சஞ்சிகை வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிப்பனவாயினும் அவற்றின் வரத்தைக் கட்டுப்படுத்த மேற்கொண்டமுயற்சிகள் தோல்வி கண்டுவிட்டன. தரமான இலக்கிய ரசனையை வளர்க்க உதவக் கூடியன என்று கருதப்பெறும் சிறிய சஞ்சிகைகள் முழுமுற்றுக வாசகர்களின் வட்டத்தைவிட்டு விலகிச் சென்றமைபே இதனுடேற்பட்ட முக்கிய விளைவாகும். இவற்றின் ஒரு சில நூற்றிதழ்களின் வரத்து அருகிப்போக ஏனையவை கணிசமான அளவு புழங்கிக்கொண்டே உள்ளன. கட்டுப்பாட்டின்மூலம் தவிர்க்கத் துணிந்தவை உள்நாட்டிலேயே தடையின்றி விகவ ரூபமெடுக்க வழி பிறந்தமை முதன்மையான விளைவாக அமைந்தது.

எனவே தென்னிந்திய சஞ்சிகைகளைத் தடுத்து உள்நாட்டு சஞ்சிகைகளை வளர்க்கும் எடுகோளிலுள்ள வலுவிழப்பை முதற்கண் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவற்றுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய வகையில் எமது சஞ்சிகைகள் மேலெழக் கூடிய வழிவகைகளை ஆராய வேண்டும். தென்னிந்திய சஞ்சிகைகளுக்கான கட்டுப்பாட்டை பூரணமாகத் தளர்ந்து கட்டில்லாத ஒரு பாய்ச்சலுக்குரிய களமும் அமைந்து வருவதை நாம் அவதானத்துடன் காண வேண்டும்.

எனவேதான் இலங்கையில் வணிகரீதியான சஞ்சிகைகளின் நிலைபேற்றை ஆழமாகச் சிந்திக்க நேருகிறது. இவ்வாறான சஞ்சிகை ஒன்றையாவது வெளியிடக்கூடிய வசதிகள் பத்திரிகை நிறுவனங்களுக்கே உள்ளன. வணிக சஞ்சிகையின் வெற்றிக்கு அத்தியாவசியமான ஒரு தேவைகள் உரிய காலத்தில் வெளியிடுவதும், அதனைச் சந்தைப்படுத்தலுமாகும். இவ்விரண்டு தேவைகளையும் பத்திரிகை நிறுவனங்கள் நிறைவேற்றுகின்றன.

தற்போதைய சூழலில் பத்திரிகை நிறுவனங்கள் சஞ்சிகை வெளியீட்டைப் புறம்பாகச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கலாகாது. அது விரும்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கதாயினும் சாத்தியபூர்வமானதெனவியலாது. தற்போதைய வாரவெளியீடுகள் சஞ்சிகை வடிவம் பெறுவதே நடைமுறைக்கேற்ற மாற்றமாகும். விலையளவால் வாரவெளியீடுகள் மிகவும் மலிவானவை. எனவே ஒரு நியாயமான விலையில் இவை சஞ்சிகைகளாக வாசகரை எட்டலாம். தென்னிந்திய சஞ்சிகைகளின் விலை ஒப்பீட்டளவில் இது மிகவும் சாதகமான ஒரு காரணியாக அமையும். பத்திரிகை நிறுவனமொன்று சஞ்சிகை வெளியீட்டுத்துறையில் ஈடுபடுவதற்கு ('தினமணி' தினசரியையும் வெளியிடும்) 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' நிறுவனத்தின் 'தினமணிக்கதி'ரை இங்கு சுட்டிக் காட்டலாம்.

தினசரியின் வாரவெளியீட்டுக்கும், ஒரு வாரசஞ்சிகைக்கும் பண்புகளில் அதிக வேறுபாடுகள் இல்லை. தினசரியின் வாரவெளியீடு மூந்தின தினத்தினதும். அன்றையத் தினத்தினதும் செய்திகளையும் சமர்ப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தமே முக்கிய ஒரு வேறுபாடாகும்.

ஒரு வாரசஞ்சிகையின் பரப்பில் நடப்பு நிலவரங்களை ஒட்டிய பிரதான தலையங்கம், சில உபதலையங்கங்கள், வாரத்தின் பிரதான செய்திக்குறிப்புக்கள், கேலிச்சித்திரங்கள் என்பன ஒரு குறிப்பிடத்தக்க இடத்தை எடுக்கின்றன. அடுத்து அவ்வாரத்துக்குரிய சினிமா, நாடக, இசை, நடன நிகழ்ச்சி விவரங்களும், விமரிசனங்களும் இடம் பெறுகின்றன.

ஏனைய சஞ்சிகைகளிலிருந்து அணுக்கங்கள் முக்கியமான ஒரு கூறாகும். டைம், நியூஸ்வீக், பஞ்ச், டிட்பிட்ஸ் போன்ற சஞ்சிகைகள் இதற்குத் துணை வகுக்கின்றன. பிறமொழி நூல்களின் தொடர்ச்சியான தமிழாக்கத்தையும் இதனுடன் சேர்த்துக் கூறலாம்.

சினிமாப்பகுதியே இவ்வார சஞ்சிகைகளின் ஒரு பிரதான அம்சமாகும் தென்னிந்திய சினிமா பற்றிய விவரச் சேகரிப்புக்கு இலங்கையில் வாய்ப்புக்கள் மிக அரியன என்று கூறியலாது. மேலும் இலங்கையின் சினிமாத்தயாரிப்பில் சர்வதேச ரீதியான தொடர்புகள் கூடியுள்ளன. கூட்டுத்தயாரிப்புக்கள், கலைஞர் பரிமாற்றங்கள் பல சுவையான செய்திகளுக்கு வாய்ப்பளிக்கின்றன.

மேற்குறித்த அம்சங்கள் (கணிசமான விளம்பரப் பக்கங்களுடன்) சஞ்சிகையின் பெரும் பங்கை அடைத்துவிடுகின்றன. சிறு கதைகளும், தொடர் கதைகளும் எஞ்சி இடம்பெறுவன. எனவே வார வெளியீடுகள் சஞ்சிகைப் பண்புகளுடன் தமமை இயைபுபடுத்திக்கொள்வது அதிக சிரமத்துக்குரியதன்று.

தென்னிந்திய சஞ்சிகைகளுக்கு இணையான பொறிநுட்ப வசதிகள் அடுத்து எழுப்பப்படக் கூடிய ஒரு கேள்வியாகும். இங்கு தற்போது வெளியாகின்ற இரு தமிழ்ச்சஞ்சிகைகளைச் சுட்டிக் காட்டல் பொருந்தும். சோவியத் நாடு, பெரருளியல் நோக்கு ஆகிய இவ்விரு சஞ்சிகைகளதும் புறக்கவர்ச்சிப் பாங்கு நோக்கற்பாலது. தமிழ் வெளியீட்டுத்துறையுடன் அத்துணை தொடர்பில்லாத நிறுவனங்களே இவற்றை அச்சிட்டுத் தருகின்றன. பார்வையால் இவற்றை உள்நாட்டுச் சஞ்சிகைகள் என நம்ப முடியாத அளவுக்கு உயர்தரமான பதிப்புக்கள். மேலும் ஒரு சில நிமிடங்களில்' லட்சக்கணக்கான பிரதிகளை வெளியிடக் கூடிய சாதன வசதிகள் தாமும் இலங்கையிலுள்ளன.



இலங்கையிற் சஞ்சிகைகளின் வளர்ச்சியைப்பற்றிப் பேசும் போது பெரிய (பத்திரிகை) நிறுவனங்கள் சஞ்சிகைகளைத் 'தத்து' எடுத்து நடத்துவதும் குறிப்பிடத்தக்கதாகும். ஏற்கெனவே இதற்கு ஒரு முன்மாதிரியும் இலங்கைப் பத்திரிகைத் துறையிலுண்டு. தமிழ்நாட்டிற் கணிசமான விற்பனையுள்ள 'கல்கண்டை'க் 'குமுத'மும், 'துக்ளக்'கை 'ஆனந்த விகட'னும் தத்தெடுத்து நடத்துவதை இங்கு எடுத்துக் காட்டலாம். இவ்விரு சஞ்சிகைகளும் அவற்றின் ஆசிரியர்களது தனித்துவங்களைக் காட்டியே வெற்றி பெற்றன.

வணிக சஞ்சிகைகளாற் பக்க விளைவாகத் தமிழ் இலக்கியமும் பயன் பெற்றே வருகிறது. அவற்றின் நச்சுத்தன்மைகள் ஒடுங்கிச் சமுதாயத்துக்குப் பூரண நற்பயன் விளையத்தக்க வழிவகைகளை உண்டாக்கப்பாடுபடும் அதேவேளையில், வணிக சஞ்சிகைகளினால் பெறக்கூடிய பயன்களையும் உய்த்துக்கொள்ளவே வேண்டும். இன்றையத் தேவை வணிக சஞ்சிகைகளினின்று வாசகர்களை 'மீட்பர்கள்' மட்டும் அல்லர்.

புதுமை விரும்பும் நங்கையரே
உங்கள் இயற்கை அழகை மேலும் அழகுபடுத்த

நவீன வேலைப்பாடுள்ள
தங்க, வைர நகைகளை
அணிந்து கொள்ளுங்கள்.

விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன்
நகைகளைப் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

அபிராமி ஜுவலர்ஸ்

387, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று கதைகள்

— சாந்தன்

## (1) ஸீ - அனிமோன்

மீன் கரட்சிச்சாலை கனவுலகமாயிருந்தது மங்கிய வெளிச்சம் மிக மங்கிய வெளிச்சம் — கசிந்தபடி. மூச்சு விட்டுக்கொண்டு கடலினடியில் நடக்க முடிந்ததுபோல உணர்ந்தான் குளிரூட்டியிருந்தார்கள். ஆளுயரத்திற்குப் பென்னம் பெரிய கண்ணாடித்தொட்டிகள். கற்பனை பண்ணக்கூடப் பார்த்திருக்க முடியாத அழகுகளும் விசித்திரங்களும் விடாமல் சங்கிலித் தொடராய்க் குமிழூதும் ஏரேட்டர்கள்.

வளைந்த பாதைகளில் நடந்து போக, ஒரு தொங்கலில் மற்ற நீர்வாழ் ஐந்துக்களும் இருந்தன: சிங்க இறால். நீர்ப்பாம்பு, நட்சத்திரமீன், அதன் உறவினர்கள்... ஸீ—அனிமோனும் இருந்தது. ஆதிப்படைப்பு, ஆயிரங் கரங்கள் சூழப்பட்ட ஒரே வாயில் உள்ள உடம்பு, அசைய முடியாது சதைத்துண்டமாய்—சதை என்று அதன் முழு அர்த்தத்தில் சொல்ல முடியாவிட்டாலும் — ஒரே இடத்தில் ஒட்டிக்கொள்கிற உடம்பு.

இங்கே, தொட்டிக்குள் ஒரு கல்லில் ஒட்டிக்கொண்டு, தன் கரங்களை அசைத்துக்கொண்டிருந்தது. முன்னாலுங் கற்கள்.

''இதுகள் செத்தாப்பிறகு, இப்பிடித்தான் கல்லாகி விடும்...'' என்றான் நண்பன்.

''இல்லை; அது கோறல்ஸ்தான் கல்லை உண்டாக்கிறது ...

இதுகள் கல் ஆகிறதில்லை.....!'' என்றான் இவன்.

''இல்லை, நடா .. ஸீ அனிமோனும் கல்லாகும் ''

''எவ்வளவு பந்தயம்? கல்லாகாது ''

கூட வந்த புதிய நண்பர் இருவரையும் பார்த்தார்.

வெளியே வந்து, கடற்சிங்கத்தைப் பார்க்கப்போனபோது இந்த விஷயத்தில் நண்பனுக்குச் சவால் வட்டிருக்கலாமா என்று பட்டது. தான், புகுமுகவகுப்பில் பண்ணிய நட்டாமுட்டித் தனங்களால் வழியை மாற்றிக்கொண்டவன். அவன் பல்கலைக்கழகத்தில் கொஞ்சமாவது அதிகம் பிராணியியல் படித்திருப்பான். என்றாலும், ஆய்வு கூடத்தில் இருந்த — போத்தலில் அல்கஹோல் வற்றியதால் சுருங்கி மறைந்த — ஸ்பெஸிமன் நினைவில் கல்லாக நின்றது.

இப்போது நினைக்கிறபோது, என்னதானிருந்தாலும், தான் அவ்வளவு மூர்த்தண்யமாக மறுத்திருக்கக்கூடாது என்றும் தங்களிடையே ஏற்பட்ட பிரிவு அங்கே முளைவிட்டிருக்கக்கூடும் என்றும் படுகிறது, நடாவுக்கு.



## (2) அலுமார்

சீனிச்சரை சுற்றி வந்த கடதாசி. எடுத்து விரித்துப் பார்த்தான். ஏதோ ஒரு பள்ளிக்கூடத்தின் பரீட்சைத்தாள் போலிருந்தது. சமயபாடம். நாலாம் வகுப்பு. பள்ளிக்கூடத்தின் பெயர் இருந்த இடம் கிழிந்து போக, மூன்றாந் தவணை என்பது பாதி தெரிந்தது. பெயர் என்றிருந்த இடத்தில், க. சிவசுதன் என்று குழந்தை எழுத்துக்கள். வலு அக்கறை எடுத்து எழுதப் பட்டவை.

ஐந்து வயது முடிய முதலாம் வகுப்பிற் சேர்ந்திருந்தாலும், இதை எழுதியபோது அந்தப் பிள்ளைக்குக் கிட்டத்தட்ட ஒன்பது வயதிருந்திருக்கும். ஒன்பது வயதில் ஒரு பிள்ளை எழுதிய பரீட்சையின் விடைத்தாள் ...

பெயருக்குப் பக்கத்தில் சிவப்பு வட்டத்திற்குள் ஒரு சிவப்பு முப்பது முழிசிக்கொண்டிருந்தது. கேள்வித்தாளிலேயே விடையும் எழுத வேண்டும். அச்சடித்த கேள்விகள். அருகில் விடை எழுத இடைவெளி. சுருக்கங்களை இழுத்துவிட்டு மேலோட்டமாகப் பார்த்தான். சரிகளிலும் அதிகமான பிழை அடையாளங்கள்.

முதலாங் கேள்வி, தேவாரம். 'தோடுடைய செவிய'னை சிவசுதன் சரியாக எழுதியிருந்தான். பத்து மாக்ஸ். பிறகு, அநேகமாக எல்லாம் ஒரு சொல் விடைகளாக இருந்தன — கடைசிக் கேள்வியைவிட. அதில் ,திருக்கோவிலில் செய்யத்தகாத ஐந்து குற்றங்களை எழுதும்படி கேட்டு, கீழே ஐந்துவரி விட்டிருந்தார்கள். 'கதைத்தல்' 'துப்புதல்' என்று இரண்டு சரி. மற்ற மூன்றும் வெறுமை.

இடையில் ஓரிடத்தில் 'அலுமார்' என்றெழுதி, அந்தப்பிள்ளை பிழை வாங்கியிருந்தது. கேள்வியைப் பார்த்தபோது — 'கீழ்க் காணுஞ் சொற்களுக்குப் பொருள் தருக'. அந்தணர் — பிராமணர்; சரி.

அடுத்தது, அமரர் — அதற்குத் தான் அலுமார். அமரருக்கும் அலுமாருக்கும் என்ன ஒற்றுமை அந்த மனதில் பட்டிருக்கும்?

அநுமாரை 'அலுமார்' என்றெழுதிய அந்தப்பிஞ்சை ஒரு தரம் பார்த்துக் கொஞ்ச, அவன் ஆவல் கொண்டான்.

## (3) சூனியம்

''உது எங்கை மேளங் கேக்குது?''

''மருதன் செத்துப் போனான்.....''

''எந்த மருதன்? அந்த....''

''ஓமோம்'' அவன்தான் — சூனியக்காரன்''

''அப்பாடி, நல்லது; ஊருக்கு இனி விடியும்''

''என்னடா, உனக்கும் இதுகளிலை நம்பிக்கையிருக்கா?''

''எனக்கில்லை; ஆனா, ஊருக்கு இருக்கே.....''

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MOD எங்கும் இதே பேச்சு

சிகை அலங்காரத்திலும் MOD

வேண்டிய பாஷன்களில்
உங்கள் முடிகளை வெட்டி அழகுபடுத்திட
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

சுத்தமான கவனிப்பு
பண்பான உபசரிப்பு
அனுபவம், கைத்திறன் உள்ள
கலைஞர்களின் சிறந்த சேவை

இவை யாவற்றிற்கும்
ஈழத்திலேயே தலை சிறந்த ஸ்தாபனம்

Oriental Saloon

முதலாம் குறுக்குத்தெரு, கொழும்பு - 11

சுத்தமான நல்லெண்ணெய்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# பானையும் சட்டியும்

ஏ. ஜே. கனகரட்ணா

சில மாதங்களுக்கு முன்னர் 'குடும்ப வாழ்க்கை' என்ற ஆங்கிலப் படம் யாழ்ப்பாணத்தில் திரையிடப்பட்டது சிலருக்கு நினைவிருக்கலாம்.

விவரணப்படப் பாணியிலே அமைந்த அத்திரைப்படம் ஓர் இளம் பெண்ணைப் பற்றியது. நடுத்தர வர்க்கக் குடும்பம். பெற்றோர் வசதி படைத்தவர்கள். மகளுக்கு வேண்டிய சகல வசதிகளையும் கொடுக்க அவர்கள் தயங்கவில்லை. ஆனால் அவளுக்கு வேண்டிய அன்பை அவர்களால் கொடுக்க முடியவில்லை. இளந் தலைமுறையைச் சேர்ந்த அவளின் உள்ளத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவளுக்கு மனநோய் பீடித்திருக்கிறது எனத் தீர்மானித்து பெற்றோர் அவளை உளவியல் மருத்துவரிடம் காண்பிக்கின்றனர். இம் மருத்துவர்களுள் ஒருவர் மட்டும்தான் அவளை உண்மையில் புரிந்துகொள்கிறார். மருந்துகள் எவற்றையும் பாவியாது பெற்றோருடனும் அவளுடனும் பல தடவைகள் உரையாடியதிலிருந்து அவருக்கு உண்மை நிலை புரிந்துவிடுகிறது. ஆனால் அவரால் பெற்றோரை நம்பவைக்க முடியவில்லை; அவர்கள் வேறு உளவியல் மருத்துவரிடம் மகளைக் காண்பிக்கின்றனர். மருந்துகள் கொடுக்கப்படுகின்றன, ஊசிகள் ஏற்றப்படுகின்றன. ஈற்றிலே 'பைத்தியம்' என நீதிமன்றம் தீர்ப்பளிக்க, அந்த இளம் பெண் 'விசர் ஆஸ்பத்திரி'யில் அடைக்கப்படுகிறாள்; உளவியல் மருத்துவம் கற்கும் மாணவர்களுக்கு காட்சிப் பொருளாகின்றாள். இதற்கிடையில் அவளை உண்மையில் புரிந்துகொண்ட ஒரே ஒரு உளவியல் மருத்துவர்க்கு 'சீட்டுக் கிழிக்கப்பட்டு' விட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த இளம் பெண் செய்த ஒரே ஒரு 'குற்றம்' ஆதிக்கமுற்றிருந்த நடுத்தர வர்க்கத்தின் வாழ்க்கை முறைகளுக்கும் விழுமியங்களுக்கும் இணங்கிப் போகாததுதான். குற்றம் குற்றமே என நெற்றிக்கண் திறந்து, அவளைச் சிறைப்படுத்துவதற்கு உறுதுணையாக நின்றது நடுத்தர வர்க்கத்தின் பாதுகாவலனை உளவியல் மருத்துவமே. இவர்களுடைய நோக்கில் 'இணங்கிப் போகாமை' தண்டனைக்குரிய ஒன்றே.

சோவியத் ரஷ்யாவிலே, மாறுபட்ட கருத்துக்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர்களை 'மைத்தியக் காரர்' என முத்திரை குத்தி 'விசர் ஆஸ்பத்திரிகளில்' அடைக் கின்றார்கள், அங்கு உளவியல் மருத்துவம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு அரசியல் ஆயுத மாக பயன்படுத்தப்படுகின்றது என மேற்கத்திய பத்திரிகைகள் ஒப்பாரி வைக்கும் போது, 'குடும்ப வாழ்க்கை' என்ற ஆங் கிலத் திரைப்படம் தான் நினை விற்கு வருகின்றது.

சோற்றுப்பானை கரிச்சட்டி யைப் பார்த்து நகைத்த கதை தான்.

'உளவியல் மருத்துவரை நம்பலாமா?' என்ற தலைப்பில் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆர்தர் கேஸ்லர் 'என்கவுன்டர்' சஞ்சிகையில் கட்டுரை ஒன்றை வரைந்தார். உறுதியான உள வியல் அடித்தளம் இல்லாத தனால், உளவியல் மருத்துவர் திடமாகக் காலூன்ற முடியாது, யோகியைப் போன்று, அந்தரத் தில் சஞ்சரிக்கின்றனர் என அவர் குறிப்பிட்டிருந்தார். இதற்கு எடுத்துக்காட்டாக, ஒரே நோயாளி பல்வேறு உளவியல் மருத்துவர்களால் பல்வேறு, முரண்பட்ட, நோய்வகைப்பாடு களுக்குள் அடக்கப்படுவார் என அவர் சுட்டிக்காட்டினார். ஆய் வுக் கூடங்களில் பிறைப்படுத் தப்பட்டிருக்கும் எலிகளின் நடத்தையை மட்டும் அவதா னிப்பதை விடுத்து, மனித மனத்தைப் பற்றிய உண்மை யான விஞ்ஞானத்துறையாக உளவியல் மலர வேண்டுமென அவர் அக் கட்டுரையில் வலி யுறுத்தியிருந்தார்.

1973 - ல் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு மேற்கூறப்பட்ட கருத்துக்களை அரண் செய்கின்றன. ஸ்ரான் போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் கிலர் உளவியல் மருத்துவமனைகள் சிலவற்றிற்குச் சென்று தமது செவிப்பறைகளில் குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன என முறையிட்டனர். வேறு எந்தப் பொய்த் தகவல்களையும் அவர்கள் கொடுக்கவில்லை (தமது பெயர்களைத் தவிர) 'பிளவுண்ட ஆளுமை' என்ற மன நோயால் அவர்கள் பீடிக்கப்பட்டிருப்பதா கக் கூறி, 'வார்ட்'டில் அவர் களைச் சேர்த்துவிட்டார்கள் அங் கிருந்த உளவியல் மருத்துவர் கள். சராசரி 19 நாட்கள் வரை மருத்துவமனைகளில் தங்கியிருந்த பின்பு, நோய் தணிந்துவிட்டதென அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இவர்கள் மருத்துவமனைகளில் தங்கியிருந்த பொழுது செய்தவை யாவும் 'பைத்தியம்' என அங்கு கடமை யாற்றியவர்களால் கருதப்பட் டன. (ஆராய்ச்சி நோக்கங் களுக்காக ஆராய்ச்சியாளர் குறிப்புகள் வரைவது உட்பட). இதில் ஆக வேடிக்கை என்ன வெனின், உளவியல் மருத்துவர் ஏமாளிகளாக இருந்தபோதிலும் 'பைத்தியங்கள்' என ஏற்கெ னவே அங்கு அனுமதிக்கப்பட் டிருந்தவர்களுக்கு உண்மையைக் கண்டுபிடிக்க அதிக நேரம் எடுக்க வில்லை. 'உங்களுக்கு பைத்தியம் இல்லை. நீங்கள் பத்திரிகையா ளர் அல்லது பேராசிரியர்; மருத்துவமனை இயங்கும் முறை யைக் கண்காணிக்க வந்திருக் கின்றீர்கள்' என 'அசல் பைத் தியங்கள்' பலர் சட்டெனக் கூறினார்களாம்! இந்த ஆராய்ச் சியின் போது இன்னொரு சுவை யான சம்பவமும் நிகழ்ந்தது. 'இந்தப் பருப்பு எங்களிட்டை வேகாது' என 'மார்தட்டிய' உளவியல் மருத்துவமனை ஒன்று (போலி நோயாளிகளை அங்கு அனுப்பப் போவதாக ஆராய்ச் சிக் குழுத் தலைவர் எச்சரித்தி



ருந்தார்) அங்கு அனுமதி கோரிய 193 நோயாளிகளில் 41 பேர் போலிகள் — அதாவது இந்த ஆராய்ச்சிக் குழுவினால் வேண்டுமென்றே அனுப்பப்பட்ட போலி நோயாளிகள் — எனக் கூறியதாம். உண்மையில் ஆராய்ச்சிக் குழு ஒரு போலி நோயாளியைத்தானும் அங்கு அனுப்பிவைக்கவில்லை!

இத்தகைய தலைகீழான நிலையை ஏற்கெனவே ஆர். டி. லெயிங் தனது நூல்கள் மூலம் 'புட்டுக்' காட்டியிருந்தார்.

ரொனல்ட் லெயிங் ஸ்கொத் லாந்தின் தலைநகரான கிலாஸ்க் கோவில் 1927-ல் பிறந்தார். மருத்துவ கலாநிதிப் பட்டத்தை 1951-ல் பெற்று, 1953 வரை பிரிட்டிஷ் இராணுவத்தில் உள வியல் மருத்துவராக கடமை யாற்றினார். பின்னர் கிலா ஸ்க்கோ பல்கலைக்கழகத்தில் உளவியல் மருத்துவத்துறை விரி வுரையாளராய்ச் சிறிதுகாலம் சேவையாற்றிவிட்டு, லண்டனி லுள்ள ரவிஸ்டொக் கிளினிக்கில் 1961-ம் ஆண்டுவரை கடமை யாற்றினார். நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் தென் இலங்கையிலுள்ள பௌத்த விகாரையில் லெயிங் சில மாதங்கள் சங்கி கீழ்த்தேச தியான முறைகளில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. 'பிளவுண்ட சுயம்', 'அனுபவத் தின் அரசியல்', 'குடும்பத்தின் அரசியல்', 'சித்தசுயாதீனம், பைத்தியம், குடும்பம்', 'நியாய புத்தியும் பலாத்காரமும்' போன்ற குறிப்பிடத்தக்க நூல் களை அவர் வெளியிட்டுள்ளார்.

'நாம் எல்லோரும் கொலை யாளிகளும் விபச்சாரிகளுமே — நாம் எந்தப் பண்பாட்டை, சமூகத்தை, வர்க்கத்தை, நாட் டைச் சேர்ந்தவர்களாயிருந்தா லென்ன; சாதாரணமானவர் கள், ஒழுக்கமுடையவர்கள், முதிர்ந்தவர்கள் என நாம் எம் மைக் கருதிக்கொண்டாலென்ன' இவ்வாறு லெயிங் 'அனுபவத் தின் அரசியல்' என்ற நூலின் முகவுரையில் (1967) குறிப்பிட் டிருந்தார். மன நோயைப்பற்றி இவர் வெளியிட்டுள்ள கருத்துக் கள் 'வைதீக' உளவியல் மருத்து வரை மேலும் திடுக்குறச் செய் தன. மன நோய் என வர்ணிக் கப்படுவது மூளையோடு அல்ல உண்மையில் சமூகம், அரசியல் பாற்பட்டது என்பதே லெயிங் கின் வாதம்: இங்கு அரசியல் என்ற பதம் விரிந்த அர்த்தத் தில் பயன்படுத்தப்படுகின்றது (அதிகாரமும், அதன் கையாள லும்). இது முற்றிலும் உடன் பாடான கருத்தாகத் தோன்று விடினும், பெருமளவு உண்மை அதில் பொதிந்திருப்பதை மறுக்கமுடியாது.

அண்மையில் லெயிங் அமெ ரிக்க சஞ்சிகை 'நியூஸ்வீக்' கிற்கு பேட்டி ஒன்றை அளித்தார் (ஒக்டோபர் 2). அப்பொழுது கேள்வியொன்றுக்கு அவர் அளித்த விடை ஊன்றிக் கவ னிக்கத்தக்கது. அது வருமாறு:

**கே. மாறுபட்ட கருத்தாளர் களைத் தண்டிப்பதற்கு அல் லது சிறைப்படுத்துவதற்கு சோவியத் ஒன்றியத்தில் உள வியல் மருத்துவமனைகள் பயன் படுத்தப்படுகின்றனவாம். அதைப் பற்றி உங்கள் கருத்து?**

ப. ரஷ்ய ஆய்வறிவாளர்களுக்கு இந்தக் கொடுமைகளை இழைப்பதற்கு தமது ரஷ்ய சக பாடிகளை மேற்கு நாட்டு உளவி யல் மருத்துவர் கண்டிப்பது சற்று கடினம். ஏனெனில் மனநோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனக் கருதப்படுபவர்களுக்கு மேற்குல கில் வழக்கமாகக் கொடுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் உளவியல் மருத்துவப் பரிகாரத்தைதந்தான் ரஷ்யர் கொடுத்து வருகின்றனர். ரஷ்ய மருத்துவமனைகளில் நிகழ்த்தப்படும் கொடூரங்கள் — அவை இப்பொழுது அம்பலப்படுத்தப்பட்டுள்ளன — மேற்குலகின் அரச உளவியல் மருத்துவமனைகளில் வழக்கமாக நிகழ்த்தப்படும் கொடூரங்களே ஒத்தவையாய்த் தோன்றுகின்றன.

இதே பேட்டியில், தான் மாஸ்கோவிலோ, சீன ஆட்சியின் கீழோ வாழ விரும்பவில்லை எனலெயிங் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார். சமூக அநீதியும், தீமையும், கொடூரமும் நிறைந்த முதலாளித்துவ அமைப்பிலே வாழத்தான் விரும்புவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். இத்தகையவரே மேற்குலகின் ஆசாடபூதித்தனத்தைக் குத்திக் காட்டுகின்றார்.

மனித உரிமைகள் என்ற பார்வையில் 'கெடுபிடிப் போரை'த் தொடர்ந்து நிகழ்த்த விழையும் மேற்கத்திய உளவியல் மருத்துவர், முதலில் தமது மனச்சாட்சியைத் தொட்டுக் கேட்கட்டும். தர்மத்தைப் போன்று, உண்மையும் முதலில் தன்னகத்தே ஊற்றெடுக்க வேண்டும். ❋

## மழையே வந்தாய்

அங்கே முற்றத்தில் நின்ற
சிறு தென்னை மரத்தின் மேல்
மேலும் மேலும் மேலாகப்
பெய்கின்ற
பன்னீர்த் துளிகள்
பாயும் சுருக்கெழுத்து.

முகமூடி வெள்ளம்
நிலக் கூத்தன் தலைமீது
பலகாலும் செய்த
விளையாட்டே யாளலும்
புதுமோகம்.

தலைசாய்ந்த ஓலைக்குள்
தண்ணீர் விரல் விட்டுச்
சிறுபிள்ளைக் கூச்சங்கள்—
இடைவேளை:

எங்கள் குடிசை
நனைந்து பெருக்கெடுக்க,
தூரத்தே நின்று
பொங்கும் மழைத்துளியின்
பூரிப்பைப் பாட்டாக்கும்
"சத்தி" யங்க ளெல்லாம்
கற்பென்று பூரிக்கும்!

மழை பாயும் மண்ணில்
திரை மூட,
மறு நாட் கூத்துக்கு
ஒத்திகை — இடிமின்னல்.

சபா. ஜெயராசா

# தீ

மு. கனகராஜன்

1977 ஆகஸ்ட் 23.

எதை எப்படிச் சிந்திப்பதெனத் தெரியாமல் தடுமாறிப் போயிருந்தார் நாகேந்திரன். கண்கள் எரிந்தன. இரவெல்லாம் நித்திரையில்லாததால், நெஞ்சம் பதைத்தது நாடெல்லாம் நடப்பதையறிந்து.

நேற்றுக் காலையில்...

❋

நாகேந்திரன் தனது அலுவலகத்துக்குப் போய்க்கொண்டிருந்தார். தெருவெல்லாம் அல்லோலகல்லோலம். வழியிலிருந்த அரச அலுவலகங்களிலிருந்து தமிழ் ஊழியர்கள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். சிலரின் சேர்ட்டுகள் கிழிக்கப்பட்டிருந்தன. பலர் ஓடிக்கொண்டிருந்தார்கள். சில இடங்களில் இராணுவ ஜீப்களில் தமிழர்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள்.

நாகேந்திரன் தனது காரை விட்டிறங்கியபோது 'உய் உய்' எனச் சீழ்க்கையொலிகளுடன் காடைத்தனமான கூச்சல். அவர் தனது அறையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். பியோன்களும், சீற்றாழியர்களும் கூட்டங் கூட்டமாக நின்றனர். கேலியும் கிண்டலுமான வார்த்தைகள் எறியப்பட்டன.

'பற தெமலா தொட்ட பழயங்' சிலரின் சொற்கள் 'வீரத்தனமாக' அவரின் முதுகைத் தாக்கின. தனது கையிலிருந்த 'டொக்கியுமன்ட்பேக்'ஐ அவரின் கரம் நெரித்தது. ஒரு மேலதிகாரி என்ற வீதத்தில் தன்னைத் திட்டுவதையிட்டு அவர் பொருட்படுத்தப்போவதில்லை. ஆனால் 'பற தெமலா' என்ற மிக இழிந்த அவர்களின் 'தேச பக்த' — அப்படித்தான் நினைக்கிறார்கள் — வார்த்தைகளைக் கேட்கும்போது அவரின் ரத்தம் கொதித்தது. அவரின் நிர்வாகத் திறமைக்காகப் பல விழாக்களிலும், கூட்டங்களிலும் கிடைத்த பாராட்டுக்கள் அப்போது அசரீரியாக ஒலித்தன. தனது அறைக்கு முன்னால் வழமையாக இருக்கும் பியோனைக் காணவில்லை. கதிரையில் அமர்ந்தார். கருவேல முட்களும் அப்படிக் குத்தாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாபேரியன்ஸ்' உதைத்த போது மெத்தையிட்ட சுழல் கதிரை சுவரில் மோதிக் கவிழ்ந்தது. தனது 'ரை'யை வெடுக்கெனப் பிய்த்துக் கழற்றிய போது தன் பதவி நினைவிற்கு வந்தது.

'டாமிட்' 'ரை'யை உருவி எறிய அது குப்புறச் கருண்டது.

வெளியேறிய நாகேந்திரன் தன் காரை வெளியே எடுத்தான். அதன் பின் கண்ணாடியைக் கல் ஒன்று தாக்கிற்று. விசர் நாயொன்றின் கழுத்தை நெரிப்பதைப் போல அவரின் சப்பாத்துக் கால் 'எக்ஸலேட்டரை' நெரித்தது.

கொழும்புத் தெருக்களில் இப்படியொரு பதட்டத்தை அவர் 58 ஆகஸ்டிலும் கண்டதில்லை.

ஒரு வேட்டிக்காரர் புரட்டிப் புரட்டி உதைக்கப்பட்டார்.

இன்னொருவரைத் துரத்திக் கொண்டு ஒரு கூட்டம் ஓடிற்று,

அவசர அவசரமாகத் தமிழர்கள் கடைகளைப் பூட்டினர்கள்.

'அம்மா' என்றொரு அலறல் கேளினித்தது. நாகேந்திரன் வேகத்தைக் குறைத்து திரும்பிப் பார்த்தபோது கத்தியால் குத்தப்பட்டு வீழ்ந்த ஒரு தமிழ் இளைஞனைச் சில காடையர்கள் தாக்கினர்கள்.

ஒரு கடைக்கு பெட்ரோல் குண்டுவீசப்பட்டு அது தீக்கொண்டது.

கார் பார்லிமென்ட் வீதியில் திரும்பி காலி வீதியை நோக்கி விரையும்போது வாகன நெரிசல். நாகேந்திரன் தன் காரையும் சிறிது நிறுத்தினர். இடது புறம் நாடாளுமன்றக் கட்டிடம். அதோ சேர். பொன். அருணாசலத்தின் சிலை. தேசியத் தலைவர். என்றோ யாரோ சூட்டிய மாலை அவர் கழுத்தில் கருகிக் கிடந்தது. இத் தேசத்தில் முதன் முதலாக தொழிற் சங்கத்தைக் கட்டியெழுப்பிய தலைவர், ஒரு மூலையில்! சிலையாய்! இப்போது நாகேந்திரனின் பார நெஞ்சின் சுவாசம் வெளியேயும் கேட்டது.

கார் நகர்ந்தது. எதிரே ஓடிவரும் கடலலைகள். இந்து மகா சமுத்திரம். அது ஆகநீட்டி அழைக்கிறதா.....?

'நொன்சன்ஸ்' நாகேந்திரன் வாய்விட்டுச் சொல்லிக் கொண்டார். காலி வீதியில் கார் தெகிவளையை நோக்கி ஓடிற்று.

❖

கூரை முகட்டிலிருந்த புறுக்கள் படபடத்துப் பறக்கின்றன. தாக்கப்பட்ட அப்பாவிகளைப் போல.

மேசைமீதிருந்த கடிதத்தைக் காற்றுத் துரத்த அது நாகேந்திரனின் நெஞ்சைத் தழுவுகிறது.

மனைவியின் கடிதம்.

"பள்ளிக்கூட விடுமுறைக்காக திலகத்தையும் பிள்ளைகளையும் ஊருக்கனுப்பியது நல்லதுக் குத்தான்.

தீயணைக்கும் வண்டி கூவிக் கொண்டோடுகிறது.

நாகேந்திரன் கதிரையில் விழுகிறார். யோசிக்க முயல்கிறார்.

மேசைமீது அடுக்கப்பட்டிருந்த பைல்கள் கண்களை உறுத்துகின்றன; இதயத்தையும்தான்.

தேசிய ஒருமைப்பாட்டிற்காக அவர் செய்த பணிகள், வேலைகள். இன ஒற்றுமைக்கான அவரின் முன்முயற்சிகள், இன்னும் பலரின் கடிதங்கள், அறிக்கைகள்.....

எல்லாமே எருமை மாட்டில் கொட்டிய மழைதானா?

எங்கோ இருந்து ஓடிவந்த பல்லியொன்று பைலுக்கு மேலிருந்த சிறு பூச்சியைக் கௌவி மாறி மாறி இரண்டு தடவை அடிக்கிறது.

தூரத்தில் வெடிச் சத்தமொன்று கேட்கிறது;

வானொலி, செய்தியில் 'போராட்டமென்றால் போராட்டம், சமாதானமென்றால் சமாதானம்.....' என்று ஏதோ சொல்கிறது.

'ப்ளடி ஸ்டுபிட்னஸ்'

அந்த அலமாரியையே எரித்துச் சாம்பலாக்க வேண்டும் போலிருக்கிறது.

இரு சூட்கேஸ்களில் மிக மிக அத்தியாவசியமானவற்றை மட்டும் அடைத்தாகி விட்டது.

'எயர் சிலோனிட' மிருந்து எப்போது டெலிபோன் வருமோ? சீற் இல்லாமலும் போய்விடுமோ'

என்னவானாலும் இனி இங்கிருக்க முடியாது.

ஷெல்பிலிருந்த நூல்கள் அவரை வெறித்து நோக்குகின்றன?

சில சிங்களப் புத்தகங்கள் அவரைப் பார்த்துச் சிரிக்கின்றன.

அவர் மொழி பெயர்த்திருந்த பத்திரிகை, சஞ்சிகைக் கட்டிங்ஸ்கள் சந்தேகத்தோடு பார்க்கின்றன.

பத்திரிகைச் செய்தி சொல்கிறது அகதிகளைப்பற்றி.

சொந்த நாட்டிலேயே அகதியா.....?

'சே, எல்லாமே வீண், வீண்'

'மிலேச்சத்தனம்'

அவரின் உதடுகள் ஒரு சிகரட்டைக் கேட்டன. ஒன்றை எடுத்து உதடுகளில் பொருத்தி தீக்குச்சியைத் தட்டினர்.

'இந்தப் பைல்களும், மொழி பெயர்ப்புகளும், அறிக்கைகளும் எதற்கு? எரித்துவிட்டால் என்ன?..... ஆமாம்'

நெஞ்சு குமைகிறது,

பைல்களை ஆக்ரோஷத்தோடு இழுத்து தரையில் வீசுகிறார்.

இன்னொரு தீக்குச்சி சீறிற்று,

'டொக்..... டொக்..... டொக்.....'

கதவு தட்டப்படுகிறது.

'யார்... யாராயிருக்கும்... இந்த நேரத்தில்?'

'டொக் டொக்..... டொக் டொக்..... டொக்டொக்.....'

நாகேந்திரனுக்கு வேர்க்கிறது.

'மாத்தயா.....' யாரோ ஒருவனின் குரல்.

'யார் அவன்?'

'இப்போ என்ன செய்வது. என்ன செய்யலாம்'

'தொற அறின்ன...'

ஆறிலும் நூறிலும் அது தானே!

அவர் துணிந்துவிட்டார்.

கதவைத் திறந்தபோது.....

அவன் சிரித்துக்கொண்டே உள்ளே வருகிறான்.

சந்தியில் அவனை அடிக்கடி கண்டிருக்கிறார்; ஒரு நாளும் பேசியதில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவன் கேட்கிறான் சிங்கள மொழியில்:

'உங்களுக்கேதும் கரச்சல் இல்லையே? பயப்படாதீர்கள் ஐயா நானிருக்கிறேன். நீங்கள் எங்கும் போய்விடாதீர்கள். இந்தக் காடைப் பயல்களைத் தொலைக்க வேண்டும். எங்கே நோனா, பிள்ளைகளெல்லாம்?'

நாகேந்திரனுக்குப் புல்லரிக்கிறது.

'நான் என்ன மனிதன், எவ்வளவு படித்துத்தான் என்ன, கொஞ்ச நேரத்தில் என்ன செய்ய நினைத்தேன், நான் தவறு செய்யவிருந்தேனே.....'

அவர் ஒரு சிகரட்டை எடுத்து அவனுக்கு நீட்டுகிறார். அவரே அதைப் பற்ற வைத்தும் விடுகிறார்.

'ஓ... மனிதன்... மனிதன்...'

அவர் மனதில் ஒரு அமைதி ஏற்படுகிறது.

கீழே வீசிய பைல்களை எடுத்து ஒழுங்காக அடுக்கி வைக்கிறார்.

டெலிபோன் அவரை அழைக்கிறது.

'ஹலோ, நாகேந்திரன் ஹியர், ஓ எயர் சிலோன், ஹலோ கென்ஸல் தரிக்கற், இயஸ் இயஸ்.. ...'

அவன் போவதற்குத் திரும்புகிறான்.

அப்போது.....

திடுதிப்பென ஒரு கூட்டம் உள்ளே நுழைகிறது.

அவன் அந்தக் கூட்டத்தைப் பார்த்து –

'வெளியே போங்கோடா' என்றவாறு ஒருவனைப் பிடித்துத் தள்ளுகிறான்.

"நாங்கள் தமிழ் ரத்தத்தில் குளிக்கப் போகிறோம் நீ நியாயம் பேசுகிறாயா.....' கூட்டம் கர்ச்சிக்கிறது.

அவன் எதிர்க்கிறான்.

ஒரு பொல்லடி; அவன் தலையில் இரத்த ஊற்று;

கண்ணாடிகள் நொருங்குகின்றன, தளபாடங்கள் உடைகின்றன, சூறை! சூறை!

ஒரு காடையன் அவரின் அந்தப் பைல்களை இழுத்தெறிகிறான். ஒருவன் பெற்ரோல் ஊற்றுகிறான். ஒருவன் தீக்குச்சியைத் தட்டுகிறான்.

தீ மிலேச்சன்!

அவன் தலை இரத்தம் சொட்டச் சொட்ட தீயை அணைக்கப் போராடுகிறான்.

நாகேந்திரன் எங்கே? ★

✣

தொடர்ந்து மல்லிகையைப் படித்துவரும் தரமான இலக்கிய ரசிகர்களுக்குப் பிரதானமான பொறுப்பொன்றுண்டு. இந்த மண்ணில் காத்திரமான கலை, இலக்கிய, நாடக வளர்ச்சியை நீங்கள் மனதார வளர்த்தெடுக்க வேண்டுமென விரும்பினால் நமது நிறைகளை நண்பர்களுக்கு கூறுங்கள்; குறைகளை எமக்கு எழுதுங்கள்.





# ஒரு சாதாரணனின் பிரயாண அநுபவங்கள்

கே. எஸ். மணியம்

நீண்ட காலமாக எனது நண்பர்கள், உறவினர்கள் என்னை மலேஷியாவிற்கு அழைக்க எடுத்த முயற்சி சென்ற ஆனி மூன்றும் திகதியே நிறைவேறியது. மலேஷியா, சிங்கப்பூரில் தொண்ணூறு நாட்கள். அந்நாடுகளில் நான் சேகரித்திருந்த பல தகவல்கள் என் உள்ளத்தில் உருவமற்றவையாக இருந்தன. அவற்றிற்கு ஜீவகளையூட்ட சில நாட்களைப் பயன்படுத்த விரும்பினேன். மலேஷியாவில் எனக்கு இரண்டு வார்ங்கள் தங்கவே முதலில் அனுமதி கிடைத்தது, ஆனால் மேலும் அனுமதி பெற்று இரண்டு மாதங்கள் கூடுதலாகத் தங்கினேன். பயணத்தை ஆரம்பிக்கு முன், பரந்த மனத்துடனும் நோக்குடனும் செல்ல வேண்டுமென்று எண்ணிக் கொண்டேன். கண் காட்சிகள், உல்லாசப் பயணங்கள், தொழிற்சாலைகளில் நேரத்தைச் செலவிடுவதை விடப் பல இன மக்களுடனும் பழகி அவர்களது பழக்க வழக்கங்களை அறிப் பிராயங்களை அறிய வேண்டுமென்பதே என் பிரயாணத்தின் முக்கிய நோக்கமாகவிருந்தது. என் விருப்பமும் ஓரளவு நிறைவேறியது பல இன மக்களுடன் வீடுகளிலும் பிற இடங்களிலும் சந்தித்து மனம்விட்டு, பல உண்மைகள் புலனாகும்வகையில் நான் நடத்திய சம்பாஷணைகளின் அனுபவம் எதிர்பார்த்ததைவிட என் மனதை மிகவும் கவர்ந்திழுத்துத் தெம்பூட்டியது.

இலங்கையிலிருந்து புறப்பட்ட எமது விமானம் சுவாமி விமானத்தளத்தில் இறங்கியது; விமானம் தரையிறங்கும் நேரம், பணிப்பெண் உங்கள் கடிகாரங்களை மலேஷிய நேரப்படி ஏழு மணியில் வைத்துக் கொள்ளுங்கள் என்றதும் எல்லோரும் கடிகார முட்களை ஏழுக்கு நகர்த்திக் கொண்டோம். எல்லாத் தேசங்களையும், நகரங்களையும் போலவே சுபாங் விமானத்தளமின்சார ஜோதிமயமாகத் தோன்றியது. எடுப்பான தோரண விளக்குகளின் சிவப்பு ஒளியில் விமானத்தளம்மிதந்தது; தரையில் விமானம் இறங்கியதும் சம்பிரதாயமான சுகமான கலகலப்புத் தென்பட்டது; விமான நிலையத்தில் கடமையாற்றும் ஒவ்வொரு ஊழியரும் தங்கள் புகைப்படத்துடன் பெயரையும் வேலையையும் குறித்த அடையாள அட்டையை உடையில் அணிந்திருந்தனர். இதனால் புதியவர்கள் சிரமப்பட வேண்டிய தேவையேயில்லை, நம் நாட்டிலும் இம்முறை பின் பற்றப்படுமானால் பலருக்கு சௌகரியமாகவிருக்கும். சுங்க சோதனை அறையில் எவ்விதக் கேள்வியுமின்றித் துரிதகதியில் பிரயாணிகளைப் பரிசோதித்து அனுப்பினர்கள். அங்குள்ள அதிகாரி இரண்டு வாரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கும் அனுமதியைக் கொடுத்த போது நான் ஒரு மாதம் தங்க விரும்புவதாகக் கூறினேன். அவர் கோலாலம்பூரிலிருக்கும் அலுவலகத்தில் புதுப்பிக்கும்படி சொன்னார். வெளி மண்டபத்தில் சர்வதேச நேரத்தைக் காட்டும் பன்னிரண்டு நாட்டுக் கடிகாரங்கள் வைக்கப்பட்டிருந்தன. நடுவில் மலேஷிய நாட்டு நேரம் ஏழு மணியைக் காட்டியது.

என்னை வரவேற்க வந்த நண்பர் கந்தையா என் கரங்களை மகிழ்ச்சியுடன் பற்றிக்கொண்டார். அவரது இல்லம் விமான நிலையத்திலிருந்து நாற்பது மைல் தொலைவிலுள்ள சிறப்பான் பகுதியிலுள்ளது. விமான நிலையப் பூங்காவைத் தாண்டி சிறப்பான் சாலையில் நாம் வரும்போது, அதன் பரிணாமமும் தோற்றமும் மௌனமான சூழ்நிலையும் கவர்ச்சிகரமாக இருந்தன. வீதிப் போக்குவரத்தும் ஒரே வரிசையில் ஆறு கார்கள் போகவும், வரவும் வசதியாக அகலப்படுத்தப் பட்டுள்ளன. நகருக்குள் நாம் பிரவேசிக்கையில் சுற்றியிருந்த பெரிய கட்டிடங்களை அவர் பெருமையுடன் காட்டினார்.

முன்னறிவிப்பின்றியே ஒரு தோட்டத் தொழிலாளியின் இல்லம் சென்றேன். வெளி நாட்டிலிருந்து வந்திருப்பதாக அறிமுகப்படுத்தியதும் தொழிலாளியும் குடும்பத்தினரும் சந்தோஷ ஆரவாரத்துடன் என்னை வரவேற்றனர். இவ்வளவு மலர்ச்சியான வரவேற்பை நான் எதிர்பார்க்கவுமில்லை. எங்குமே எனக்குக் கிடைத்ததுமில்லை. சிறிய வீடாயினும் சகல வசதிகளுடனும், அழகாக அலங்கரித்து வைத்திருந்தனர் அவர்களிடம் ஒரு மோட்டார், தொலைக்காட்சி மற்றும் வீட்டிற்குத் தேவையான பொருட்கள் யாவுமிருந்ததைப் பார்த்த போது நம் மலைநாட்டுத் தோழர்களின் லயன்கள் கண்முன்னே தோன்றி மனதை அலைக்கழித்தது. நம் நாட்டில் வாழும் மத்தியதரக் குடும்பங்களின் அந்தஸ்தில் அங்குள்ள தொழிலாளர் வாழ்கின்றனர். இன்னும் அரை நூற்றாண்டுக் காலம் சென்றாலும் நம் நாட்டுத் தொழிலாளர் இவ்வளவு வசதிகளுடன் வாழ்வார்கள் என்பது நினைத்தே பார்க்க முடியாத காரியம்.

மலேஷியாவில் என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்றவர்களில் நண்பர் முத்தையா முதன்மையானர். அங்கு சென்றதும் அவரைக் காண விரும்புவதாக மறுதினமே எழுதினேன். மலேஷிய திராவிடர் கழகத்தின் கோலக்கிள்ளான் கிளையின் செயலாளரான நண்பர் முத்தையா, நான் அங்கு சென்ற சமயம் கழக உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தார். அன்று என் டயரியில் நான் கழகம் பற்றிக் குறித்த குறிப்பு:

'நண்பர் முத்தையாவும் மற்றும் கழக உறுப்பினரும் எனக்கு சிறப்பான விருந்தை இன்று அளித்துள்ளனர். எல்லோரும் நேசப்பான்மையில் புன்னகையைச் சிந்தி, தங்கள் அன்பை வெளிப்படுத்தியது என் வாழ்வில் என்றுமே மறக்க முடியாத ஓர் சம்பவமாகும். நண்பர் கழகம் பற்றிக் குறிப்பிட்ட சில கூற்றுக்கள் எனக்கு வியப்பை அளிக்கின்றன. அவற்றை நம் நாட்டிலும் அறியவேண்டிய அவசியத்தை உணர்ந்தாலும், இவர்கள் அவற்றை ஏற்பது எவ்வளவு சிரமம் என்பதையும் அறிகின்றேன். முத்தையா தன்னைப் பற்றிக் குறிப்பிடும்போது என் கடந்த பத்தாண்டு காலமாக சில பிரச்சினைகளால் பல தோல்விகளை நான் சந்தித்தாலும், என் முயற்சிகளினாலும், மன உறுதியாலும், ஆண்டவனின் கிருபையாலும் அவைகளைத் தாங்கிக் கொள்ளக் கூடிய இதயத்தைப் பெற்றுள்ளேன். எவ்விடர் வருவதாயினும் முயற்சிகளிலிருந்து பின்வாங்காத தைரியத்தை இக் கழகமே கொடுத்துள்ளது என்றார். கழகத் தோழர்கள் மூட நம்பிக்கைகளைக் களைதல், சாதி ஏற்றத் தாழ்வு முறைகளைக் கடுமையாக விமர்சித்தல், கலப்பு திருமணங்களை ஊக்குவித்தல், தெய்வ வழிபாட்டிலுள்ள மூட நம்பிக்கைகளை ஒழித்தல், தமிழ் மொழி வளர்ச்சியைப் பேணுதல், பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புதல் போன்ற பணிகளைச் செய்வதைத் தலையாய கடமையாகக் கொண்டுள்ளனர். இன்னும் பள்ளிப் பிள்ளைகளுக்குச் சீருடை வழங்கியும், இரத்ததானம் செய்தும், அறிவியல், பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், நன்னெறிகளில் விரிவான பணியைச் செய்து, மலேஷியாவில் நிலையான இடத்தைப் பெற்று ஒரு முற்போக்குக் கழகமாகத் திகழும் இக் கழகம், மேன்மேலும் வளர்ந்து மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்பதே என் அவா. அதுவே ஆண்டவன் சித்தமுமா கட்டும்'

மலேஷியாவின் எல்லையிலுள்ள ஜோகூர்பாரு நன்னடத்தைப் பாடசாலையைப் பார்வையிட்டு அங்கிருந்து சுங்கப் பரிசோதனையை முடித்துக்கொண்டு, ஏரியைத்தாண்டி சிங்கப்பூரினுள் நுழைந்த என்னை சிங்கை ஏர்லைன்ஸில் கடமையாற்றும் நண்பர் ஜெயராஜ் அன்புடன் வரவேற்றுப் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று காண்பித்தார்; சிங்கப்பூர் சுதந்திர நாடாக்கப்பட்டுள்ளதால், இங்கு வெளி நாட்டுப் பொருட்களை மலிவாகவும் தாராளமாகவும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. எங்கு நோக்கினும் நாற்பது ஐம்பது மாடிக் கட்டிடங்களே. புதிய வீதிகள் திறத்தலும், புதிய அடுக்கு மாடிகள் கட்டுதலும் தினசரி நடைபெறுகின்றன. சராசரி இரண்டு பேருக்கு ஒரு மோட்டார் வீதம் உண்டு. சீனம், தமிழ், மலாய், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளுக்கு இங்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. நாணயத்திலும் நான்கு மொழிகளும் பொறிக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூரில் என்னைக் கவர்ந்தவை ரைசர் பாம் தோட்டமும், சிற்ப வேலைப்பாடான காட்சிக் கூடம், பறவைகள் தோட்டம், செந்தோஸா தீவு ஆகியவையே. இவற்றோடு வீதி ஒழுங்கும். வீதிச் சுத்தம், நாட்டின் சட்டமும் அதைக் கடைப்பிடித்து வரும் மக்களின் பண்பும் என்னை மிகவும் கவர்ந்தன.

எனது மூன்றுவார சிங்கப்பூர் சுற்றுலாவை முடித்துக் கொண்டு மலேஷியா திரும்பினேன். அன்று நானும் மற்றும் நண்பர்களும் பத்துமலையை அடைந்ததும், அங்குள்ள அமைதியான சூழ்நிலை, புதிய ஓர் இடத்துக்கு வந்துவிட்டதைப் போன்ற உணர்வையளித்தது. மலேஷிய சுற்றுப் பயண மேம்பாட்டுக் கழகம் இருண்ட குகைக்குச் செல்வதற்கு ரயில் கார்களை ஏற்பாடு செய்துள்ளதால் பயணிகள் சிரமமின்றி போய்வருவதற்கு வசதியாக உள்ளது. இக் குகையிலுள்ள கலைக்கூடத்தில் கலையம்சம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த வண்ண ஓவியங்களும் சிலைகளுமிருப்பது இக் கோவிலின் சிறப்பம்சமாகும். கோவில்களில் திருப்பணி பூசை நடத்துவது மாத்திரமல்ல. அனைத்துக்கும் மேலான பணியாகக் கருதப்படும் கல்விப்பணி அதன் தலையாய பணியாகும் என்பதை மலேஷிய கோவில் நிர்வாகத்தினர் சமுதாயத்துக்கு உணர்த்தி வருகின்றனர். பல்லாண்டு காலமாகப் பாடசாலைகளைத் தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டு நிர்வகித்து வருகின்றனர்கள் நிர்வாகத்தினர். பள்ளிக்கூடங்களை நடத்தி வருவது கோவில் நிர்வாகத்தினரின் தொலைநோக்கை கல்வியின்பால் நிர்வாகத்தினர் கொண்டுள்ள ஆழமான பற்றையும் காட்டுவதாக இருக்கின்றது. இவைதவிர மேற்படிப்புக்காக உள்நாட்டு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து படிக்கும் மாணவர்களுக்கும் கோவில் நிர்வாகத்தினர் ஆண்டு தோறும் 'வட்டியில்லாக் கடனு தவியும் வழங்கி வருகின்றனர். நல்ல வருமானமுள்ள கோவில்கள் பல நம் நாட்டிலும் இருக்கின்றன. அவையாவும் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளை வழங்குமானால், பல ஏழைப் பிள்ளைகள் அதனால் மகிழ்வர் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு சீனக் குடும்பம் சிறம்பாவில் வசிப்பது — குடும்பத் தலைவர் சைக்கிளில் திருத்தும் கடை வைத்துள்ளார். வயது வந்த நான்கு பெண்பிள்ளைகள். அவர்கள் சோர்ந்து போயிருந்ததை நான் என்றுமே காணவில்லை. எந்நேரமும் சுறுசுறுப்புடன் எதையாவது செய்து கொண்டேயிருப்பர். நான்கு பெண்களும் காலை ஐந்து மணிக்கு வீட்டுக்குவீடு சைக்கிளில் சென்று பத்திரிகை விநியோகிப்பர். பின் ஒன்பது மணிமுதல் மாலை நான்கு மணிவரை புடலை மற்றும் அழகு சாதனங்கள் விற்கும் கடைகளில் பணியாற்றுவர். மாலை வீடுவந்து எல்லோருமாகச் சீனரின் விசேஷ உணவான மீ கோன், மீ சூப் தயாரித்து விற்பனை செய்வர். அந்தச் சீனரை நான் சந்தித்தபோது 'நேரம் வீணாகக் கூடாதென நாம் கருதுகிறோம். நீங்கள் அப்படி நினைப்பதில்லையென்று நினைக்கிறேன்' என்றார். உண்மைதான் சீனரில் ஆணும் பெண்ணும் சமமாக உழைக்கின்றார்கள். ஒரு சீனர் மாது செய்யும் வேலையை இங்குள்ள ஓர் ஆண் செய்வான் என்பது சந்தேகமே. ஆனாலும் அவர்களிடமுள்ள மூடநம்பிக்கைகளைப் பார்க்கும்போது என்னால் சிரிக்காமலும் இருக்க முடியவில்லை. தெருவில் ஒருவர் இறந்துவிட்டால் வீட்டின் வெளியே வைத்தே இறுதிச் சடங்குகளைச் செய்வர். அது மட்டுமா, பணக்காரர் ஒருவர் இறந்தபோது, அவர் பாவித்த பொருட்களைக் கடதாசியில் செய்து எரித்தார்கள். இதுபற்றி நான் விசாரித்தபோது, அவரின் சொத்துக்களை மேலுலகுக்கு அனுப்புகின்றோம் என்றார்கள். ஆகஸ்ட் மாதத்தில் பேய்களை மேலுலகுக்கு அனுப்புவதாகக் கூறி முக்கிய இடங்களில் மேடை அமைத்து உணவுப்பண்டங்களைப் படைத்து, பாட்டுப்பாடி நாட்டியமாடி அம்மாதத்தைப் பேய் மாதமாகக் கொண்டாடுவர்.

இந்தத் தொண்ணூறு நாட்களும் அவ்விரு நாடுகளிலும் நான் பெற்ற அனுபவம் பூராவுமே மனதிற்குத் தெம்பூட்டித் தொழில் முறையில் எனக்கு விசேஷ பயனை அளித்துள்ளதை எண்ணி மகிழ்வடைந்தேன். ❋

# ஒரு நாய் பிடிக்கிறது தன் வாலைப்

'பரிபூரணன்'

'வணக்கம்...! வணக்கம் சேர்' என்று கூறிய மாணவ மாணவியருக்கு பதில் வணக்கம் கூறிய ஆசிரியர் இடுப்பில் கைகளை ஊன்றிய வண்ணம் கதம்ப மாலையாகக் காட்சியளிக்கும் மாணவ மாணவிகளை, படை அணிவகுப்பைப் பார்வையிடும் தளபதி போலப் பார்த்துக் கொண்டு வருகிறார். பாடசாலைக்கு சற்று மேலாக இருக்கும் ரோட்டில் சற்று அகலமான அந்த இடத்தில் இருந்து வகுப்புக்கு ஏற்றபடி பலதரப்பட்ட வாய்ப்பாடுகளைக் கத்திக் கொண்டிருந்த சிறுவர்கள் ஆசிரியர் வரவால் கைகளைக் கட்டிக் கொண்டு 'கப்சிப்' என்றிருக்கின்றனர். பாடசாலையை கூட்டுவதற்காக உள்ளே சென்று ஆடிக் கொண்டிருந்த வாண்டுகள் நான்கும் கைகளிலிருந்த சவுக்குத் தழைகளை சப்பாத்தி வேலிகளுக்கு மேலாகத் தூக்கி எறிந்து விட்டு 'பம்மிப் பம்மி' ஓடிவந்து வரிசையில் நுழைந்து கொண்டன.

முதல் நாள் பள்ளியை மூடிய கையோடு ஆசிரியர் வீட்டில் கொண்டுபோய்ப் போட்டிருந்த மேசை நாற்காலி ஆகியவற்றை தூக்கிக் கொண்டுவரும் சிறுவர்கள் 'தொங்கு தொங்கு' என்று ஓடிவருகின்றனர்; 'ஹும் ஹும்..... மெதுவா மெதுவா' என்று ஆசிரியர் அதட்டுகிறார். மூடப்படாமல் நிறைந்த மண்டபமாகக் கிடக்கும் பள்ளியில் உள்ள தளபாடங்கள் இரவில் களவு போய் விடுகின்ற படியால் 'ஸ்கூல் சுவர்' பண்ண வேண்டும் என்று துரைக்கு 'லொக் புக்கில்' எழுதி எழுதிச் சலித்துப் போய்விட்ட ஆசிரியர் சோதனைக்கு வரும் இன்ஸ்பெக்டர் மூலமாகவும் எழுதிப் பார்த்துவிட்டார். நாலைந்து மரத் தளபாடங்களைப் பாதுகாப்பதற்காக நாளாயிரம் ரூபா செலவு செய்து 'ஸ்கூல் கவரிங்' செய்வதற்கு 'ஜனவசம்' இடம் கொடுக்காது என்று துரை அடிக்குறிப்பு செய்திருந்தார். 'கோதாரியில் விழுல் கதை கதைக்கினம்' என்று ஆசிரியர் பொருமிக்கொள்கிறார்.

ஆசிரியரின் தலையசைப்பைத் தொடர்ந்து சமநிலத்தில் அசையும் நதியாக மாணவர்கள் பள்ளிக்குள் செல்கின்றனர். மேசை மேல் இடாப்பை விரித்து வைத்துக்கொண்டு ஆசிரியர் பெயர்களை அழைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வந்தேன் சேர், வந்தேன் சேர்..... வரல்ல சேர்.....'

மாணவர்களின் குரலைத் தொடர்ந்து கோடும் சைபரு மாக இடாப்பில் அடையாள மிடப்படுகின்றன.

'லெச்சுமி..! லெச்சுமி....! ஆசிரியரின் முதல் அழைப்பிற்கு பதில் வராதபடியால் மறுமுறை யும் அழைக்கிறார். பலமாகவும் அதட்டலாகவும்.

'லெச்சுமுக்கு காச்சங்க அதா வரலீங்க'

அந்த இடத்திற்கு முற்றி லும் அறிமுகம் இல்லாத அந்தக் குரலைக் கேட்டு ஆசிரியர் நிமிர்ந்து பார்க்கிறார். அரைச் சுவருக்கும் கூரை சாய்ப்பிற்கும் மேலே தெரியும் ரோட்டில் நிற்கும் அவளை — லெச்சுமியின் தாயை — காக்கையாய் தலை சாய்த்துப் பார்த்துவிட்டு இடாப்பை மொத்தம் கூட்டிப் போடுகிறார்.

'ஸ்கோலுக்கு வர்ர புள்ளேக அடிக்கிதுல்லு தாங்க வரப் பய்ப்புடுங்க'

'யாரு அடிக்கிறதாம்' என்ற படி இடாப்பை மூடுகிறார். மாணவர்கள் கைகளைக் கட்டிய படி மௌனமாக நிற்கின்றனர்.

'யாரோ அம்மாசி மவ ளுங்க ஐயா, நேத்து ஸ்கோலுக்கு வந்த புள்ளேய கையப் புடிச்சி இழுத்து, இங்க வாடி ஒன்னே ஒரு வேலே.....!'

அவள் முடிக்கவில்லை தொல்லிக் கொண்டே போகிறாள். அவளுடைய பேச்சு பாலியல் தொடர்பான விஷயங்களை நோக்கி பள்ளத்தை நோக்கிப் பாயும் வெள்ளத்தைப் போல போய்க்கொண்டிருக்கிறது. மிகவும் பலவீனமாக — ஒளிவு மறைவு என்னும் வரம்புகளை முறித்துக் கொண்டு கண்ணியம் கட்டுப்பாடு என்னும் பண்புகளை மிதித்து நசுக்கிக் கொண்டு அவள் பேச்சு போய்க்கொண்டி ருக்கிறது.

பாடசாலை அமைதியில், வெற்றிலைச் சாறு கடைவாயில் நுரைக்க அவள் பேசும் சத்தம் மிகவும் துல்லியமாக ஒலிக்கிறது. இந்த எதிர்பாராத அசிங்கப் பேச்சால் ஆசிரியர் தடுமாறித் தவிக்கிறார். கிழவியின் வாயையோ மாணவர்களின் காதுகளையோ அடைக்க முடியாத ஒரு இரண்டுங் கெட்டான் நிலைமையில் நின்று தவிக்கிறார். தனது அந்தரங்கமான இரகசியம் அம்பலமானது போன்ற அவமான உணர்ச்சியில் ஆத்திரமும் மேலிட மாணவர்களைப் பார்த்து அதட்டுகிறார். 'என்ன வாயப் பாக்கிறியள்' படியாமல்' என்று மாணவர்களை நோக்கி கத்துகிறார். மாணவர்கள் மெது வாகத் தொடங்கிப் பின் பல மாகக் கத்தத் தொடங்கிவிட்டனர். அந்த இரைச்சல் அப் போதைக்கு மிகவும் அவசிய மான — அவசரமான ஒளஷத மாக விளங்கியது. ஆசிரியர் ஒரு திருப்தியுடன் மெதுவாக ரோட்டிற்கேறுகிறார். 'சின்னப் பின்னேகள் முன்னிலேயில் இப் படியா பேசுவது என்று அவளைக் கண்டிப்பதற்காக. அவளோடு கூட நிற்கும் ஒரு வயது வந்த பெண்ணைக் கண்டதும் ஆசிரியர் தயங்குகிறார். அவருக்கே வெட் கமாக இருக்கிறது.

'இதுகளாங்க சாரு சின்னப் புள்ளேக..... அவ்வா அவ்வா' என்று உள்ளங்கையால் வாயைப் பொத்தியவள் 'இது எத்தப் பெரிய கொமருங்க' என்று தனக்குப் பின் நிற்கும் மகளை முன்னுல் இழுத்துக் காட்டுகி றாள். ரவிக்கை இறுக்கத்திலும் கம்பாய்ச் சுற்றலிலும் புடலைக் கடை விளம்பர பொம்மையாக காட்சியளிக்கும் அவள் பொய் யான வெட்கத்துடன் தாய்க் குப் பின்னல் மறைந்து கொண்டு அவள் தோளில் 'சும்மா இரு' என்று செல்லமாகக் குத்துகிறாள்.

'என்னு ரொம்ப வெக்கப் படுற... அதுனுலதானே நேத்தி மொளைக்காத வாண்டு ஒன்னய போட்டு ஏறி மிதிக்கப்பாக்குது' என்று மகளைக் கண்டித்து விட்டு மீண்டும் தொடர்கிறாள். 'இது எத்தப் பெரிய புள்ளீங்க. இத கைய தட்டி கூப்பிடுருங்க. அந்த பய. கறையாத் தலையாட்டம் இருந்து கிட்டு! அப்பப் பாருங்க என்னு ஒரு அக்கிரமம் அந்த மொளைக்காத மொட்டைக்கு' என்கிறாள். அவளை இழுத்து அறைய வேண்டும் போல ஆத் திரம் வருகிறது ஆசிரியருக்கு. பேச்சை மேலும் வளர்த்துவிட விரும்பாமல் 'அவள் இங்க ஸ்கூலுக்கு வாரதில்லே' என்று கூறியபடி பாடசாலைக்கு இறங் குகிறார்.

'நீங்க கொஞ்சங் கண்டிச்சி வைங்க. ஹூம்... இந்தக்காலப் புள்ளேக படித்தவா வருதுக.....' என்று கூறியபடியே செல்கிறாள். விண்டுரைக்க முடியாத மன உளைச்சலால் வெறுப்பு மேலோங் கிய மனத்துடன் ஆசிரியர் படிகளில் இறங்கி வருகிறார். அணில் குதறிய சோளக் கதிர் போல மனம் எண்ணப் பிசிர் விட்டுக் கிடக்கிறது.

அவன் பாடசாலைக்கே வரா தவன் என்பதால் ஆசிரியர் சற்று திருப்திப் பட்டுக் கொள் கிறார் — மானத்தைக் காப்பாற் றினானே என்று. இல்லாவிட் டால் 'ஒங்க வாத்தியாரு இப் படித்தான் படிச்சி குடுத்தாரோ' என்றும் அவனைக் காணும் போதும், 'இப்படித்தான் நீங்க ஸ்கோல்ல படிச்சி குடுக்கிறீங் களோ' என்று ஆசிரியரைக் காணும் போதும் பேச்சு எடு படும். இரண்டிலும் ஆசிரியர் தலையே இழுபடும். சமுதாய சீர்கேடுகள் அனைத்திற்கும் ஆசி ரியரே பொறுப்பு என்று வாதி டும் பெற்றோர்கள் பிள்ளை களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்வதில்லையே!

இரண்டு மாணவர்கள் ஏதோ ரகசியமாகப் பேசிச் சிரித்துக் கொள்வதைக் கண்ட வர் பின்புறமாகச் சென்று கவ விக்கிறார்.

'ஒங்க அக்காவுக்கு காது போடுடா.....!' 'அக்கு' என்று எழுதியிருப்பவனிடம் மற்றவன் கூறுகிறான். ஆசிரியர் 'பளார் பளார்' என்று அவனே அறை கிறார். திடீர்த் தாக்குதலால் மாணவன் துடித்துப் போகிறான்! ஆசிரியருக்கே பாவமாக இருக் கிறது 'சூழப்படி பண்ணினே...!' ஆசிரியர் எச்சரித்துவிட்டு நாற் காலியில் போய் அமருகிறார்.

பாவம் சின்னப் பிள்ளைகள் என்ன கண்டார்கள், ஏதோ பெரியவர்கள் பேசுகிறார்களே என்று தாங்களும் வாய்கூசாமல் பேசிவிடுகிறார்கள். இப்பொழுது அந்தக் கிழ முதேவி பச்சை பச் சையாத பேசவில்லையா? சிறு வர்கள் இருக்கிறார்களே என்று நினைத்தாளா? பள்ளிக்கூடம் என்று பார்த்தாளா? மகள் கூட நிற்பதையும் மதித்தாளா? சிறு வர்களும் அதே போல வாய்க்கு வந்தபடி கதைக்க வேண்டியது தானே

பாம்பு தோலுரிப்பதைப் போல் வயது முதிர முதிர பெண்மைக்குரிய நாணம் அடக் கம் போன்ற குணங்களைக் கழற்றிவிட்டு, நாங்கள் எல் லோருமாக காலத்தைக் கடந்த வர்கள் என்றும் பொறுப்பில்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலும் அடக்கம் இல்லாமலும் கட்டுப்பாடுகளைக் கடந்தும் நடந்து கொள்வோம் என்றும் அப்படி நடந்து கொள்வதால் தமக்கு ஒரு பெருமை என்றும் மதிப்பு என்றும் வறட்டுத்தன மான போலி திருப்தியுடன் அலட்சியமாக நடந்து கொண்டு தங்கள் அடியினைப் பின்பற்றி வரும் இளஞ் சந்ததியினருக்கு ஒழுக்கத்தை வலியுறுத்துவது எவ்வளவு மடமைத்தனம்! ஏமாற்று வித்தையாக உள்ளது. மழலைப் பேச்சு மாறுத பருவத்திலேயே பாலியல் இலக்கணத்தை உறுப்பியலோடு ஒப்பிக்கும் பாலகர்கள் எந்தப் பள்ளியில் இவற்றைக் கற்றார்கள்? யார் கற்பித்தார்கள்? ஆசிரியரின் சிந்தனை விரிய விரிய வெறுப்பு எல்லை கடந்து விரிகிறது.

'இந்தச் சிறிய வயதிலே இவன் இப்படி என்றால் வாலிபப் பிராயத்தில்! எதிர்காலத்தில்!' குற்றவாளியை திருத்த வேண்டும் என்று அவர் மனம்— ஆசிரிய மனம் துடிக்கிறது. அவனுடைய தகப்பனிடம் கூறி கண்டிக்கச் சொல்ல வேண்டும் என்ற நிர்மானத்துடன் பாட சாலை முடிந்தும் வீட்டிற்குச் செல்லாமல் அங்கேயே அடைந்து கிடக்கின்றார்.

## 2

பாடசாலைக்கு மிக அருகிலேயேதான் அவனுடைய — 'அம்மாசியின்' தகப்பனுடைய 'லயம்' இருக்கிறது. ஆளுயரம் வளர்ந்து கிடக்கும் சப்பாத்திச் செடி வேலி இல்லாவிட்டால் லயம் நன்றாகத் தெரியும். வேலி கண்களினால்தான் மறைக்குமே தவிர காதுகளையும் மறைக்குமா! அங்கே பேசுவது அனைத்தும் இங்கே கேட்கும். பாடசாலை அமைதியாக இருந்தால், பழக்கப்பட்டவர்களுக்கு குரலைக் கேட்டதும் பேசுவது யார் என்று அறிய முடியும்.

'அவனுடைய தகப்பனை வரச்சொல்லு' என்று நினைத்த ஆசிரியர் விஷயத்தை எப்படிச் சொல்வது என்று குழம்புகிறார். மனதிற்குள் பலமுறை ஒத்திகை பார்த்தும் மனம் சொல்வதற்கு தடுமாறுகிறது — கூசுகிறது!

ஆனால் காலையில் அவள் எவ்வளவு சாதாரணமாகக் கூறினாள். அது பழக்கம். ஜென்மாந்திரப் பழக்கம். கல்லாமல் பாகம் படும் குலவித்தை ஆசிரியர் எண்ணிக் கொண்டிருக்கும் போதே லயத்தில் பேச்சுக்குரல் கேட்கிறது. 'ஆம் அவன்தான் வருகிறான். வரட்டுக்கும் என்று எண்ணிக் கொள்கிறார். தெளிவாகப் பேச்சு செவியுள் பாய்கிறது.

'பாப்பாத்தி... இப்ப நேரம் என்ன இருக்கும்'

தெரியல்லீயே'

'ரேடியோவ போட்டுப் பாக்கிறதுதானே' வேண்டும் என்றே வம்புக்கிழுக்கும் சேட்டைப்பேச்சு என்பது தெரிகிறது.

'இப்ப ரேடியோல போடப் புடாது'

'ஏ..... வீட்டுக்கு தூரமா இருக்கோ'

இளகிய ஈயமாக அவர் காதுகளில் இச் சொற்கள் பாய்கின்றன.

'ஐங்களுக்கு சும்மாப் போவ ஏலாது' அவள் பொய்க் கோபத்தில் ஏசுகிறாள்.

'ஐயைய... சும்மாப் போனு வெக்கமல்ல... கல்லடிப்பாங்க!

தன்னுடைய கடைசி மகளை ஒத்த ஒரு சிறுமியிடம் ஒருவன் கதைக்கும் லட்சணமா இது! இவனிடம் போய் உன்மகன் இப்படி எல்லாம் நடந்து கொள்கிறானே என்று கூறினால் 'அட அவனுட்டம் நா இருக்கயில பண்ணுன அட்டகாசத்தில இது எந்த மூல' என்று அவன் நினைப்பானே! புலிக்குப் பிறந்த தல்லவா; பூனையாகுமா! தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினறடி பாயுமாமே. அப்பொழுது எப்படி...! ஆசிரியர் குழம்பிக் கொள்ளும் போதே அவன் பாடசாலை வளவிற்குள் வந்து விட்டான். ஆசிரியரை வேலி மறைத்துக் கொள்கிறது. அவராகவே தன்னைக் காட்டிக் கொண்டால் ஒழிய அவனால் காண முடியாது.

'அம்மா புல்லு வெட்டவா போனீங்க'

மீண்டும் அவன் குரல் கேட்கவே ஆசிரியர் நிமிர்ந்து பார்க்கிறார். அதோ அவளே தான்— காலையில் கொந்தாப்பு வெட்டச் சென்ற லெச்சுமியின் தாயே தான் தன் மகளுடன் வந்து கொண்டிருக்கிறாள். வழக்கில் சம்பந்தப்பட்ட இருவருமே சந்தித்துக் கொள்வதால் ஆசிரியரின் தலையீடின்றி பிரச்சனை ஆராயப்படப் போகிறதென்ற ஆவலில் காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்கிறார்.

'புல்லு வெட்டவா போனீங்க' என்ற அவன் கேள்விக்கு 'ஆமாங்க' என்று பதில் கூறுகிறாள்.

'புல்லு எல்லாம் வெட்டி முடிச்சிட்டீங்களா... ...!'

'அங்கெல்லாம் வெட்டியாச்சி இங்க ...தான் இன்னும் கெடக்கு' அவள் அசிங்கமாக கை சாடை காட்டுகிறாள்.

ஆசிரியர் தன் காதுகளை இறுக மூடிக் கொள்கிறார்.



---

**கொழும்பில் 'மல்லிகை' ஆசிரியரைச் சந்திக்கும் முகவரிகள்**

ஒவ்வொரு மாதத்தினுடைய கடைசி வாரத்தில் ஆசிரியர் கொழும்பில் கீழ்க்கண்ட முகவரிகளில் தங்கியிருப்பார்: 137, மலிபன் வீதி, 182, முதலாம் குறுக்குத்தெரு, 24, ஸ்ரீ கதிரேசன் வீதி. தொலைபேசி: 20712 காலை -9 மணிக்கு முன் பி. ப. 5 -மணிக்குப் பின் காணலாம்.

---

வெந்த புண்ணில் ஊசியால் குத்தியது போல் இருக்கிறது. காலையில் இருந்து துடித்துத் தவித்து குழம்பிக் கொண்டிருந்த அவர் மனம் சப்பென்று சோர்ந்து விட்டது. காற்றுப் போன பலூனைப் போல.

குற்றவாளியைத் திருத்த வேண்டும் என்று தவித்துத் தவித்துக் கொண்டிருந்தவருக்கு யார் குற்றவாளி என்றே தெரியவில்லை!

யார் குற்றவாளி! உணர்ச்சி தவறிய ஒரு கணத்தில் தடுக்க முடியாத ஒரு நிலையில் உலகில் ஜனித்துவிடும் குழந்தைகளா!

ஓர் உயிரை தோற்றுவிக்கும் புனித சக்தியை கேலிக் கூத்தாக கேவலச் செய்கையாக மாற்றிவிட்ட மனிதப் பிண்டங்களா!

இல்லை! — இல்லவேயில்லை!

ஒரு சந்ததியினரை அறிவற்ற குருடர்களாக்கி மிருக வெறிகொண்ட மனிதர்களாக்கி அதே வாழ்க்கை அடிப்படையில் 'ஒரு நாய் தன் வாலைப் பிடிப்பதுபோல' சுற்றிச் சுற்றி வரச் செய்து கொண்டிருக்கும் இந்த நாசகரமான சமுதாய அமைப்புத்தான் காரணமோ! ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தத்துவ மரபு ஓர் அறிமுகம்

சோ. கிருஷ்ணராஜா

இந்திய தத்துவ வரலாற்றை எழுதிய பலரும் இதன் மரபு கருத்துமுதல் வாதமாகும் என எடுத்துக் காட்டியுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் 'ஆன்மா பற்றிய விஞ்ஞானம்' எனவும் இந்திய தத்துவ மரபு விளக்கப்பட்டது; பட்சபாதமின்றி இந்திய வரலாற்றை நோக்குமெவர்க்கும் மேலே கூறிய கருத்து புகைப்படுத்தப்பட்ட கூற்றுகுமென்பது புலப்படும். இந்திய தத்துவம் பலவகை முரண்பாடுகளை உள்ளடக்கியது. இது; வெறும் சிந்தனையாக மட்டுமிலாது, சமுதாய வாழ்வியல் முறையுடன் தொடர்பு கொண்டதாயும் உளது. காலத்திற்குக் காலம் பொருளாதார உறவுகளில் எழுகின்ற மாற்றங்கள் சமூக அமைப்பிலும் மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றது. சமூக மாற்றங்களின் பிரதிபலிப்பே சிந்தனை வரலாறு. இதற்குத் தத்துவ மரபும் விலக்கல்ல. எனவேதான் இந்திய தரிசனங்களை, அவை தோன்றிய சமுதாய நிலையுடன் தொடர்புறுத்தி விளங்கவேண்டியதாகிறது. உலகு பற்றியும், மனிதர் பற்றியும் எழுகின்ற பிரச்சினைகளை விளக்குவது என தத்துவத்திற்கு வரைவிலக்கணம் ஒன்று உண்டு. அவ்விளக்கத்தின்படி; பிரபஞ்சம், மனிதன், இயற்கை என்பன வற்றுடன் அறிவு, சிந்தனை, வாழ்க்கை முறை, கலை, சமயம் என பல்வேறுபட்ட துறைகளில் எழுகின்ற சிக்கல்களை விளக்கத் தத்துவம் முயலுகின்றது,

ஆதி கிரேக்க சிந்தனையாளர்களைப் போலவே இந்திய அறிஞரும்; உலகம் படைக்கப் பட்டதா, சடம், ஆன்மா ஆகிய இரண்டிலும் எது முதலில் தோன்றியது, போன்ற வினாக்களை எழுப்பி பலவகையான விடைகளைத் தந்தனர். காலப் போக்கில் பலவகை தரிசனக் குழுக்கள் அதன் பயனாய்த் தோன்றின.

ஹரப்பா நாகரிகத்தின் அழிவைத் தொடர்ந்து ஆரியர் இந்தியாவிற்கு படிப்படியாய் புலம் பெயர்ந்தனர். ஏறக்குறைய கி.மு. 2000 ஆண்டை அடுத்த காலப்பகுதியில் ஆரியரின் இந்திய வருகை நிகழ்ந்தது எனலாம். ஆரியர் இத்தியாவிற்குள் வருகை தந்ததன் பிற்பாடே, அவர்களால் இருக்கு வேதப் பாடல்கள் யாக்கப்பட்டது. மிகப் பிந்திய காலத்திற் குரியனவான இருக்கு வேதப் பாடல்களே இந்திய தத்துவத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. உபநிடத காலங்களில் இந்திய தத்துவம் திருந்திய வளர்ச்சியைப் பெற்றது.

இருக்கு வேத காலப்பகுதியிலேயே ஆரியர் நாடோடி வாழ்க்கை முறையிலிருந்து விடுபட்டு ஓரளவு நிலையாக வாழத் தொடங்கினர். புராதன கம்யூன் சமுதாயமாக அக்கால வாழ்க்கை இருந்தது. கம்யூன் 'யக்ஞம்' என ஆரியர்களால் அழைக்கப்பட்டதாக டாங்கே குறிப்பிடுகின்றார். யக்ஞ உற்பத்திமுறையிலமைந்த வேத கால சமூகம் ஒரு கண ஸ்தாபனமாய் இருந்தது. அதன் அங்கத்தவர்கள் அனைவரும் இரத்த சம்பந்தமுடையோராய் இருந்தனர். செல்வம், உழைப்பு ஆகிய இரண்டும் யக்ஞத்தின் பொது உடமையாக இருந்தன. மக்கள் இயற்கையோடியைந்த வாழ்க்கை நடத்தினர் காட்டு மிருகங்கள், இயற்கை அழிவுகள் போன்றவை அக்கால மனிதனின் சுமுகமான வாழ்க்கைக்குத் தடையாக இருந்தன. இயற்கை அழிவுகள்; தன்னைப் போன்ற, ஆனால் சர்வ வல்லமை வாய்ந்த ஒன்றின் செயல்களாய் இருக்குமென, அக்கால மனிதன் கற்பித்துக் கொண்டான். கடவுட் கொள்கை உருவாகியது. இயற்கை நியதி சமூகம் என்பன பற்றிய அறியாமையினால்; மேலான சக்திகள் பற்றிய புராணக் கட்டுக்கதைகளை உருவாக்கி, அவற்றை உண்மையென நம்பவும் தொடங்கினர். பிந்திய இருக்கு வேத உபநிடத காலங்களில் மேலே கூறிய ஆரம்ப இருக்கு வேத கால கருத்துக்களது ஏற்புடமை பற்றிய ஐயங்கள் எழுந்தன. ஐயப்பொருள் தொனிக்கும் வினாக்களே தத்துவ ஆராய்ச்சியின் ஊற்று. இந்திய தத்துவத்தைப் பொறுத்தவரையில் இக் கருத்து முற்றிலும் பொருந்தும். வேத காலத்தை அடுத்து உபநிடத காலம் தத்துவ வரலாற்றில் முதன்மை பெறுகிறது.

உபநிடதகாலத்தில் இந்தியா அடிமைச் சமுதாய அமைப்பில் நுழைகிறது. பொருள் உற்பத்திச் சக்திகளில் ஏற்படுகின்ற இடையருத மாற்றம் சமுதாய வரலாற்றிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. சமுதாயம் ஒரு நிலையிலிருந்து இன்னோர் நிலைக்கு மாற்றம் பெற, அம் மாற்றம் மனித வாழ்க்கை முறையிலும் சமூக அமைப்பிலும் பிரதிபலித்தது. அடிமை முறையும், தனி உடமையும் பண்டைய கம்யூன் பொருளாதாரத்தை பாதித்ததன் மூலம் வர்க்கப் பாகுபாட்டை தோற்றுவித்தது. இதன் முன்னோடியாக உபநிடதகாலத்தில் சிறிய இனக் குழுக்கள் (குலங்கள்) சிற்றரசுகளாக மாற்றம் பெறுவதைக் காணலாம். அரசை உருவாக்குவதில் சூத்திரியர் முன்னணியில் நிற்க பிராமணர் அதற்குதவியாய் இருந்தனர்;

உபநிடதங்கள் இருநூற்றுக்கும் மேற்பட்டவை. தற்பொழுது அறியப்படுபவை நூற்றியெட்டு மட்டுமே. இவற்றில் பதின்மூன்று உபநிடதங்கள் மட்டுமே முதன்மையானவை. அவை அனைத்தும் வேதங்களைப் போல ஒரே காலத்தில் இயற்றப்பட்டு தொகுக்கப்பட்டவை அல்ல; பல சிந்தனையாளர்களின் கருத்துக்கள் உபநிடதங்களில் இடம் பெற்றமை காரணமாக இயல்பான முரண்பாடுகள் அங்கு காணப்படுகின்றன. சடங்காசாரங்கள் பற்றிய பல குறிப்புக்கள் ஆங்காங்கே விரவி வருகிறது. மனிதர் பற்றியும், உலகு பற்றியும் கருத்துமுதல்வாத




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புக்கள் காணப்படுகின்றன. இதுவரை அறியப்பட்ட உபநிடதங்களில் பொருள்முதல்வாத சிந்தனைகள் அரிதாகவே காணப்படுகிறன. முழுமையான தத்துவ விளக்கம் உபநிடத காலத்தில் உருவாகவில்லை.

உபநிடதத்தை அடுத்த காலப்பகுதிகளிலே இந்திய சிந்தனைகள் முழுமையான தரிசனங்களாக உருப்பெறுகிறது. கி. மு. ஏழாம் நூற்றாண்டிற்கும் இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தரிசனக் குழுக்கள் பூரண வளர்ச்சி பெற்ற நிலை காணப்படுகிறது. இக்காலப் பகுதியில் அடிமைகளைக் கொண்ட சிற்ற ரசுகள் மேலாதிக்கம் பெற்று பேரரசுகளாக வளர்ச்சிபெறத் தொடங்குகின்றன. இச் சந்தர்ப்பத்தில் உலகாயதம், சாங்கியம், நியாயம் வைசேடிகம், யோகம், மீமாம்சம், வேதாந்தம், சமணம், பௌத்தம் ஆகிய தரிசனக் குழுக்கள் தோற்றம் பெறுகின்றன. அவை முறையே பிரகஸ்பதி, கபிலர், கௌதமர், கணாடர், பதஞ்சலி, ஜைமினி, பாதராயணர், வர்த்தமானர், புத்தர் என்பவர்களால் ஸ்தாபிக்கப்பட்டன. சாங்கியம், நியாயம் வைசேடிகம் என்பன இன்று பின்பற்றுவோர் எவருமில்லாது உள்ளன.

ஆரம்பகால இந்திய சிந்தனையாளர்கள் தம் கருத்துக்களை சூத்திரவடிவிலமைத்த சுலோகங்களாக அமைத்தனர். பிற்காலத்தில் சூத்திரங்களைப் பயின்ற மாணாக்கர் தெளிவு வேண்டி பல விளக்க உரைகளை வேவ்வேறு காலங்களில் செய்தனர், அவ்வுரைகள் சூத்திர விளக்கங்கள் என அழைக்கப்பட்ட பொழுதும், அவை புதிய படைப்புக்களாகவே காணப்படுகிறது. 'இந்திய தத்துவ ஞானத்தில்..... ஆராய்ச்சி என்றைக்கோ முடிந்து, முடிபுகளும் அறுதியாக வெளியிடப்பட்டு விட்டன. பின்வந்த ஞானிகளின் ஆராய்ச்சிகள் யாவும் அம் முடிவுகளை சரியாக விளங்கிக் கொள்வதன் பொருட்டே மேற்கொள்ளப்பட்டன' இக் கருத்து; இந்திய தத்துவ மரபு பற்றி அடிக்கடி பலராலும் வற்புறுத்தப்படுவதொன்று. சாங்கியம், நியாயம், வைசேடிகம் போன்ற கொள்கைகளைப் பொறுத்தவரையில் மேற்கூறிய கருத்து ஓரளவு ஏற்புடையதே. ஆனால் வேதாந்த சித்தாந்த தரிசனங்களிற்கு அது பொருந்தாது அத்வைதம், விஷிஷ்டாத்வைதம், துவைதம் போன்ற வேதாந்தக் குழுக்களும், பாடாணவாத சைவம் முதலாக சுத்த சைவம் ஈறான சித்தாந்தக் குழுக்களும் பிற்காலத்திற் குரியனவேயாகும்.

ஐந்தாம், ஆறும் நூற்றாண்டுகளில் இந்தியாவில் நிலப்பிரபுத்துவ உறவுகள் உருவாகின. கூட்டு விவசாய அமைப்பு தொடர்ந்தும் இருந்தது. அடிமைகளதும் ஆண்டார்களதும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கைத்தொழில்கள் அமைந்தன. வருணசிரம முறை (சாதி முறை) நிலையான தாய் மாற்றம் பெற்றது. சமுதாய அமைப்பு தந்தை வழி முறையைப் பின்பற்றுவதாகக் காணப்பட்டது. சுயதேவைப் பூர்த்தியுடையனவாய் கிராமங்கள் காணப்பட்டன. கிராமத்திற்கு முதியோன் ஒருவன் தலைமை தாங்கினன். நிலப் பிரபுத்துவ சமுதாய வெளிப்பாடாய் இந்துசமயம் தோற்றம் பெற்றது. எல்லா இந்திய தரிசனக் குழுக்களும் இக்காலத்தில் பல மாற்றங்களைப் பெற்றன. வேதாந்த சித்தாந்தக்



குழுக்கள் உருவாகின. கி. பி. எட்டாம் நூற்றாண்டில் சங்கரரும், பதினேராம் நூற்றாண்டில் இராமனுஜரும், பதின்மூன்றாம் நூற்றாண்டில் மெய்கண்டாரும் வேதாந்த சித்தாந்தக் கொள்கைகளை ஸ்தாபித்தனர்.

இந்திய தத்துவ மரபு ஆஸ்திகம், நாஸ்திகம் என இரண்டாக, சிலரால் பகுக்கப்படும். இறைவனை ஏற்பவர் ஆஸ்திகர். மறுப்பவர் நாஸ்திகர் என பொதுவானதொரு அபிப்பிராயம் உண்டு. இது தவறு. ஏனெனில் இந்திய தத்துவ வரலாற்றை சாங்கியம் நியாயம் யோகம், வேதாந்தம், மீமாம்சம், வைசேடிகம் என்பன வற்றை ஆஸ்திக தரிசனம் என்ற பிரிவினுள்ளும், உலகாயதம், பௌத்தம், சமணம் ஆகியவற்றை நாஸ்திகத்திலும் உள்ளடக்குவர். ஆனால் சாங்கியம், நியாயம், வைசேடிகம் என்பன இறைவனை ஏற்பதில்லை. மேலும் அவை பிரபஞ்சத்தை கருத்துமுதல் வாத அடிப்படையில் விளக்கவும் இல்லை. வேதத்தை சுருதியாக மேற்கூறிய மூன்று தரிசனங்களும் அங்கீகரிக்கின்றன. அவ்வங்கீகாரமே சாங்கியம், நியாயம், வைசேடிகம் என்பன, ஆஸ்திக பிரிவில் உள்ளடக்கப்படக் காரணமாகிற்று. எனவே வேதத்தை சுருதியாக ஏற்பவர் ஆஸ்திகர் என்றும், நாஸ்திகர் சுருதியாக வேதத்தை ஏற்க மறுப்பவர் என்றும் நாம் விளங்கலாம்

ஆஸ்திக தரிசனங்கள் அனைத்தும் வேதத்தை சுருதியாக ஏற்றமை, ஒரு பெயரளவிலான ஒற்றுமையையே காட்டுகிறது. தாம் நிறுவ எடுத்துக் கொண்ட கருத்துக்களின் ஏற்புடமைக்கு சான்றாக மட்டுமே வேதத்திலிருந்து மேற்கோள்களைக் காட்டுகின்றனர். ஆனால் உண்மையில் வித்தியாசமான கொள்கைகளையே முன்வைக்கின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் வைதீகம் அவைதீகம் எனவும் இந்திய தத்துவ மரபு பாகுபடுத்தப்படும். சாங்கியம், நியாயம், வைசேடிகம், யோகம், மீமாம்சம்; வேதாந்தம் என்பன வைதீகப் பிரிவில் அடங்கும். அவை தீகப் பிரிவில் பௌத்தம், சமணம் என்பன உள்ளடக்கப்படும். ஆனால் வைதீக அவைதீக பாகுபாடும் தெளிவானதொன்றல்ல. பௌத்த சமண நூல்களில் வேதாந்தம் அவைதீக தரிசனம் எனக் கூறப்பட்டு விமர்சிக்கப்படுகிறது.

திருப்திகரமான, விளக்கத்திற்காக நாம் இந்திய மரபை, கருத்துமுதல் வாதம் பொருள் முதல்வாதம் என வகைப்படுத்துவோம், இப்பாகுபாடும் திருப்திகரமானது அல்ல, ஏனெனில் சாங்கியம், வைசேடிகம், நியாயம் என்பன பொருள்முதல் வாதக் கருத்துகளைக் கருத்து முதல் வாத வடிவில் தருவனவாகும். ஆன்மா முதல் நிலையானது, சடம் வழி நிலையானது எனக் கருத்துமுதல்வாதிகள் கருதுவர். பொருள்முதல்வாதிகளின் கொள்கை இதற்கு மறுதலையானது.

மேற்கூறிய வகையீட்டில் இந்திய தத்துவ வரலாற்றை நோக்குவோமாயின், அது கருத்துமுதல் வாதம் பொருள் முதல் வாதம் என்ற இருவகை சிந்தனைப் போக்கினதும் முரண்பாட்டின் விளைவாய் வளர்ந்து வந்தமை புலனாகும். பொருள் முதல் வாதம் முற்போக்கானது என்ற முடிவுடன் கருத்துமுதல் வாத சிந்தனையை நாம் புறக்கணிக்க முடியாது. உயிர் வர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தவர் தமது மேன்மையை நியாயப்படுத்த கருத்துமுதல் வாதத்தைப் பயன்படுத்தினர் என்பதுண்மையே. எனினும் சமுதாய வளர்ச்சிக்கு கருத்து முதல்வாத சிந்தனையாளர் ஆக்கபூர்வமான பல தொண்டுகளைச் செய்துள்ளனர். மேலும் தத்துவ மரபை ஆராயும் நாம் கருத்துமுதல்வாத நோக்குகளை நிராகரித்து பொருள்முதல் வாதப் போக்குகளை மட்டுமே அங்கீகரிப்பதும் திருப்திகரமானது அல்ல.

அடிமைச் சமுதாய நிலை வளரும் காலகட்டத்தில் பல ஆரம்பகால இந்தியச் சிந்தனையாளர் வாழ்ந்திருந்தனர். அவர்களது சிந்தனையில் மனித பிரச்சனைகளே முதன்மை பெற்றன. ஏன் மானிடர்க்குத் துன்பம் விளைகிறது, எவ்வாறு துன்பத்திலிருந்து விடுதலை பெறுவது போன்ற பிரச்சனைகள் பௌத்தருக்கும் சமணருக்கும் மட்டுமல்லாது எல்லா இந்திய சிந்தனையாளர்களுக்கும் முக்கிய பிரச்சனையாய் இருந்தது. மனிதனை துயரத்திலிருந்து விடுவிப்பதே முக்கிய இலக்காக இருந்தது, இதனை நோக்கியே எல்லாச் சிந்தனையாளர்களும் செயற்பட்டனர். மோட்சம், விடுதலை போன்ற சொற்கள் பிரபல்யம் பெற்றன. நடைமுறைப் பிரச்சனைகளிலிருந்து விலகுவதற்கு, மோட்சமும் விடுதலையும் சிறந்த வழியாக பல சிந்தனையாளருக்கும் தென்பட்டது. இறுதி உண்மை பற்றிய தேட்டத்திற்கு அதுவே காரணமாயிற்று. எல்லா இந்திய தரிசனக் குழுவினரும் மானிடத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக, அவர்களுக்கு எழும் பிரச்சனைகளை தீர்ப்பதில் ஆர்வம் கொண்டோராய்க் காணப்படுகின்றனர்.

பெரும்பாலான இந்திய சிந்தனையாளர்கள் தம் காலத்திய வாழ்க்கை நெறிமுறைகளில் அதிருப்தி கொண்டோராய்க் காணப்பட்டனர். அதனால் இலட்சிய வாழ்க்கைபற்றி சிந்தித்தனர். உலகாயதர் வாழ்வின் உயர் இலட்சியம் இன்பம் பெறுதலே என்றும், அதுவே திருப்தியைத் தரும் என்றும் கருதினர். இன்பம் தருவது எதுவும் நன்மையானது. இவ்வுலக வாழ்க்கையிலேயே அதனை அடைதல் வேண்டும். ஏனெனில் இறப்பின் பின் எதுவுமில்லை.

பௌத்தம் துன்பத்திலிருந்து விடுதலை பெற நடுவழிப் பாதையைப் போதிக்கிறது; மனிதர் அனைவரும் தம் முயற்சியாலேயே விடுதலை பெறுதல் வேண்டும். நிர்வாணம் அடைதலே பௌத்தத்தின் இறுதி இலக்கு.

சமணம் சடங்காசாரங்களினூலோ அன்றி வழிபாடுகளினூலோ விடுதலையைப் பெறமுடியாது எனக் கூறுகிறது. நல்நோக்கு, நல்லறிவு, நற்செயல் எனும் மூவகை உண்மைகளைப் பின்பற்றக் கூடிய ஒழுக்கநெறி முறைகளாலேதான் ஆன்மா விடுதலையாகும்.

பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட சிந்தனை மூலம் துன்பத்திலிருந்து விடுதலை பெறலாம் என சாங்கியம் கூறுகின்றது. பிராகிருதியின் (சடம்) இயக்கமே பிரபஞ்ச தோற்றம். கிரியைகளும் பலியிடுதலும் அறிவைத் தரும் செயல்கள் அல்ல.

யோகப்பயிற்சி மூலம் அறிவு பெறலாம் என யோக தரிசனம் வழிகாட்டுகிறது. பற்றறுத்த நிலையில் உள்ள உணர்வுகளை வளர்ப்பதன் மூலம் யோகம் கைகூடும்.



இயற்கையை விளங்க தருக்க நெறி உதவும். திக்வியங்களும் அதன் பண்புகளும் பற்றிய பகுப்பாய்வு மூலம் இயற்கையை அறியலாம் என நியாயம் விளக்குகிறது.

மீமாம்சம் தியானமும் கிரியையும் சுவர்க்கம் என்ற பெறுபேற்றைத் தரும் எனப் போதிக்கிறது. மோட்சம் அல்லது விடுதலை என்பது பிரமத்துடன் ஆன்மாவை இணங்கண்டு கொள்ளுதல் என வேதாந்தம் கூறுகிறது.

வேதாந்தமும் மீமாம்சமும் முற்றிலும் துய இலட்சிய வாதங்களாகும். ஏனைய தரிசனங்கள் அனைத்திலும் பொருள் முதல் வாதக் கூறுகள் காணப்படுகின்றன. வைசேடிகம் பிரபஞ்ச விளக்கத்திற்கு அணுக் கொள்கையை முன்வைக்கிறது, அணுவே பிரபஞ்சத்தின் மூலம் பிராகிருதியின் இயக்கத்தால் உலகம் உருவாகிறது என சாங்கியர் கருதுவர். யோகம் இறைவனை முற்கற்பிதமாய் ஏற்கிறது. யோகப்பயிற்சிக்கு உளத்தை ஒரு நிலைப்படுத்துதல் வேண்டும். உளத்தை ஒருநிலைப்படுத்தும் குறியீடாகவே இறைவன் யோக தரிசனத்தில் காணப்படுகிறது. சமணமும் பௌத்தமும் இலட்சிய வாதமேயாயினும், இறைவனின் இருப்பை ஏற்பதில்லை. மீமாம்சம்கூட இறைவனை ஏற்கவில்லை. கிரியைகள் விரும்பிய பெறுபேற்றைத் தரவல்லன என மீமாம்சகள் கருதுவதால், அவர்களது தத்துவத்தில் இறைவன் முதன்மை பெறவில்லை.

வேத உபநிடத காலத்தில் ஐயவாதம், அறியோணவாதம் போன்ற தத்துவ சிந்தனைகளும் காணப்பட்டன. சந்தேகமற்ற அறிவு மனிதரால் பெற முடியாததொன்று என ஐயவாதிகள் வாதிடுகின்றனர். மனிதரால் எதனையும் அறிய முடியாது என்பது அறியோணமை வாதத்தின் சாராம்சம். 'இந்திரன் உள்ளானோ?, அவனை பார் கண்டது?' போன்ற அடிகள் இருக்கு வேதத்தில் காணப்படுவதிலிருந்து வேதகாலத்திலேயே முன்கூறிய கருத்தோட்டங்கள் காணப்பட்டன என்பதை ஊகிக்கலாம். உபநிடதங்கள் பலவற்றிலும் உலகாயத கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. கதா உபநிடதத்தில் இறப்பின் பின்னர் வாழ்வு உண்டா என வினவப்படுகிறது. ஆரம்பகால பொருள்முதல் வாதத்தில் இயற்பண்பு வாதக் கூறுகளும் பரவலாக காணப்படுகின்றன. உபநிடதம், பௌத்தம் என்ற இரண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் உலகாயத வாதம் தோற்றம் பெறுகிறது. வேதகாலத்து அண்டவியற் கருத்துக்களுக்கு எதிரானதும், பகுத்தறிவு சார்ந்ததுமான புரட்சியாக மட்டுமில்லாது பிராமணீயத்திற்கெதிரான ஒன்றுகவும் உலகாயதம் எழுச்சி பெறுகிறது.

பௌத்த சமண நூல்களில் அஜித்த கோசல சம்பாலி, சஞ்சய, விலத்த, புரந்த, கசப்ப, மக்களிகௌசல போன்ற பொருள்முதல் வாத மெய்யியலாளர்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

நிலம், நீர், காற்று, நெருப்பு என்ற மூல பொருட்கள் நான்கினதும் தொகுப்பே பிரபஞ்சம் என அஜித்த கோசல சம்பாலி குறிப்பிடுகிறார், மனிதனும் இந்த நான்வகைப் பொருட்களாலேயே ஆனவன். இறப்பின் பின் அவை தம்மிடம் சேர்கின்றன; அஜித்த இறப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பான வாழ்க்கையை நிராகரிக்கிறார். இறைவன் இல்லை என்பதையும் நல்வினை நற்பெறுபேற்றையும், தீவினை தீய பெறுபேற்றையும் தரும் என்பதை அவர் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார்.

மக்களி கௌசல உற்பத்தியாகும் எதுவும் தன் இன்றியமையாத் தன்மையால் உருவாகிறது என்கிறார். கர்மக் கோட்பாடு இவரால் மறுக்கப்படுகின்றது; சஞ்சய அறியோணுவாதியாகக் காணப்படுகிறார். இவரது கருத்துப்படி உலகம் உளதோ அல்லவோ, மறுபிறப்பு உண்டோ அல்லவோ என எதுவுமே அறியமுடியாது.

பொருள்முதல் வாதிகளை விட சுபாவவாதம், தற்செயல் வாதம் போன்ற கோட்பாடுகளும் இந்திய மரபில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பொருளும் தன் சுபாவத்தால் பண்புகளைப் பெறுகிறது. நெருப்பு சூடாயும், பனி குளிராயும், நீர் திரவமாயும் இருக்கக் காரணம் அதனதன் சுபாவமேயன்றி வேறெதுவுமல்ல எனக் கூறுவது சுபாவவாதம். தற்செயல் வாதம் காரணக் கோட்பாட்டை நிராகரிக்கிறது. எல்லாத் தோற்றப்பாடுகளும் சந்தர்ப்ப வசத்தால் விளைவது கரும்பு இனிப்பாயும், உப்பு உவர்ப்பாயும் காணப்படுவது சந்தர்ப்பவசமே என தற்செயல் வாதிகள் கருதுவர்.

ஆரம்ப கால உலகாயதர் நிலம், நீர், காற்று, தீ என்ற நால்வகை மூலகங்களை ஏற்றுக் கொண்டனர். இவை படைக்கப்படாதவை உள்ளார்ந்தவை. மூலப் பொருட்களின் பல்வேறு சேர்க்கையே மனிதருட்பட எல்லாப் பொருள்களுமாகும். ஆன்மா என ஒன்றில்லை. வேத மந்திரங்களிற் சில தெளிவற்றவை, சில அபத்தமானவை. சுயநலமிகளான தனியாட்களின் கண்டுபிடிப்பே மதம்.

பண்டைய இந்தியாவில் காணப்பட்ட பொருள்முதல் வாதக் கோட்பாடுகள் அனைத்தும் உலக வாழ்க்கையை முதன்மைப்படுத்துவதன்மூலம் பொதுவானதொரு கருத்தோட்ட முடையனவாய் காணப்படுகின்றன. உண்மையான விடுதலை அறியாமையிலிருந்து விடுபடுதல் என்பதை உணர்ந்த உலகாயதர் இயற்கை விஞ்ஞான ஆய்வுகளைத் தூண்டினர். சமூகத்தின் பொருளாதார கலாசார வளர்ச்சி பகுத்தறிவின் அடிப்படையில், புராண இதிகாச போதனைகளிலிருந்து விடுபட்டு, மானுட விழுமியங்களை உணர்ந்து கொள்ளுவதாயிருத்தல் வேண்டும். பண்டைய உலகாயதரில் காணப்பட்ட முக்கிய குறைபாடு மனிதனின் ஆக்கத் திறனை உணரத் தவறியமையேயாகும். இதனாலே தான் உலகாயதரின் முயற்சிகள் எதிர்மறைப் பண்பைக் கொண்டவையாய்க் காணப்படுகிறது.

இந்திய தத்துவ மரபு இலட்சிய வாதத்திற்கும் பொருள் முதல் வாதத்திற்கும் இடையிலேற்பட்ட போராட்டத்தை ஆதாரமாகக் கொண்டு வளர்ந்தது. பொருள்முதல் வாதம் மிகச் சிறுபான்மையோரால் பின்பற்றப்பட்டமையினால் வேதாந்தத்தைப் போன்றோ அல்லது பௌத்தத்தைப் போன்றோ ஆதிக்கம் பெறவில்லை. ★



*With the best Compliments*

*From*

**R. V. G.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுற்பத்தியைத் துரிதமாக்குக!



புதிய விவசாய இரசாயனங்கள்

'ப்பயர்' (Bayer) 'லங்கேம்' (Lankem)

C. I. C. 'ஹேக்ஸ்' (Hoechst)

C. I. A. S. 'மொன்சான்ரோ (Monstanto)

மகாராஜா, மக்வூட்ஸ்

உறபத்திகள்!

தரமிக்க உரவகைகள்

அரச உரக் கூட்டுத்தாபனத்தின்
அங்கிகாரம்பெற்ற விநியோகத்தர்

நிதான விலை! நிறைந்த சேவை!

அழைக்க!

"அக்ரோ விலாஸ்"

(AGRO VILAS)

இடைக்காடு, — அச்சுவேலி.

# கடவுளும் செருப்புக்கட்டியும்

ஆங்கில மூலம்:
ஆர். கே. நாராயன்

தமிழ்ப்பெயர்ச்சி:
ராஜ ஸ்ரீகாந்தண்

'முற் பிறப்பின் போது அவர்களிருவரும் சொல்லமுடியாத பாவங்களைப் புரிந்திருக்கிறார்கள்'

அவனுக்கென்று சொந்தமாக எதுவுமேயில்லை. வீதிக்கும் கோயிற் பிரகாரத்திற்குமிடையேயிருந்த எவருக்கும் சொந்தமில்லாத நிலத்தின் ஒருதுண்டில் அவன் இருந்தான. கோயிலுக்குள் நின்ற பிரமாண்டமான வேப்பமரமொன்றின் ஒரிய கிளையொன்று பிரகாரச் சுவருக்கு வெளியேவந்து அவனுக்கு நிழலைக் கொடுத்தது. அம்மரக்கிளையிலிருந்து வெண்மஞ்சள் வேப்பம் பூக்கள் நாள்முழுக்க அவன் மீது சொரிந்து கொண்டேயிருக்கும்.

'சொர்க்கத்திலிருக்கும் கடவுள்கள் மட்டுமே மலர்மாரி பொழியும்போது அதில் நினைத்து மகிழும் அதிர்ஷ்டத்தைப் பெற்றவர்கள்' என்று கோயிற்படியில் இருந்து அவனை அவதானித்துக் கொண்டிருந்த ஹிப்பி தனக்குள் நினைத்துக்கொண்டான். முதல் நாள் மாலையிலிருந்து அந்த ஹிப்பி கோயிற்படியைத் தனது தற்காலிக வசிப்பிடமாக்கிக் கொண்டிருந்தான். அந்த ஹிப்பி யாரென்று விவரிக்க வேண்டியது அவசியமில்லை. மனிதனின் தனித்துவங்களையும், புவியியல் எல்லைக் கோடுகளையும் உதறித் தள்ளும் மார்க்கந்தானே ஹிப்பிசம். அவன் பேர்க்கிலியிலிருந்தோ அல்லது மொங்கோலியாவிற்கு வெளியிலிருந்தோ இன்றேல் வேறெந்த நாட்டிலிருந்தோ வந்திருக்கலாம்.

இவ்வாறான வரம்புகளற்ற வாழ்க்கை முறையொன்றை வகுத்துக் கொண்டால் புதியதொரு முகமூடி கிடைக்கிறது. திறந்த வெளியில் வெய்யிலிற் காய்ந்து, மழையில் நனைந்து இயற்கைவசப் படுத்தலுக்குள்ளாகும்போது கேள்வி வரம்பற்ற சர்வதேச வகுப்பொன்றின் சிறப்பு முத்திரை விழுகிறது: இன்னும் சொல்லப் போனால்— முழங்காலுயரத்திற்குப் பருத்தி ஆடையொன்றை உடுத்திக் கொண்டு, விரும்பும்போது அதே துணியில் சட்டையொன்றையும் போட்டுக் கொண்டு எந்தச் சேற்றிலும், சகதியிலும் எவ்விதக் கூச்சமுமின்றி சுயாதீனமாக, விட்டேறித்தனமாக அடரக்கூடிய சந்நியாசித் தன்மை ஏற்பட்டு விடுகிறது. இந்தச் சர்வகலாசாலைப் பட்டத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுவிட்டால் யார், என்ன தொழில், எந்த நாடு என்ற கேள்விகளுக்கே இடமிருக்காது. தனித்துவங்கள் எல்லாக்கோடு அற்ற நிலையில் அவன் அவனுகவே கணக்கப்படுகிறான். சுவாசிக்கும் யதார்த்த உருவம் அவ்வளவுதான். பாதையோரத்திலிருந்த அந்தச் செருப்புக்கட்டி இவ்வாறுதான் அந்த ஹிப்பியை அளந்தான். அறுந்துபோன தனது வார்ச்சப்பாத்தைத் தைப்பதற்கென அந்த ஹிப்பி அவனருகே வந்தான்.

அவன் நிமிர்ந்து பார்த்தான். 'சிக்கடித்த சடாமுடி பிடரிப்பக்கமாகத் தோள்வரை தொங்க அந்த ஆஜானுபாகுவான தோற்றத்துடன் இவன் பரமசிவனைப் போலிருக்கின்றான். ஒரே யாருகுறை கழுத்திலிருக்கும் பாம்பைமட்டும் காணவில்லை. ஒரு பரிசுத்த உருவின் முன்னால் நிற்கும் பக்தனைப் போல அவன் ஒதுங்கிப் பாதுகாப்பாக அமர்ந்தான்.

'இவன் சிவனின் உறைவிடமான ஹிமாலயத்திலிருந்துதான் வருகிறான். பலமான ஒட்டுப்போட்ட இவனுடைய வார்ச் சப்பாத்து அதனைச் சுட்டிக் காட்டுகிறது' என்றெண்ணிய வாறு ஹிப்பியின் காலிலிருந்து சப்பாத்தைக் கழற்றிப் பரிசீலித்தான். தனக்குப் பின்னாலிருந்த சுவரிலிருந்து ஒரு சுவரொட்டியை உரித்தெடுத்துக் கீழே விரித்தான்.

'தயவுசெய்து உங்கள் காலை இதன்மீது வையுங்கள், தரையெங்கும் ஒரே சேறாக இருக்கிறது' அவனுக்குப் பின்னாலிருந்த சுவரிலிருந்து கிழித்தெடுக்கப்பட்ட பல சுவரொட்டிகள் அவனிடமிருந்தன. அந்தச் சுவர் ராம்நகர் காலிடோஸ் நகர்களிலிருந்து இழுக்கு நோக்கிச் செல்லும் பெருந்தெருவின் முக்கிய சந்திப்புக்கு எதிரேயிருந்தது. இச் சந்திப்பில் ஜனசஞ்சாரம் மிகுந்திருப்பதால் சுவரொட்டிகள் சந்திப்பின் எதிரேயுள்ள சுவரில் ஒட்டப்படும்.

அவற்றை ஒட்டுபவர்கள் நடுச்சாமத்தில் ஜனசந்தடி ஓய்ந்தபோது வருவார்கள். இத்தச் சுவரொட்டிகள் பலவகைப்படும். காலையில் அங்குவரும் செருப்புக்கட்டி இரண்டு மூன்று சுவரொட்டிகளை உரித்தெடுத்து வைத்துக்கொண்டபின் தனது தொழிலை ஆரம்பிப்பான். பல வழிகளில் அவை அவனுக்கு உபயோகப்படும். தெருவோரத்தில் ஓலையால் வேயப்பட்ட சாப்பாட்டுக் கடையிலிருந்து சாப்பாடு சுற்றிவருவான். அவன் செருப்பைத் தைத்துக் கொடுக்கும்வரை தனது வாடிக்கையாளரை அமரச்செய்யும் செங்கம் பளமாகப் பயன்படுத்துவான். வெயில் அதிகரிக்கும்போது அவற்றை நிலத்தில் பரவிவிட்டு பஞ்சணையாக்கி அதில் நித்திரை செய்வான்.

ஹிப்பிக்கு அவனை மிகவும் பிடித்திருந்தது. ஆவலுடன் அவனுடைய செய்கைகளை அவதானித்தான். 'இவன் எதனையுமே யாசிக்கவில்லை. ஆனால் வேண்டியதெல்லாம் இடைக்கிறது' தானும் அந்தச் செருப்புத் தைப்பவனுக மாறிவிட அவனுடைய வாழ்க்கைமுறையில் ஒன்றிவிட அந்த ஹிப்பி விரும்பினான். முதல் நாள் மாலை அவன் வேறு சிலருடன் சேர்ந்து கோயிற் படியில் பிரசாதத்திற்காகக் கையேந்தி நின்றான். அவர்களிற் சிலர் உடல் ஆரோக்கியம் உள்ளவர்கள், வேறுசிலர் கண்தெரியாதவர்கள், இன்னுஞ் சிலர் அங்கக் குறைபாடுடையவர்கள். ஆனால் எல்லோருடைய முகத்திலும் பசியின் தாண்டவம் துலியமாகத் தெரிந்தது. மாலை வேளையில் அவர்களிற் சிலர் கோயில் வாயிலில் பிச்சைப் பாத்திரங்களுடன் அமர்ந்திருப்பார்கள், கோயிலிலிருந்து பிரார்த்தனை முடிந்து வெளியே வரும் பக்தர்கள் சிலர் நாணயக் குற்றிகளை முதுகு வளையாமல் வீசிச் செல்வார்கள். பிச்சைக்காரர்களின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்து அந்நாணயங்கள் பாத்திரங்களில் விழும். கண் தெரியாத பிச்சைக்காரர்களின் பாத்திரங்களுக்கு அருகில் விழும் நாணயங்களை எடுத்து அவனுடைய பாத்திரத்தினுள் போடும் ஒரு காருண்யத் தன்மை மற்றைய பிச்சைக்காரர்களுக்கு இருந்தது. அந்த ஹிப்பி அச் சூழலுக்குத் தன்னையும் இசைவுபடுத்தி அப்பிச்சைக்காரர்களிடமிருந்து வேறுபடுத்த இயலாத வாறு அவர்களுடன் ஒன்றிவிட்டான். அன்று மாலை கோயிற் பூசாரி நல்ல நிலையில் மகிழ்வுடன் காணப்பட்டார். ஆண்டவனுக்குப் படைத்த சர்க்கரைப் பொங்கலை அள்ளிவந்து அவர்களுக்கு வழங்கினர். அதை உண்டபின் வீதியோரத்திலிருந்த தண்ணீர்ப் பைப்பில் வயிறுமுட்டத் தண்ணீரைக் குடித்துவிட்டு கோயில் வாயிலில் படுத்துத் தூங்கினான் அந்த ஹிப்பி.

அதிகாலையில் கண்விழித்தபோது தோழில் ஒரு சாக்கைச் சுமந்தபடி செருப்புக்கட்டி வந்து கொண்டிருப்பதை கண்டான். வேப்பமரக் கிளையின் கீழ் பட்டறையைப் பரப்பி அமர்ந்தான். சூரிய ஒளியில் குளித்துக்கொண்டு பச்சைப் பசேலென்றிருந்த அந்த வேப்பமரம் காவியேறிய மதிற் சுவர்மேல் தண்மையான நிழலைப் பரப்பியது. அந்த இடத்தின் இயற்கைத் தன்மையைப் படுத்த நிலையிலேயே ஹிப்பி அனுபவித்து மகிழ்ந்தான். எவரும் எதனையும் சட்டைசெய்ய வில்லை. தூசிகள், அசுத்தங்கள், போக்குவரத்து நெரிசல்கள் — பாதசாரிகளும், சைக்கிலோட்டிகளும் உரக்கச் சத்தமிட்டுக் கதைத்தபடி சென்றார்கள். ஹிப்பி இவற்றையெல்லாம் கூர்ந்து அவதானித்தபடி படுத்திருந்தான்.

செருப்புக்கட்டி கரையில் சப்பாணமிட்டு அமர்ந்து தலையைக் குனிந்து தனது கூரிய கத்தியால் தோலை வெட்டி மெழுகு பூசப்பட்ட நூலைக் கொண்டு சிறிய குத்தூசியால் தைத்துக் கொண்டிருந்தான். அவனருகில் சிறிய தகரக் குவளை யொன்றிருந்தது. வெட்டிய தோற்துண்டுகளை அத்தகரக் குவளையிலிருந்த நீரினுள் அமிழ்த்தி மென்மையாக்கி அதனை சிறிய உருக்கு உலக்கை யொன்றினால் அசுரத்தனமாகக் குத்திப் பதப்படுத்தினான். இடையிடையே சுவரிற் சாய்ந்து ஓய்வெடுத்துக் கொண்டு தன்னைக் கடந்து செல்லும் கால்களை அவற்றிலுள்ள செருப்புக்களை, சப்பாத்துக்களை அவற்றிலுள்ள பொத்தான்களை, புதிய கொழுக்கிகளை, நவீன பக்கிள்களை ஒரு கணப் பார்வையில் மிகவும் நுணுக்கமாக அவதானித்து மனத்திற் பதித்துக்கொள்வான். அவனைப் பொறுத்தவரை உணவு கூட அவனுடைய இரண்டாம் பட்ச தேவையாகவே தெரிந்தது. வளவிலிருந்த சாப்பாட்டுக் கடையிலிருந்து ஓர் இளம் பையன் அவனுக்கு பணிசும், தேநீரும் கொண்டுவந்து கொடுப்பான். ஆனால் அவற்றிற் கூட அவன் அதிகளவு அக்கறை செலுத்துவதில்லை. ஒரு கடமைக்காக அவற்றை உள்ளே தள்ளுவான். நீண்ட நேரமாக அவனுக்கு வேலை வராதிருந்தால் கலைக்குமேலே கவிந்து மலர்மாரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறியும் வேப்பமர உச்சியை நோக்குவான். அந்நேரத்தில் எவ்விதச் சிந்தனைகளுமின்றி நிச்சலனமான முகத்துடன் அவன் தோற்றமளிப்பான். அந்நேரத்தில் வரும் வேலைகளைச் சில போது ஒரு தலையசைப்பின் மூலம் நிராகரித்து விடுவது முண்டு. மற்றையபோது மிகுந்த அக்கறையுடன் பட்டிகளைத் தளர்த்தியோ அல்லது குதிப் புறங்களைச் செப்பனிட்டோ கொடுத்துவிட்டு தனது கூலிக் காகக் காத்திருப்பான். அவன் மிகவும் பொறுமையானவன். அவனுடைய வாடிக்கையாளர் தமது பணப்பையைத் திறந்து நாணயங்களைத் தேடியெடுக்க அதிக நேரம் எடுப்பதுண்டு. அவர்கள் கொடுக்கும் கூலி போதாதிருந்தால் நாணயம் வாங்கிய கையை மூடாமல் ஏந்திய நிலையிலேயே வைத்திருப்பான். சிலர் இன்னுஞ்சில நாணயக் குற்றிகளைப் போடுவார்கள். வேறுசிலர் எதுவுமே பேசாமல் திரும்பிச் சென்றுவிடுவதுமுண்டு.

■

அவன் அந்த அசாதாரண அளவுள்ள வார்ச்சப்பாத்தைத் தைக்கும்போது அவன்கொடுத்த சுவரொட்டியில் உட்கார்ந்து கொண்டு அவன் செய்யும் வேலையைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான் ஹிப்பி. வண்ணத் திரைப்படத்தில் தோன்றும் ஒரு கதாநாயகனைப் போன்று மிகுந்த நளினத்துடன் அவன் வேலை செய்துகொண்டிருந்தான். ஹிப்பி வெறுந்தரையிலேயே இருக்கப் பழகியவன் சுவரொட்டியின் மேல் இருப்பது ஆணியடித்த பலகையொன்றில் இருப்பது போல அவனுக்கு உறுத்தியது. அவனுடைய குருவின் போதனை அது. ஹிப்பி ஊரூராக அலைந்து திரிந்தபோது பௌரஸ் யோகிகள் அவ்வாறான ஆணியடித்த பலகையில் அமர்ந்து தியானம் செய்வதைக் கண்டிருக்கிறான். அலகாபாத்தில் கும்பமேளாவின் போது லட்சக்கணக்கான பக்தர்கள் கங்கா, ஜமுனா நதிகளில் மூழ்கித் தியானத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டிருக்கிறான். காயாவில் ஒரு பக்தன் தனது அலகுகளினூடாக ஓர் கூரிய ஊசியைச் செருகி, நாக்கிற் கூடச் சிறுசிறு செதில் வேல்களைச் செருகிக் கொண்டு மிகவும் அமைதியான முறையில் தனது வேண்டுதலை நிறைவேற்றிக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறான். அவர்கள் மத்தியில் ஒரு சாது முற்பிறப்பில் தனது சகோதரனையிருந்தவனென்று ஒரு பெரிய புளியைச் சொல்லிக் கொண்டு அதனை அணைத்தவாறு தியானம் செய்தார். அந்தப் புளி ஓர் ஆட்டுக்குட்டியைப் போன்று மிகவும் சாதுவாக அவருடைய பக்கத்தில் நின்றது. இன்னுஞ் சிலர் கயிறுகளைப் பிடிப்பதுபோல நாகபாம்புகளை அவற்றின் தலையருகில் இறுகப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். நெருப்பினைத் தின்பவர்களும், நீண்ட கத்திகளை முழுங்குபவர்களும், கண்ணாடித் துண்டுகள், இரும்பு, ஆணிகள் என்பவற்றை மென்று சுவைத்து உண்பவர்களுமிருந்தார்கள். இன்னுஞ்சில யோகிகள் உணவோ, நீரோ எதுவுமின்றி ஆடியசையாத சமாதிநிலையில் யாககுண்டத்தில் இரவு பகலாகத் தம்மைச் சுற்றி எரியும் நெருப்புக்களைப்பற்றிக் கூடக் கவலைப்படாது யாகஞ் செய்தார்கள்.

இவ்வாறான அற்புதங்களை நோக்கும்போதெல்லாம் அவன் அதிசயத்தில் மூழ்கிப்போவான்.

அவன் அந்தச் செருப்புக் கட்டியுடன் உரையாட விரும்பினான். தனது காதிற் செருகியிருந்த பீடியொன்றை எடுத்து அவனிடம் நீட்டினான். ஆனால் அந்தச் செருப்புக்கட்டி அதனை வாங்க மறுத்தான்.

'பரவாயில்லை, வாங்கு. இது உனக்குப் பிடிச்சும். நல்ல பீடி கிளிபீடி... ஒரு தம் அடித்துப்பார்' என்றான் ஹிப்பி.

தனது கன்வேஸ் பையினுள் தேடி தீப்பெட்டியை எடுத்தான். இருவரும் சில நிமிடங்கள் எதுவுமே பேசிக் கொள்ளாமல் அமைதியாகப் புகைத்தார்கள்.

ஹிப்பி உரையாடலை ஆரம்பித்தான். 'வேப்பமரம் உன்மீது மலர்மாரி பொழிகிறது'

செருப்புக்கட்டி நிமிர்ந்து பார்த்தான். பின்னர் மெதுவாகச் சிரித்துக்கொண்டே வெளிறிப்போன தனது கிளிசல் கோட்டை உதறினான், பின்னர் தலைப்பாகையைக் கழற்றித் தட்டினான். அந்தத் தலைப்பாகை அவனை வெய்யில், பனி, மழை எல்லாவற்றிலுமிருந்து காப்பதுடன் அவனுக்கு ஒரு ராஜ கம்பீரத்தையும் கொடுத்தது.

'நாள் முழுவதும் மலர்மாரி பெறுவதற்கு நீ ஆசீர்வாதம் பெற்றிருக்கிறாய்' என்றான் ஹிப்பி.

செருப்புக்கட்டி மெதுவாகத் தலையை அசைத்தான். 'என்னால் இந்தப் பூக்களைச் சாப்பிட முடியுமா? வீட்டிற்கு இவைகளை எடுத்துச் சென்று சோற்றுப் பானையிற் போடுமாறு மனைவியிடம் கொடுக்க முடியுமா? நன்றாக உண்டு கொழுத்த வயிற்றின் மேல் விழுமானால் அது வேறு விடயம் — சொர்க்கத்தில் வாழும் கடவுள்களின்மேல் இம் மலர்மாரி பொழியலாம். அதை ஏற்று மகிழும் தகுதி அவர்களுக்கு உண்டு. ஆனால் நான் அதற்கு ஏற்றவனல்ல'

'உனக்குக் கடவுள்மீது நம்பிக்கை இருக்கிறதா?' ஹிப்பி கேட்டான்.

இந்தக் கேள்வி அவனைத் திகைப்படையச் செய்தது. ஹிப்பியின் மனதில் இந்தக் கேள்வி எவ்வாறு தோன்றியிருக்கக் கூடும்? இந்த விஞ்ஞான வாடிக்கையாளன் அவனைச் சோதனைக்குள்ளாக்கினான். இவனுக்குப் பதிலளிப்பதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

செருப்புக்கட்டி கோயிலை நோக்கினான். பின்னர் தனது கைகளிரண்டையும் அகல விரித்துக் கொண்டு 'அவன் சிலபோது எங்களைக் கவனிப்பதில்லை. அவனால் எப்படி முடியும்? அவன் எத்தனையெத்தனை பேர்களையெல்லாம் கவனிக்க வேண்டியிருக்கிறது' மனக்கண்ணின் முன்னால் கடவுளின் படமொன்று தெரிந்தது. கோடானுகோடி யாசகர் அவன்முன் யாசித்து நிற்பது போற் தெரிந்தது. அவன் தொடர்ந்தான்:

'எங்களுடைய பெரிய அதிகாரி கலெக்டரை எடுத்துக் கொள்ளுங்கள் — இங்குள்ள எல்லோரும் எந்நேரமும் அவரைக் காணமுடியுமா? அல்லது ஒவ்வொருவராகக் கண்டு பேசி அவர்களுடைய வேண்டுதல்களை நிறைவேற்ற முடியுமா? ஒரு சாதாரண மனித அதிகாரியே இவ்வாறான பிரச்சனைகளை எதிர் நோக்கும்போது இவ்வுலகிலுள்ள அத்தனை பேரையும் ரட்சிக்கும் இறைவன் எவ்வளவு சிரமப்பட வேண்டும்: அவருக்கு எத்தனையோ சிந்தனைகள், பிரச்சனைகள் இருக்கின்றன' அவன் கைகளை வானேக்கி — சொர்க்கத்தை நோக்கி உயர்த்தி வணங்கினான். கடவுளின் வேலைத்திட்டங்களையும் அவற்றின் சிக்கல் தோற்றப்பாடுகளையும் பற்றி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிப்பி சிந்தித்தான். அந்த மனிதன் தொடர்ந்தான். 'அத்துடன் அவர் ஒரு போதும் துயில்வதுவில்லை. இந்தக் கோயிலுள்ள பண்டிதர் ஒருநாள் தனது சொற் பொழிவின்போது குறிப்பிட்டது நினைவில் வருகிறது. அதாவது கடவுள்கள் இமைப்பதில்லை. இமைகளை மூடித் துயில்வதுமில்லை, அவர்களால் எப்படி முடியும்; இமைக்கும் கணப்போதில் எத்தனையோ கூடாத செயல்கள் நிகழ்ந்து விடக் கூடுமல்லவா? கிரகங்கள் தங்கள் பாதையைவிட்டு விலகி ஒன்றுடனொன்று மோதி நொருங்கிச் சிதறிவிடக் கூடும். வானில் நெருப்புத் தோன்றி எல்லாவற்றையும் சம்காரம் செய்துவிடக் கூடும். அல்லது துர்த் தேவதைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு மனித குலத்தையே நாசம் செய்துவிடக்கூடும்.

கடவுள் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்துவிடக்கூடிய இவ்வளவு துர் நிகழ்ச்சிகளையும் ஹிப்பி ஒரு தடவை கற்பனைக் கண்கொண்டு நோக்கினான். அந்த மனிதன் தொடர்ந்தான். 'நான் கடவுளை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணித்தியாலமும் வேண்டுகிறேன். எப்போதாவது அவருக்குச் சிறிய ஓய்வு கிடைக்கும்போது அவர் என்னுடைய வேண்டுதலைச் செவிமடுப்பார். அதுவரைக்கும் எனது வேண்டுதல் தொடர்ந்து கொண்டே இருக்கும்'

'அது என்ன வேண்டுதல்?' என்று ஹிப்பி கேட்டான்.

'நிலைபேறான வீடு. என்னை இங்கிருந்து எடுத்துச் செல்லுமாறு கெஞ்சுகிறேன். ஒருநாள் இது நடந்தே தீரும்' என்றான்.

'ஏன், உயிருடனிருப்பது உனக்கு மகிழ்ச்சியளிக்கவில்லையா?' ஹிப்பி கேட்டான்.

'உங்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை' என்ற செருப்புக்கட்டியின் பார்வையில் அவனைக் கடந்துசென்ற காலொன்று கணப்போதில் பட்டது. அவன் உரக்கக் கத்தினான். 'ஹாய்! அந்த பக்கிள் அறுந்து விட்டது, கொஞ்சம் நில்லுங்கள், நில்லுங்கள்' — ஓர் இளம் மாணவன் — அந்தக் கால் ஒரு கணம் தாமதித்தது; மறுகணம் அங்கிருந்து நகர்ந்துவிட்டது.

'பாருங்கள், இந்த இளைஞர்களுக்கெல்லாம் என்ன வந்து விட்டது; அவர்கள் எதனையுமே கவனிப்பதில்லை. வீணான பழக்கங்கள், அந்த பக்கிள் அவன் வீட்டை அடையுமுன் அறுந்து விழுந்துவிடும், அவன் அந்த வார்ச்சப்பாத்தைக் கழற்றி எறிந்துவிட்டு புதிய சோடியொன்றை வாங்கிக் கொள்வான். இதுதான் இன்றைய புதுமையோ? ஐந்து பைசா செலவளித்தால் இன்னும் ஒரு வருடகாலத்திற்கு அது அசைவின்றி இருக்கும். ஆழ்ந்த பெருமூச்சொன்று விட்டான். பின்னர் தனது சாக்கிலிருந்து சில செருப்புக்களை வெளியிலெடுத்தான். அவைமிகவும் பழையவை. 'இவற்றையெல்லாம் நான் தெருவோரங்களிலும், சாக்கடைகளிலும் பொறுக்கினேன். இவனைப் போன்ற இளைஞர்கள்தான் இவற்றை வீசியெறிந்திருப்பார்கள். நான் நீண்டகாலத்திற்கு இவற்றை வைத்திருப்பதில்லை: சிறிய பழுதுகளைச் செப்பனிட்டு மெருகூட்டி வைத்திருப்பேன்.

'யார் இவற்றையெல்லாம் வாங்குவார்கள்;' ஹிப்பி கேட்டான்.

'ஓ! அது யாராகவுமிருக்கலாம். கட்டிடங்கள் ஏதாவது கட்டும்போது சீமெந்து வேலை செய்பவர்கள் தங்கள் கால்களைப்

## சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா [மலர் உட்பட] | 12 — 00 |
| தனிப்பிரதி | — 75 |
| இந்தியா, மலேசியா (தபாற் செலவு உட்பட) | 20 — 00 |

பாதுகாத்துக் கொள்வதற்காக வாங்குவார்கள். எப்படியோ ஒரு நாளுக்கு ஐந்து ரூபா உழைப்பேன். என்னை நம்பி இரண்டு வயிறுகள் வீட்டில் காத்திருக்கின்றன. இப்போது நாட்கள் மிகவும் மோசமாக இருக்கின்றது. எனது உழைப்பு சிலபோது இருவேளைச் சாப்பாட்டிற்கே போதுவதில்லை. ஆண்டவன் இப்பிறப்பில் என்னைத் தண்டிக்கிறான். நான் பொறுமையாகக் காத்திருக்கிறேன்'

'உனது அடுத்த பிறப்பில் என்னவாகப் பிறக்கவேண்டுமென விரும்புகிறாய்?' ஹிப்பி கேட்டான்.

செருப்புக்கட்டி திடீரென்று உணர்ச்சிவசப்பட்டு நிமிர்ந்து எச்சரிக்கையாக அமர்ந்தான். ஆண்டவனே நேரில்வந்து அவனை இந்தக் கேள்வியைக் கேட்பது போல இருந்தது. சிறிது நேரச் சிந்தனையின் பின், 'இந்த உலகில் மீண்டும் பிறப்பதை நான் விரும்பவில்லை. யாருக்குத் தெரியும் சிலபோது அவர்கள் என்னை நரகத்திற்கு அனுப்பிவிடக்கூடும். ஆனால் நரகத்திற்குப் போவதை நான் விரும்பவில்லை'

'அப்படி உன்னை நரகத்திற்கு அனுப்பினால் நீ என்ன செய்வாய்?' ஹிப்பி கேட்டான்.

செருப்புக்கட்டியின் மனதில் ஆண்டவன்தான் ஹிப்பி வடிவில் வந்து தன்னைச் சோதிக்கிறாரோ வென்ற ஐயம் மீண்டும் தலை தூக்கியது. மிக எச்சரிக்கையுடன் பதில் கூறினான். 'இப்போது எனது அங்கங்களெல்லாம் தளர்ந்துவிட்டன. ஆனால் எனது வாலிபப் பிராயத்தில் இவைகளெல்லாம் முறுக்கேறி இருந்தன. ஒருவனுடன் ஏற்பட்ட தகராறினால் மதுவெறியிற் சென்று அவனுடைய குழந்தைகள் தூக்கத்திலிருக்கும் போது அவனுடைய குடிசைக்குத் தீ வைத்தேன். அந்த மனிதன் எனது பணத்தைக் கொள்ளை அடித்துவிட்டு எனது மனைவியைக் கற்பழிக்கவும் முயன்றிருக்கிறான். அவனுடைய குடிசைக்குத் தீவைத்த வேகத்துடன் ஏனை எனது மனைவியின் மீது ஏற்பட்ட தவறான சந்தேகத்தினால் அவளை அடித்தேன், உதைத்தேன். அவளுடைய இடது கண் மீது விழுந்த அடி அந்தக் கண்ணைக் குருடாக்கி விட்டது. அந்த நாட்களில் என்னிடம் போதிய பணமிருந்தது, அந்த நாட்களில் ஒரு ரூபாவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு போத்தல்கள் வாங்கலாம். எனக்கு ஒரு மகனிருந்தான். அவனுக்குத் திருமணமாகி ஒரு குழந்தை பிறந்தது. திடீரென்று ஒருநாள் என்னுடைய மகன் இறந்துவிட்டான். அவனுடைய மரணம் என்னை அடியோடு மாற்றிவிட்டது. இப்போது அவனுடைய குழந்தை தான் என்னுடன் வீட்டில் இருக்குறது'

'மேலும் உன்னிடம் கேள்விகள் கேட்க நான் விரும்பவில்லை' என்ற ஹீப்பி தொடர்ந்தான். 'ஆஞல் நானும் குடிசைகளுக்கு, கிராமங்களுக்கு, நகரங்களுக்குத் தீவைத்தேன், எரித்து நாசமாக்கினேன். கண்முன் தெரிந்த எதனையுமே விட்டுவிடாமல் சுட்டுப் பொசுக்கினேன்.

செருப்புக்கட்டி கண்களை அகல விரித்து ஆச்சரியத்துடன் அவனை நோக்கினான். 'எங்கே, எப்போது?'

'சென்ற அவதாரத்தில், முந்திய பிறப்பில். என்னுடைய அடுத்த உலகம் நரகமா சொர்க்கமா என்பதை நீ ஊகித்துக் கொள்ளலாம்' எனறான் ஹிப்பி.

செருப்புக்கட்டி நிகைத்துப் போய் எதுவும் பேசாதிருந்தான்.

'நீ எரித்த குடிசையின் சொந்தக்காரன்மீது குறைந்த பட்சம் உனக்குக் கோபமாவது இருந்தது. ஆஞல் நானெரித்த வைகள் யாருடையவையென்பது கூட எனக்குத் தெரியாது. அவர்களை நான் முன்னெப்போதும் பார்த்ததுகூட இல்லை. முன்பின் தெரியாத அப்பாவி மக்களையெல்லாம் கொன்று குவித்தேன்'

'அப்போ ஏன், ஏன் அப்படிச் செய்தீர்கள்?' ஹிப்பி பதில் சொல்லத் தயங்கினான்.

'இன்னொருநாள் சொல்கிறேன்' என்று கூறிவிட்டு எழுந்து நின்றான். வார்ச்சப்பாதிதினுள் காலை நுழைத்தான், 'நான் மீண்டும் வருவேன்' என்று சொன்னான். எங்கே போவது எங்கே தங்குவது என்ற எவ்வித இலக்குமின்றிப் போகத் தயாரானான். செருப்புக்கட்டிக்கு இருபத்தைந்து பைசாக் கொடுத்தான். கன்வேஸ் பையினுள் கையைவிட்டுத் துழாவி தான் இவ்வளவு காலமும் பாதுகாத்து வைத்திருந்த பொக்கிசமான வெள்ளிச் சொரூபத்தை எடுத்தான்.

'இந்தா உனக்கு ஒரு பரிசு'

செருப்புக்கட்டி அதனைக் கூர்ந்து நோக்கினான். 'ஓ! இது துர்க்காதேவியின் சொரூபம். இது எங்கள் பெண் தெய்வம். இவள் உங்களைக் காப்பாற்றுவாள். அதுசரி நீங்கள் இதனை ஒளித்து வைத்திருந்தீர்களா?' என்று கேட்டான்.

ஹிப்பி ஒரு தலையசைவினுல் அதனை ஒப்புக்கொண்டான். 'எனக்கு இதனைத் தந்த யோகி கூட சிலவேளை இதனை ஒளித்து வைத்திருக்கக் கூடும்' என்றான்.

'இந்தாருங்கள், இதனை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். இது உங்களைக் காத்து ரட்சிக்கும்' என்ற செருப்புக்கட்டி அந்த வெள்ளிச் சொரூபத்தை அவனிடம் கொடுத்தான். அதனை மீண்டும் பெற்றுக்கொண்ட ஹிப்பி தனது நீண்ட காலை அகட்டிப்போட்டு மிக வேகமாக நடந்து சென்று விட்டான்.

'கடவுள்கூடச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது ஓடி ஒளிந்து கொள்கிறார்' செருப்புக்கட்டி வாய்விட்டுக் சொல்லிக் கொண்டான்.

நன்றி: 'பிளே போய்'



## வாயடைத்துப் போனேம்!

முருகையன்

'ஏன் நண்பா, மௌனம் எதற்கு?
என்று கேட்டிருந்தாய்
வாயடைத்துப் போனேம்
வராதாம் ஒரு சொல்லும்!
'திக்'கென்ற மோதல்—
திடுக்கிட்டுப் போனேம்!!

பொய் வதந்திக் கொள்ளி பொசுக்கென்று போய்ப்பற்ற
ஏற்ற வகையில்
இதமான நச்செண்ணெய்
ஊற்றி
அதில் ஊறவைத்த உள்ளங்கள் இல்லாமல்,
இத்தனை தீய எரிவு நடைபெறுமா?

எத்தனை தீய எரிவு — தலையுடைப்பு
குத்து வெட்டு, பாயும் குருதிக் குளிப்பாட்டு?

சற்று முன்னர் மட்டும் சகஜமாய்ச் சாதுவாய்ப்
பேசி இருந்த பிராணி
சடக்கென்று
வாரை இடுப்பாற் கழற்றி,
மனங் கூசாமல்
ஒங்கி விளாச ஒருப்பட்ட சிந்தையதாய்
மாறிவிட்ட விந்தை மருமம் என்ன?
சுர்ரென்று
சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?
கொள்ளை, திருட்டு, கொலைகள், கடையுடைப்பு,
பிள்ளை அரிவு, பிடுங்கல், வதை புரிந்து
சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?

ஒன்றும் எமக்குச் சரியாய் விளங்கவில்லை
'திக்'கென்ற மோதல் – திடுக்கிட்டுப் போனேமே!
வாயடைத்துப் போனேம்.
வராதாம் ஒரு சொல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனங்கள் உடைகின்றன

'கோப்பாய் – சிவம்'

மௌனம் அதுதான் இப்போதெல்லாம் அவனது பாஷை. அதிகமாக எங்கும் போவதில்லை. யாரோடும் அதிகம் பேசுவதில்லை. அமைதியாகத் தானும் தன்பாடுமாக யோசனையில் ஆழ்ந்திருக்கிறான்.

மௌனம்—

ஓ! இந்த மௌனத்தில்கூட எத்தனை இன்பம் இருக்கிறது! அவன் அந்த மௌனத்தின் இன்பத்தை சிறிது சிறிதாகப் புரிந்து — அந்த மகிழ்ச்சியில் திழைத்து வருகிறான். மௌனத்தின் பின்னணியில் அமைதியான இயற்கை அழகில் தன்னை மறந்து — சமூகத்தின் நெளிவு சுளிவுகளைச் சிந்தித்து — அதன் பின் ஒரு படைப்பை சிருஷ்டிக்கும் போது, அதில்தான் எத்தனை இன்பம்!

இயல்பாக அவன் அமைதியான சுபாவம் கொண்டவனல்ல! மிகவும் கலகலப்பான — எப்போதும் சிரித்த முகத்தோடு காட்சிதருகின்ற ஒரு இளைஞன் அவன். அவனருகில் எப்போதும் ஒரு கூட்டம் இருந்துகொண்டே இருக்கும். அவனில் — அவனது நடைமுறைகளில் — பேச்சுக்களில் எல்லாம் ஏதோ ஒரு கவர்ச்சி இருக்கும்.

ஆனால், இப்போது சில காலமாக அவனுக்குள்ளே ஏதோ ஒரு மாற்றம். இதை அவன் உணர்கிறான். தனக்கே புரியாத வகையில் தன்னிலேயே நிகழ்கின்ற அந்த மாற்றம் சூழ்நிலையின் மாற்றத்தால் தன்னில் நிகழ்கிறதா அல்லது தனது மாற்றத்தால் சூழ்நிலைகள் தடுமாறுகின்றனவா? என்று அவன் திகைக்கிறான்.

அவன் சிந்திக்கின்றான். இந்தச் சிந்தனைதான் இப்போது அவனது பொழுதுபோக்கு! விதவிதமான கேள்விகள், விசித்திரமான பிரச்சினைகள்... அவனுக்குள்ளே கிளர்ந்தெழும். தனக்குத்தானே கேள்விகளைக் கேட்டுக் கொண்டு அதற்கான விடைகளைத் தன் மனக் குகைக்குள்ளே தேட முயற்சித்து, தனக்குள் தான் மூழ்கி முக்குளித்து.....

சிந்தனை! சிந்தனை!! இந்த முடிவே இல்லாத சிந்தனைகள் அவனது பதிலே இல்லாத கேள்விகளுக்கான பதில்களைத் தேடி நீண்டு கொண்டேயிருக்கும்.

'இந்த மௌனத்தினைக் கைக்கொள்ளு முன் நான் எப்படி இருந்தேன்; இப்போது எப்படி இருக்கிறேன்' என்று அவன் நினைத்துப்பார்க்கிறான். தான் ஒரு உணர்ச்சிக்குவியலாயிருப்பதென் என்று அவன் ஆராய முற்படுகிறான். இப்போதெல்லாம் அவன் மிகவும் கலமாக உணர்ச்சிவசப்படுகிறான். கோபம், சோகம், இன்பம் இந்த உணர்வுகள் அவனை மிகவும் சுலபமாக ஆட்டிவைக்கின்றன.

வீதியில் போய்க் கொண்டிருக்கும்போது ஒருவர் வாழைப் பழத் தோலில் வழுக்கி விழுவதைக் கண்டு அங்கு நிற்கும் எல்லோரும் சிரிக்கும்போது இவன் மட்டும் சிரிக்காமல் நிற்கிறான். அங்கே புதிதாக ஒருவன் வந்தால் இவன்தான் விழுந்தவனை என்று நினைக்கக் கூடிய பிதத்தில் இவன் முகம் தொங்கிக் கிடக்கும். விழுந்தவனுக்காக இவன் மனம் வேதனைப்படும். அதே வேளையில் விழுந்தவன்மீது சற்றும் அநுதாபம் கொள்ளாமல் வேடிக்கை பார்த்து ரசிக்கின்ற மனிதர்கள் மீதும் கோபம். மறுகணம் அவன் தனக்குள் சிந்திப்பான். தான் ஏன் இவர்கள் மீது கோபப்படவேண்டும்? அதற்கு என்ன உரிமை இருக்கிறது? சிந்தனைகள் வளர, கேள்விகள் தொடர, அவன் நடந்துகொண்டிருப்பான்.

துயரம் தோய்ந்த ஒரு கதையை வானொலியில் அவனால் கேட்க முடிவதில்லை. சோகமான பாடல்களை அவனால் நிதானமாக ரசிக்க முடியவில்லை. துக்கம் தும்பும் கதைகளை வாசிக்கும் போது அவன் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கிறான். தான் எதற்காக யார் யாருக்காகவோ எல்லாம், வெறும் மாயைகளுக்கெல்லாம் கவலைப்பட வேண்டும்?

அவனைச் சூழ்ந்துள்ளவர்கள் தவறான வழியில் செல்லும் போது அவன் பொங்கி எழுகிறான். 'இது எந்த வகையில் நியாயம்?' என்று கேட்டு ஆத்திரத்துடன் கத்துகிறான். இதன் மூலம் எத்தனையோ பகைகளையும் சம்பாதித்துக் கொள்கிறான். ஆனால், 'தான் இவ்வாறு ஏன் நடந்து கொள்ள வேண்டும்? அவர்கள் எப்படி நடந்தாலென்ன? நான் நலமாக நடந்து கொண்டால் போதாதா?' என்று தன்னைத் தானே தடைபோட்டும் பார்க்கிறான். சிலவேளைகளில், அத்தகைய மனிதர்கள் அந்த அநீதியான வழியில் நடப்பதன் மூலம் மிகவும் வசதியான வாழ்க்கையைப் பெற்றுக் கொள்வதைக் கண்டு தான் பொறுமைப்படுவதால்தான் அப்படிப் பொங்கி எழுகின்றேனே என்று ஒரு கேள்வியையும் எழுப்புகிறான். மற்றைய கேள்விகளை விட இந்தக் கேள்வி மூலம் தன்னைத் தானே ஒரு உலுக்கு உலுக்கிவிடுவதையும் உணர்கிறான்.

'அப்படியும் இருக்கலாம்' என்று அவனது அடிமன உணர்வுகள் விடை இறுக்கும்போது அவன் ஒரு நிமிடம் கூனிக் குறுகிவிடுகிறான்.

மற்றவர்களுக்கு அவன் தன்னாலான உதவிகளைச் செய்யத் தயாராய் இருக்கிறான். எப்போதும் அவன் அப்படிச் செய்தும் வருகிறான். ஆனால், அவனது உதவிகளை எதிர்பார்த்து — அது கிடைப்பதாலேயே, மக்கு வேண்டிய மிகச் சிறிய வசதிகளைக் கூடச் செய்து கொள்ளாமல் அவனிலே தங்கி வாழ முயற்சிக்கின்ற அயலவர்களைக் கண்டு அவன் சிறி எழுகிறான்.

அவன் தான் செய்கின்ற உதவிகளை, பயன்கருதாது செய்கின்ற கர்மயோகமாக்கிப் பெருமை பாராட்ட நினைப்பதில்லை. தான் செய்கின்ற உதவிகளுக்காக — தனக்கொரு தேவை ஏற்படும்போது மற்றவர்களும் ஓடோடி வந்து உதவ வேண்டுமென்று அவன் எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான். ஆனால் அது தவறான நினைவு என்று புரிந்து கொண்டான்.

அவனது எதிர்பார்ப்புகள் நொருங்கிய போது வாழ்க்கையை மெல்ல உணர ஆரம்பித்தான். வாழ்க்கை என்பது என்ன என்று சிந்திக்க ஆரம்பித்தான். கேள்விகள் பிறந்தன. சிந்தனைகள் வளர்ந்தன. மௌனம் மலர்ந்தது. வாழ்வின் சகலத்தையும் துறந்து இந்த மௌனத்தில் ஆழ்ந்தாலென்ன என்று நினைத்தான்.

ஒன்றில், மற்றவர்களின் தவறுகளை மன்னித்து — அவர்களின் குற்றங்களைக் கண்டு கொள்ளாமல் வாழவேண்டும். அல்லது, தானும் மற்றவர்கள் போலவே, சுய நலமும், ஒடுங்கிய மனப்பான்மையும் கொண்ட வனாக வாழவேண்டும். இடைப்பட்ட தரத்தில்— மனிதன் என்ற மனிதனாக, மானிதத்தை நேசித்து வாழ முடியாதோ என்று ஏங்கினான்.

மௌனம் தொடர்கிறது. அவனை சில சக்திகள் இந்த உலக வாழ்க்கையில் இழுத்துக் கொண்டிருக்கின்றன. சில கடமைகள் அவனுக்காகக் காத்திருக்கின்றன. அவற்றையெல்லாம் விட்டு அவன் மௌனத்தில் ஆழ்ந்துவிட முடியுமா? எப்படியாவது இந்த மனித உருவங்கள் மத்தியில் மனிதனாக வாழ்தேயாக வேண்டும்.

அவனது மௌனம் கலைகிறது. அர்த்தமுள்ள அந்த நீண்ட மௌனத்தின் முடிவில் ஒரு புதிய வாழ்க்கை மலர்கிறது. ❋


❋ ரசாயனப் பொருட்கள்
❋ வர்ணப் பூச்சுக்கள்
❋ வாசனைத் திரவியங்கள்
❋ உபகரணப் பொருட்கள்

**எம்மிடம்**

நிதானமான விலையில் கிடைக்கும்

**யாழ்ப்பாணக் கமக்காரர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்**

புதிய இறக்குமதித் திட்டத்தின்கீழ் இறக்குமதி செய்ய வேண்டிய எல்லாவித சாமான்களையும் இறக்குமதி செய்து தருவோம்.

❋ **வியாபாரிகள் தொடர்பு கொள்ளவும்** ❋

உள்நாட்டு விளைபொருள் மொத்த கமிஷன் வியாபாரிகள்

**ஹைசன் பிறதர்ஸ்**

137, மலிபன் வீதி,
கொழும்பு-11.

தொலைபேசி: 20712




பார்க்கிறான். அந்த எதிர்பார்ப்பு முற்றிலும் நியாயமானதாகவே அவன் பரிபூரணமாக நம்புகின்றான்.

ஆனால், அத்தகைய சந்தர்ப்பங்கள் நேரும்போது தனக்கு மிகுந்த ஏமாற்றமே விளைவதை அவன் உணர்கிறான். தான் எதிர்பார்ப்பது போலத் தனக்கு உதவி புரிவதற்கு மற்றவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கவில்லை— தனக்குக் தைமாறு புரிவதற்கு அவர்கள் காத்துக்கொண்டிருக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டபோது அவன் தன்னைச் சமநிலைப்படுத்த முடியாமல் தவிக்கிறான்.

அவன் தனது ஆசாபாசங்கள், விருப்பு வெறுப்புக்கள் யாவற்றையும் மற்றவர்களிடம் வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்கிறான். தனக்கென்று எந்த ஒரு இரகசியத்தையும் அவன் வைத்துக்கொண்டதில்லை; அவனது செய்கைகள் யாவுமே வெளிப்படையான நடைமுறையாகவே இருக்கிறது. தனது ஒவ்வொரு செயலையும் தன் நண்பர்களுடன் கலந்து கொண்டே செய்கிறான். அதுபோலவே தனது அயலவர்கள், நண்பர்களின் செய்கைகளும் இருக்க வேண்டுமென அவன் எதிர்பார்க்கிறான். அவர்களுக்குள் எந்த ஒரு இரகசியத்தையும் வைத்திருக்காமல் தன்னோடு கலந்து பேசியே அவர்கள் தமது செயல்களைச் செய்யவேண்டுமென அவனது உள்ளம் பேராசையில் துடித்தது. தனது காதலன் தன்னிடம் பூரணமாகச் சரணாகதி அடைய வேண்டுமென விரும்பும் இளம் காதலியைப் போல அவன் நிறைய எதிர்பார்ப்புக்களோடு நட்புக்களை வளர்த்தான். ஆனால், அவர்கள் ஒவ்வொருவரும் தமக்குள் பல இரகசியங்களைப் பொதிந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் போது அவனது உள்ளம் உடைந்து சிதறுகிறது.

அவர்கள் தமது வாழ்க்கையைப் பற்றி மட்டும் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்; தமது வசதிகளை மட்டும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்; தமது மகிழ்ச்சிக்காக மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவன் அப்போதுதான் புரிந்து கொள்கிறான்.

தான் மாத்திரம் எதற்காக இந்த உலகம் பூராவையும் தனக்குள் சிந்திக்க வேண்டும். மற்றவர்களுக்காகத் தான் ஏன் கவலைப்பட வேண்டும்? அவர்களுக்காகத் தான் ஏன் கோபப்பட வேண்டும்? அவர்களைப் பற்றித் தான் ஏன் சிந்திக்க வேண்டும்?

அவனது இதயத்தில் குமுறி எழுகின்ற விடைகாண முடியாத வினாக்கள். அவற்றிற்கு விடை கண்டாக வேண்டுமென்ற சிரத்தையும் இப்போது அவனுக்கு இல்லை..... ஆனால், அவன் கேள்விகளைப் பிறப்பிக்கிறான். முடிவில்லாமல் சிந்திக்கின்றான். மௌனத்தில் ஆழ்கிறான், இப்போதெல்லாம் அந்த மௌனம் தான் அவனது மொழி.

அவன் அளவுக்கு அதிகமாக ஆசைப்பட்டான்; ஆனால், மிகக் குறைவாகவே பெற்றுக்கொண்டான். அவன் அளவில்லாத எதிர்பார்ப்புகளோடு வாழ்க்கையை நகர்த்தினான். ஆனால், அதிக ஏமாற்றங்களையே சந்தித்தான், அவன் இலட்சியக் கற்பனைகளை வளர்த்துக் கொண்டான். அத்தகைய ஒரு இலட்சிய வாழ்க்கையை நிதர்சனமாக வாழலாம் எனக் கனவு கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி
32816

எந்த வர்த்தகமானலும்
எழிலார்ந்த அச்சுக் கலையால்
ஏற்றம் பெறுவது இயல்பே.

அந்தச் சிறப்பிற்கு நீங்கள்
அணுகவேண்டியதும் எமையே.

அழகான
அட்டைப் பெட்டிகளை
ஆக்கித் தருவோர்

விசயா
அ
ழு
த்
த
க
ம்

209, பழைய சோனகத் தெரு,
கொழும்பு 12

# மிர்ஸா துர்சூன் — ஸாதே

ரஞ்சன்

பிரபல சோவியத் கவிஞரும் பொது வாழ்வுப் பிரமுகருமான மிர்ஸா துர்சூன்ஸாதே தாஜிக் சோவியத் சோஷலிசக் குடியரசின் தலைநகரான கஷான்பேயில் சென்ற செப்டம்பர் மாதம் காலமானார், இந்திய நாட்டுப் பாடல், ஆசியாவின் குரல், ஆப்பிரிக்கா, என்னுடைய சகோதரி, அமரஜோதி உள்ளிட்ட அவருடைய நன்கு பிரபலமான படைப்புக்கள் பல நாடுகளில் வெளியிடப்பட்டுள்ளன. ஆசிய, ஆப்பிரிக்க ஒருமைப்பாடு இயக்கத்தைப் பலப்படுத்துவதற்கு அவர் பெரும் பங்காற்றியுள்ளார். சோவியத் ஆசிய— ஆப்பிரிக்க ஒருமைப்பாடு கமிட்டியின் தலைவராக அவர் இருந்தார்.

''நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று என்னைக் கேட்டால் ''நான் உள்ளத்திலும் ரத்தத்திலும் ஒரு கம்யூனிஸ்டு, ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் ஒரு கம்யூனிஸ்டு'' என்று நான் கூறுவேன்.

இந்த சொற்களில்தான், சோவியத் தாஜிக் கவிதை இலக்கியத்தின் மூதறிஞர் மிர்ஸா துர்சூன் — ஸாதே தனது உலகக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தினர். 1911-ல் கராதாக் என்னும் கிராமத்தில் பிறந்த அவர் இளமையிலேயே வறுமையையும் துன்ப துயரங்களையும் அனுபவித்தார். அவருடைய தகப்பனார் ஒரு தச்சர். சகல கைவினைஞர்களைப் போலவே அவரும் தனக்குக் கிடைக்கும் வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியாமல் சிரமப்பட்டார்,

மிர்ஸாவின் வாலிபப் பருவம் சோவியத் தாஜிகிஸ்தானின் இளம் பருவத்தினருடன் ஒன்றிணைந்தது.

அக்டோபர் புரட்சி, கவிஞரை சிறகடித்துப் பறக்கச் செய்தது. முன்னேற்றமடைந்த ரஷ்ய இலக்கியத்திலிருந்து மிர்ஸா துர்சூன் — ஸாதே பெருமளவு கற்றுக் கொண்டார். வாய்மொழியாக வழிவழியாக வந்துள்ள நாட்டுப் பாடல் கருவூலத்தை கவிஞர் கவனமாகவும் பொறுமையாகவும் சேகரித்தார், புதிய பாமீர் நெடுஞ்சாலையையும், மாபெரும் ஃபர்காஞ கால்வாயையும் கட்டியமைப்பதற்குத் திரண்ட தொண்டர்களின் முழு மூச்சான முயற்சிகளில் அவரும் பங்கெடுத்துக் கொண்டார். மக்களுடனான இந்தத் தொடர்பு அவரது சிறந்த படைப்புக்களுக்கு ஆதர்சமாய் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும் போரின்போது கவிஞர், தமது மக்களின் அனுபவத்தையும் உணர்ச்சிகளையும் பகிர்ந்து கொண்டார். கஷ்டங்களுக்கு எதிரான போராட்டத்தில் அவர்களோடு சேர்ந்து புடம் போட்டெடுக்கப்பட்டார், தனது வலிமை முழுவதும் கொண்டு தாய் நாட்டிற்கு சேவை புரிந்தார்.

அவர் தாஜிக் கவிஞர்களில் மிகவும் விரும்பப்பட்டவரும் செல்வாக்குப் பெற்றவரும் ஆனார். அவர் தனது இலக்கிய நடவடிக்கைகளை அரசின் முக்கிய பணியுடன் இணைத்தார்.

கம்யூனிசம், மக்கள் ஆகிய இரு சக்திகளின் இணைப்பு, கவிஞரின் கலையார்ந்த உத்வேகமாய் அமைந்தது. அவர் இதை தனது கவிதைகளில் பிரதிபலித்தார். தனது உன்னதமான கவிதா அபிலாஷைகளையும் தனது அன்றாட உழைப்பையும் அதற்கு அர்ப்பணித்தார்.

அவர் நாடகங்களையும், கதை இயல்பான கவிதைகளையும், இலக்கியம் பற்றிய விமர்சனக் கட்டுரைகளையும் எழுதினார். 'இந்திய நாட்டுப்பாடல்' என்ற அவரது படைப்புக்கு அரசாங்கப் பரிசு வழங்கப்பட்டது, 'ஆசியாவின் குரல்' என்ற கவிதைத் தொகுப்புக்காகவும் 'ஹஸன் அர்பாகாஷ்' என்ற கவிதைக்காகவும் அவருக்கு லெனின் பரிசு கிடைத்தது. 1967-ல் சோஷலிச உழைப்பு வீரர் என்ற விருது வழங்கப் பெற்றார். ஜவஹர்லால் நேரு பரிசும் அவருக்கு வழங்கப் பட்டது. இந்தியாவின் ஒரு சிறந்த நண்பராகிய அவர், அந்நாட்டுக்குப் பல சந்தர்ப்பங்களில் விஜயம் செய்துள்ளார், மகாத்மாகாந்தியையும் ஜவஹர்லால் நேருவையும் சந்தித்துள்ளார்.

## உள்களும் வெளிகளும்

பாளையங்கோட்டையிலிருந்து, நவம்பரில் வெளியாகியிருக்கும் இந்தச் சிறுகதைத் தொகுப்பில் பதின்மூன்று சிறுகதைகள். மாலன், நகுலன், வண்ணநிலவன், வி. சகாதேவன், ஜோதி விநாயகம், கலா ஸ்ரீ. வண்ணதாசன், வி. சுப்புலக்ஷ்மி, பிட்சுமணி கைவல்யம், எஸ்.துரை, ஏ. ஏ. எச். கே. கோரி, சிவசு, பாலகுமாரன் ஆகியோர் எழுதியிருக்கிறார்கள்.

'.....முதலும் உச்சநிலையும் முடிவும் உள்ள கதைக் கருக்களை, பெரிய நாவல்களுக்கு உரியவைகளைக் கையாண்டு வெளிப்படுத்தும் சிறுகதைகளைத்தான் பெரும்பாலானவை (தமிழ் இலக்கிய இதழ்கள்) பிரசுரிக்கின்றன. சிறுகதைகளின் இலக்கணமொன்றிருப்பதை அறிந்து அதை மீறவும் தமிழ்மொழிக் கையாளலில் புதிய சோதனையையும் இத் தொகுப்பிலுள்ளவர்கள் புரிய முயன்றிருக்கிறார்கள்.....'

— இப்படி, சிவசு, 'அபிப்பிராயங்கள்' ல் குறிப்பிட்டிருக்கிறார்.

சா



# சோவியத் 'அதிருப்தியாளர்' களின் 'ரிஷி மூலம்'

எஸ். எஸ். எம். ஸவாஹிர்

சோவியத் யூனியனிலுள்ள 'dissidents' எனப்படும் 'அதிருப்தியாளர்கள்' பற்றி மேற்குலக பிரச்சாரகர்கள் கூறிவருவதைப் பார்க்கும்போது, பிரபல ருஷ்யக் கவிஞர் மிஹாயில் லெர்மண்டோவினது சிருஷ்டியொன்றில் வருகின்ற ஒரு பாத்திரமே நினைவுக்கு வருகின்றது. இந்தப் பாத்திரத்துக்கானவர் எதிரிலிருப்பவர் என்ன பேசுகிறார் என்பதற்குக் காது கொடுக்கவே மாட்டார்; தான் சொல்ல வந்ததையே சொல்லுவதற்கான முயற்சியையே உடும்பு போல இறுகப் பிடித்துக் கொண்டிருப்பார்.

'அதிருப்தியாளர்கள்' பற்றிய மேற்குலக பிரச்சாரகர்களின் கதையும் இவ்வாறுதான் உள்ளது.

அண்மையில் நியூயார்க்கில் ஒரு பிரபல அமெரிக்க பிரசுரகர்த்தாவினைச் சந்திக்கும் வாய்ப்பு ஒரு சோவியத் பத்திரிகாசிரியருக்கு ஏற்பட்டது. அவர் இவருடன் நடாத்திய குறுகிய சம்பாஷணையின் போது, விவாத நோக்குக்காக, இவர் சோவியத் யூனியனை எந்தெந்த விஷயங்களுக்காகக் குற்றஞ் சாட்டுகிறாரோ. அதே விஷயங்கள் அமெரிக்காவிலும் பாரிய அளவில் நடைபெறுவதை அவர் கட்டிக்காட்ட முயன்றார்.

'தமது கருத்துக்களை வெளியிட்டமைக்காக ஷரான்ஸ்கி என்ற 'அதிருப்தியாளர்' விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளாரே, ஹெல்சிங்கி உடன்படிக்கைக்கு இது இசைவானதுதானா?' என அந்தப் பிரசுரகர்த்தா பத்திரிகாசிரியரிடம் கேட்டார். போராடும் அமெரிக்கக் கவிஞர் அஸாதா ஷாகுருக்கு அமெரிக்க அரசு ஜீவிய கால சிறைத்தண்டனை விதித்துள்ளதே, இது மட்டும் ஹெல்சிங்கி உடன்படிக்கைக்கு இசைவானதா?' என பத்திரிகாசிரியர் பதில் கேள்வி போட்டார். ஆனால் அவர் அதற்குப் பதிலளிக்கவில்லை. புதிய கேள்வியொன்றினைப் போட்டார்.

'இன்னுமெரு 'அதிருப்தியாளர்' சகாராவன்ஸ்கியின் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளதே, இது நியாமா?' என்று கேட்டார் அவர்.

ருஷ்யாக்காரரும் விடவில்லை. 'கறுப்பர்களின் சிவில் உரிமை இயக்கப் போராளியும், மதத் தலைவருமான பென்ஜமின் சாவிஸ் தலைமையிலான 'பில்மிஸ்டன் டென்' குழுவினருக்கு அமெரிக்க அரசு 28 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதே, இது மட்டும் நியாயமானதா?' என்று பதில் கேள்வி போட்டார்.

இப்படியாக ஒரே கேள்விகள்..... ஆனால் எந்த ஒரு கேள்விக்கும் அவரிடமிருந்து பத்திரிகாசிரியருக்குப் பதில் கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சந்திப்புப் பற்றி நான் பத்திரிகையொன்றில் வெளியான செய்தியைப் படித்தபோது எனக்கு பெர்மென்டோவினது கவிதை நாடகத்தின் அந்தப் பாத்திரமே மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்தது.

ஒரு இன மக்களின் — நீக்ரோ மக்களின் நலன்களைப் பிரதி நிதித்துவப் படுத்தும் கவிஞர் 'அஸாதாஷாகுரை, வேறெவரையு மன்றி தமது மன உளைச்சல்களை மட்டும் வெளிப்படுத்தும் ஒரு சில அதிருப்தியாளர்களுடன் சமதைம்படுத்தி விவாதிக்க எம்மால் முடியாது.

மாஜி சி. ஐ. ஏ. ஏஜண்டான விக்டர் மார்செட்டியும், அமெரிக்க ராஜ்ய லோகாவின் மாஜி அதிகாரிகளில் ஒருவருமான ஜோன் மார்க்ஸும் 'சி. ஐ. ஏயும், அதனது உளவு வேலைகளும்' என்ற தமது நூலின் (லண்டன் பதிப்பு), 149-வது பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். 'கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள, குறிப்பாக, சோவியத் யூனியனிலுள்ள, 'அதிருப்தியாளர்' களுடன் தொடர்பு கொள்ளுவதில் சி. ஐ. ஏ. எப்போதுமே ஆர்வம் காட்டி வந்துள்ளது. கெடுபிடி யுத்தம் ஆரம்பித்த நாட்களில் சி. ஐ. ஏ. தனது சொந்த ஏஜண்டுகளை மட்டுமன்றி. பெருந் தொகையான பணத்தையும், 'இரும்புத்திரை' கோட்டையினுள் குட்டை குழப்புவதற்காக அனுப்பி வந்துள்ளது'

சோவியத் அதிருப்தியாளர்களின் 'நிஜ மூல' த்தை இதிலிருந்து சிறிது அறியக் கூடியதாகவுள்ளது. மேற்படி நூலிலிருந்து பல முக்கியமான பகுதிகள் அமெரிக்க தணிக்கையாளர்களின் 'வெட்டுக் கொத்து' களுக்கு இரையாகியுள்ள பொழுதிலும், இவர்கள் கைவைக்காத, அல்லது, கைவைக்க மறந்த சில பகுதிகள் மட்டுமே சி. ஐ. ஏக்கும் அதிருப்தியாளர்களுக்குமிடையிலான சம்பந்தா சம்பந்தங்களை நுஜூபடுத்த போதுமானவையாகவுள்ளன.

சோவியத் சட்டங்களின் கீழ் மட்டுமன்றி, அமெரிக்கச் சட்டங்களின் கீழும் இத்தகைய அதிருப்தியாளர்களுக்குத் தண்டனை வழங்க முடியும் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

உதாரணமாக, சில ஆண்டுகளுக்கு முன்னர், மாஜி ஜனாதிபதி நிச்சர்ட் நிக்ஸன் சீனாவுக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பாக, இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் பிரச்னை பற்றி அமெரிக்க காங்கிரஸ் ஆராய்ந்தது.

அமெரிக்கச் சட்டத்தின் பிரகாரம், அமெரிக்க அதிகாரிகளின் அனுமதியின்றி, வெளிநாட்டு அரசு ஒன்றுடனோ அல்லது அதிகாரியுடனோ பிறிதொரு நாட்டினை அமெரிக்காவுடன் தகராறுக்குட் படுத்தும் விதத்தில் அல்லது 'அமெரிக்காவின் நடவடிக்கைகளைத் தோல்வியுறச் செய்யும் விதத்தில்' தொடர்பு கொள்ளுவது மூன்று ஆண்டு சிறைத்தண்டனை அல்லது 5,000 டாலர்கள் அபராதம் விதிக்கத் தகுந்த குற்றமொன்றாகும்.

'சோவியத் யூனியனுள் வர்த்தகத் தொடர்புகளைப் பேண வேண்டாம்!' என்றோ அல்லது அதற்கு எதிராக வர்த்தகரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்' என்றோ மேற்குலகிடம் யாசித்து கோஷமெழுப்பும் 'அதிருப்தியாளர்' களை மேற்படி சட்டத்தின் கீழ் தண்டிப்பது நியாயமாகாதா?



## மறக்கப்பட்டனர்!

கந்தையர் வீட்டுக் கலியாண வீட்டில்
சிந்தை குளிரும் சிங்கார நிகழ்ச் சிகள்
கட்டாடி யார் முதல் கதிரேசன் கோயில்
பூசாரி யார் வரை பிரசன்ன மாயிருந்தனர்.

மேள தாளங்கள் அன்ன தானங்கள்
ஆரவாரங்கள் அங்கலாய்ப்புக்கள்
இடநெருக்கடி இளமை உணர்வுகள்
கல கலப்புக்கள் கை குலுக்கல் கள்.

சந்தை போற் கூட்டம் 'சாதிமான்' கந்தையர்'
வந்தவர் எல்லோரும் வகையாய் உண்டபின்
'பன்னுங்கு' போட்டுப் பந்தியும் முடிந்தது
பிலிமிலே எடுத்தார் பீதாம் பரத்தார்.

கலியாண வீட்டைக் கலை வண்ணமாக்கி
சிறக்கப் பணிசெய்து மறக்கப் பட்டவர்
போட்டோ எடுத்த பீதாம் பரமும்
சமையற் காரச் சங்கரப் பிள்ளையும்.

— சிவுச்சாரு

## செந்தாடி

ஜப்பான் கஷ்டதசையிலிருந்த ஒரு காலத்தின் வாழ்வைச் சித்தரிக்கும் குரோசவா படம். செந்தாடி வைத்தியரை ஊடுபாவாகக் கொண்டு கோர்க்கப்பட்ட கதை / கதைகள். வைத்தியரால் விடுதலையும் வாழ்வும் அளிக்கப்பெறுகிற அந்தச் சிறு பெண் (பெயர் மறந்து போய்விட்டது); சஹச்சி, அவன் மனைவி, வைத்தியசாலையின் சமையற் காரிகள் — இவர்களெல்லாம், மனதில் நின்று கொண்டு போக மறுக்கிறார்கள். பல இடங்களில் மனதைத் தொடுகிறது.

வைத்தியர் (ரொக்கிரோ மிஃபூனி). சில இடங்களில்— மட்டும் — சிவாஜியை நினைவு படுத்துகிறார். குடிமிக்கார ஆண்கள், கிமோனோப் பெண்களுடன், மழையும் பனியும் பூகம்பமும் மண்சரிவும் வருகின்றன. கொஞ்சம் 'பெரிய' படம். இட்டத்தட்ட ஒரு கிழமைக்குள் ஓடிவிட்டது.

"ச"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுவதற்கு உகந்த மை

'விங்க்' மை

எழுதுவதற்கு உகந்த பேனா

'விங்க்' போல்பொயின்ற் பேனா

நினைவிருக்கட்டும் V-I-N-K.

VINK

தயாரிப்பாளர்;
வெள்ளியம்பதி
அளவெட்டி.

ஏக விநியோகத்தர்:
கார்கில்ஸ் (சிலோன்) லிமிடெட்
கொழும்பு.

## எழுதுகிறார்கள்

'மல்லிகை' நவம்பர் இதழ் வாசித்தேன்.

'சாந்தன்' எழுதியுள்ள 'ஒரு நிலைப்பாடும் சில இலக்கியகாரரும்' என்ற இலக்கிய ஆக்கம் என்னை மிகவும் கவர்ந்தது. அது கட்டுரையல்ல. இலக்கிய சனாதனிகள் புனைகதைக்குக் கற்பித்துள்ள சட்டகத்தையும் எதிறி நிற்கின்றது. ஓர் எழுத்தாளனிடம் ஆண்மையும், எழுத்துச் சத்தியமும் இருத்தல் வேண்டும் என்று வலியுறுத்துபவன் நான். இளைய தலைமுறையைச் சேர்ந்த சாந்தனின் இந்த ஆக்கம், என் கருத்துக்கு ஓர் இலக்கியமாக அமைந்துள்ளது. ஒரே நாளில் அதனை மூன்று தடவைகள் வாசித்தேன். சாந்தனுக்கு என் உளமார்ந்த பாராட்டுகளைத் தெரிவியுங்கள்.

**எஸ். பொன்னுத்துரை**

தாங்கள் அன்புடன் அனுப்பிவைத்த 'மல்லிகை' பதின்மூன்றாவது ஆண்டு மலர் சென்ற வாரம் வந்து சேர்ந்தது. ஈழத்துத் தமிழ் இலக்கிய விமர்சகர்கள் அவர்களது சில போக்குகளை மறுபரிசீலனை செய்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தும் ஒரு போக்கு பரவலாகி வருவதை உணர முடிகிறது. அமைதியான, ஆனால், அதே நேரத்தில் சில இலக்குகள் பற்றித் தெளிவாக இயங்கும் ஆசிரியரையும் நான் உணருகிறேன். தங்கள் பணி நீடித்துச் சிறப்புற விளங்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**அசோகமித்திரன்**

டிசம்பர் மாத மல்லிகையில் வந்த சட்டநாதனின் 'மாற்றம்' என்ற சிறுகதை மிகமிகச் சிறந்தது. அது போதிக்கும் தத்துவத்திற்கு மேலாக அது மிகவும் சுவைத்தது. இதுபோன்ற கதைகள் இப்போது வருவதில்லை. எனது பாராட்டுக்கள்; வாசகர் அபிப்பிராயங்களை வெளியிட ஒரு பகுதி 'கண்ணாடி' என்னும் பெயரில் ஆரம்பித்தால் நல்லது.

**எஸ். சதாசிவம்**

டிசம்பர் மாத மல்லிகையை வாசித்து மகிழ்ந்தேன். இரசிகமணியின் படம் முகப்பை அலங்கரிக்கிறது. அவரிடம் பிரமிய உங்கள் அன்பு, அபிமானம் மெச்சப்படக் கூடியது.

அட.....சீ சொக்கா, தாகம் தீர்ந்தது, விமர்சனப் பாதை செப்பனிடப்பட வேண்டும், ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் அழியாத ஓர் ஓவியம், தூண்டில் வாசித்து இரசித்த பகுதிகள் அவை. தரமான கட்டுரைகள்; நிறைகளை நண்பர்களுக்கும் கூறுகிறேன்;

**ஏ. நீ. பொன்னுத்துரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் இதழில் சாந்தன் எழுதிய 18 குறிப்புகள் அடங்கிய 'ஒரு நிலைப்பாடும் சில இலக்கியகாரரும்' என்ற கட்டுரையைப் படித்துப் பார்த்தேன்.

மிக அழகாக எழுதி இருந்தார். ஆனால் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை அவர் எழுதியுள்ளவைகளை ஆறுதலாக நான் யோசித்துப் பார்த்தவரைக்கும் அக் குறைபாடுகளைச் சொல்வதற்கு அவருக்கு தார்மீக நியாயம் இருக்கின்றதா என என்னையே நான் கேட்டுக் கொண்டேன்.

இல்லை என்பதே எனது முடிவான பதிலாகும், காரணம் அதில் குறிப்பிட்டுள்ள பல மனிதப் பலவீனங்களில் சில சாந்தனிடமும் உண்டு. எனது நண்பர்கள் அவரைப் பற்றிச் சொல்லும் குறிப்புக்களினூல் இதை அறிந்து கொண்டுள்ளேன். இலக்கிய நண்பர்களிடமுள்ள சில மனிதப் பலவீனங்களை — அது மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்காதவரையும் — இப்படி வீண்டு பகிரங்கப் படுத்துவது சரியான செயல்தானு என்பதை இலக்கியத்தை உண்மையாக நேசிக்கும் நண்பர்கள் தீர்க்கமாக யோசிக்க வேண்டும்.

இப்படியே சிறிய சிறிய குறைபாடுகளையும் பலவீனங்களையும் பற்றிப் பேசப்படுமானூல் முடிவில் ஒரு சகோதர எழுத்தாளனை இன்னெரு எழுத்தாளன் சந்தித்துக் கதைப்பதற்கே அச்சப்படுவான். கடைசியில் இந்தத் தாக்குதல்கள் — குற்றச்சாட்டுகள் — இலக்கியத் தரத்தையும் மீறி அவதூறுப் பிரசாரத்தில் வந்து முடியவே செய்யும்.

இப்படியான பரஸ்பர பலவீனக் குற்றச் சாட்டுக்கு இனிமேலும் தளமமைத்துக் கொடுப்பது நல்லதா என்பதை மல்லிகை ஆசிரியர் யோசிக்க வேண்டும்.

விழிப்பாகவும் தகவல் தொடர்புகளை மிக உன்னிப்பாகவும் கவனித்து வரும் இந்த நாட்டுத் தரமான வாசகர்கள் இப்படியான போக்கை அனுமதிக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

என்னைப் பொறுத்தவரை சாந்தன் இலக்கியத் தரமான வளர்ந்து வரும் எழுத்தாளர் என்பது உண்மை. ஆனால் இப்படியான பேனுத் தாக்குதல்கள் அவரது எதிர்கால வளர்ச்சிக்கு நன்மை தருமா என்பதையும் அவர் யோசிப்பது நல்லது. இதை எழுதியதை விட, அவர் சில படைப்புக்களைப் படைத்திருக்கலாம் என்பது எனது அபிப்பிராயமாகும்.

தமிழ் நாட்டைப் போன்று இங்கும் எழுத்தாளர் மத்தியில் பரஸ்பர குற்றச்சாட்டுகளும் வெறுப்புணர்வைத் தூண்டும் தகவல் பரிமாற்றங்களும் நடைபெற்று வருவதைக் காணும்போது மனசு சங்கடப்படுகிறது. இதை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால் பின்னர் இலக்கிய உலகம்தான் அறுவடை செய்யவேணும்.

சென்ற தலைமுறை எழுத்தாளனிடம் என்ன குறைபாடுகள் இருந்தபோதிலும் சகோதர எழுத்தாளர்களை மதித்துக் கௌரவிக்கும் பண்பு இருந்தது உண்மை, ஈழத்து இலக்கியம் வளர்ந்து வருகிறது எனப் பெருமைப்படும் நமக்கும் இந்தப் பண்பு அவசியம் தேவை.

**எஸ். ஆர். லலீகரன்**



# சுதந்திர விமரிசன உலகமும் பல்கலைக் கழகமும்

அ. சண்முகதாஸ்

'தெணியான்' தொடக்கி வைத்த விவாத மேடை த. கார்ணகுலேந்திரன் வரை வளர்ந்து வருகின்றது. இதில் இடம்பெற்ற சில கட்டுரைகளில் யாழ். வளாகத் தமிழ்த் துறையினர் நடத்திய நாவல் நூற்றாண்டு விழா பற்றியும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அவற்றுட் சில தவறான கருத்துக்களைக் கண்ணுற்றபோது, யாழ். வளாகத்தில் நடைபெற்ற நாவல் நூற்றாண்டின் அமைப்பாளர் என்ற முறையில் நான் இவ் விவாத மேடையிலே கலந்து கொள்ள வேண்டுமென எண்ணினேன். முதலில் அந்த விவகாரத்தைப் பார்ப்போம். இது தொடர்பாக, எழுதிய கட்டுரையில்,

'இந்த நிலையில் யாழ் வளாகத்தில் நடைபெற்ற தமிழ் நாவல் நூற்றாண்டு விழாவின்போது வேண்டுமென்றே ஈழத்து இலக்கியகர்த்தாக்கள் புறக்கணிக்கப்பட்டதை நாம் தற்செயல் நிகழ்ச்சி என்று கருதிவிட முடியாது'

என்று குறிப்பிட்டுள்ளார். தனிப்பட்ட எழுத்தாளர் எவரையும் கௌரவிக்கும் நோக்கத்துடன் நாம் நாவல் நூற்றாண்டுக் கருத்தரங்கை ஒழுங்கு செய்யவில்லை. ஆனால் ஈழத்து எழுத்தாளர்களுடைய படைப்புகள் யாவும் கருத்தரங்கிலே விமரிசிக்கப்படுவதற்கு வசதியளித்திருந்தோம். அத்துடன் முடிந்தமட்டில் ஈழத்து எல்லா நாவலாசிரியர்களுக்கும் அழைப்பு அனுப்பியிருந்தோம். அசோகமித்திரன் பிறநாட்டிலிருந்து வந்த காரணத்தினுல் கருத்தரங்கிலே பங்கு பற்றுவதற்கு வசதி அளித்தோம். இதே வசதியை ஈழத்து எழுத்தாளன் ஒருவனுக்கும் வழங்கியிருக்கலாம் என்று விழா முடிவிலே ஜீவா குறிப்பிட்ட பொழுது எமது தவறினை ஏற்றுக்கொண்டோம். இது வேண்டுமென்றே நடந்ததல்ல. எனினும், ஜீவா இவ்விடயத்தைத் தொட்டுக் காட்டியது தொடக்கம் இன்று வரை ஈழத்து எழுத்தாளர்களில் யாரை நாம் அன்று கௌரவித்திருக்கலாம் என்பது பற்றித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான முடிவினை நான் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கிறேன் (தெளிவான முடிவு கூறக்கூடியவர்கள் எனக்கு ஆலோசனை வழங்கின் நன்றி உடையவனாவேன்). இக்கௌரவத்தினை இளங்கீரனுக்கா, கனக செந்திநாதனுக்கா, வ. அ. இராசரத்தினத்துக்கா, டானியலுக்கா, டொமினிக் ஜீவாவுக்கா எஸ். பொ வுக்கா, கணேசலிங்கனுக்கா, செங்கை ஆழியானுக்கா அன்று நாம் வழங்கியிருக்க வேண்டும்? வயதாலா, எழுதிய நாவல்களின் தொகையாலா அல்லது நாவல்களின் தரத்தாலா இத்தெரிவினை நாம் நடத்த வேண்டும்? அசோகமித்திரனை எப்படித் தெரிந்தெடுத்தீர்கள் என்று கேட்கக்கூடும். இந்திய தூதரகத்தின் மூலமாக இந்தியக் கலாசார நிறுவனமே அவரைத் தேர்ந்தெடுத்து எங்களுக்கு அனுப்பிவைத்தது. போக்குவரத்துச் செலவும் அவர்களுடையதே:

இனி, பல்கலைக்கழகத் தலைமை பற்றிய விடயத்துக்கு வருவோம் நாவல் நூற்றாண்டு விழா இறுதியில் 'ஜீவா கலாநிதிகள் முன்னிலையில் (அப்பொழுது ஒரு கலாநிதிதான் பிரசன்னமாயிருந்தார் என்பதை வாசகர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்) கூறிவைத்த கருத்து ஈழத்து எழுத்தாளர்களுடைய தார்மீக உரிமையையும் சுதந்திரத்தையும் ஈழத்து எழுத்தாளர்கள் உணர்ந்து பல்கலைக் கழகத் தலைமையைத் தாம் ஏற்கத் தயாராக இல்லை என்ற தன் நிலையை உணர்ந்து விட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது' இவ்வாறு வர்ணகுலேந்திரன் குறிப்பிட்டுள்ளார். ஈழத்து எழுத்தாளர்கள் இவ்வாறு தன்னுணர்வு கொள்ளவும் அதனை ஜீவாவின் குரல் மூலம் பகிரங்கப்படுத்தவுமாவது யாழ் வளாக நாவல் நூற்றாண்டுக் கருத்தரங்கு வழிசமைத்துக் கொடுத்ததையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்:

பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோர் விரும்பியோ விரும்பாமலோ இலக்கியத்துறையில் ஈடுபடாது இருக்க முடியாது (கலாநிதிகள் அல்லாதோரும் இலக்கியத் துறையில் ஈடுபடுவதால், அச்சொற் பிரயோகத்தை வேண்டுமென்றே தவிர்த்துள்ளேன்). அது எங்களுடைய கடமை; உத்தியோகம். நாம் படித்த இலக்கியம், மொழி முதலிய விடயங்களைப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு விரிவுரைகள் செய்வது மட்டுமன்றி, அறிவினைப் பரப்புதலுமே எம்முடைய கடமை என்று வாக்குறுதி செய்தே பல்கலைக் கழக உத்தியோகத்தைப் பெற்றுக் கொள்கிறோம். எம்முடைய நியமனக் கடிதத்தில் இது பற்றித் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு இலக்கியத் துறையிலே ஈடுபட்ட பல்கலைக்கழகத்தினரைத் தலைமையாகக் கொள்ளத் தலைப்பட்டவர்கள் யார்? ஏன் அவ்வாறு கொள்ளத் தலைப்பட்டனர்? இத்தியாதி விடயங்களை மறுபரிசீலனை செய்வது நல்லதுதான். அதற்காகக் கலாநிதிகளைக் கண்டபடி திட்டுவதால் என்ன லாபம்? 'விமரிசகர்கள் படைப்பாளிகளிலிருந்து தோன்றி விமர்சனப் பாதையைச் செப்பனிட வேண்டும்' என்ற நல்ல கருத்தினை யார் மறுக்கப்போகிறார்கள்: ஆக்க இலக்கியங்கள் படைக்கும் டொமினிக் ஜீவா, டானியல், எஸ். பொ. கனக செந்திநாதன், பெனடிக்ற் பாலன், அகஸ்தியர், முருகையன் ஆகியோரே விமர்சகர்களாகவுமுள்ளனர்.



'பல்கலைக்கழக மட்டத்தினரின் தனி ஆதிக்கம்' என்பது மூலம் தெணியான் என்ன கருதினார் என்று எனக்கு விளங்கவில்லை. பல்கலைக்கழகத்தினரை அறியாத அல்லது அவர்களை விரும்பாத எத்தனையோ ஆற்றலுள்ள எழுத்தாளர்கள் சுதந்திரமாகவும் தன்னம்பிக்கையுடனும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய நிலையில் பல்கலைக்கழக மட்டத்தினரின் தனி ஆதிக்கம் பற்றிக் குறிப்பிடுதல் பொருந்துமா? அன்றியும், குறிப்பிட்ட ஓர் எழுத்தாளக் கூட்டத்தினரிடையே இத் தனி ஆதிக்கம் ஏற்பட்டுள்ளதென்றால், இதனை ஏற்படுத்த ஆக்க இலக்கியகாரர் பலருமே காரணமாயிருந்தனர் என்ற கசப்பான உண்மையினையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்று இப்படிச் சிந்திப்பவர்கள் இன்னும் பத்து வருடங்களுக்கு முன்னர் யோசித்திருந்தால் நன்றாயிருக்குமென ரத்நசபாபதி அய்யர் கூறும் ஹேஸ்யம் பொருத்தமாகத் தான் எனக்குத் தென்படுகிறது.

விவாத மேடையிலே குறிப்பிடப்பட்ட ஒரு கருத்தினை நான் மிகவும் மனமுவந்து வரவேற்கிறேன். அதாவது, ஆக்க இலக்கியகாரன் இரண்டாந் தரமானவனாக, விமரிசகன் முக்கியஸ்தவனாக மாறும் நிலை அகல வேண்டுமென்பதே. இதனை ஆக்க இலக்கியகாரர்களே உணர்ந்து கொண்டால், பிரச்சினை மோசமாகாது. பல்கலைக்கழக மட்டத்தினரின் விமரிசனப் போக்கு ஆதிக்க மனப்பான்மை கொண்டதென்று கருதினால், தகுதியற்றது என்று கருதினால் அத்தகையோரை இனி விமரிசனக் கூட்டங்களுக்கு அழையாதிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் விமரிசனஞ் செய்துகொண்டே இருப்பார்கள். அது அவர்களுடைய தொழில்.

இறுதியாக ஒரு நாட்டின் பல்கலைக் கழகத்திலுள்ளவர்கள் வெறுமனே வளாகங்களுக்குள் முடங்கிக் கிடந்தால் அது அவர்கள் செய்யும் பெரிய துரோகமாகும். அவர்கள் சமூகத்துடன் தொடர்புடையவர்களாக இருக்க வேண்டும். இலங்கைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், இலக்கியத் துறையிலீடுபட்டவர்கள், பல்கலைக் கழகத்துக்கு வெளியேயுள்ள எழுத்தாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர் என்பதை எவரும் மறுபாரென நான் எண்ணவில்லை. அவ்வாறு தொடர்பு கொண்டதன் காரணமாகத்தான். மல்லிகை மூலம் அவர்களை விமரிசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இத்தகைய கருத்து மோதல் இன்னும் ஒருவரையொருவர் சரியாக விளங்கிக் கொள்ளவும், இனங்கண்டு கொள்ளவும், ஆரோக்கியமான விமரிசன நெறியை உண்டாக்கவும் வழிவகுக்குமென நான் எண்ணுகிறேன். இதனை ஏற்கெனவே சில நண்பர்கள் விவாத மேடையிற் குறிப்பிட்டுள்ளனர். விரும்பியோ விரும்பாமலோ கலாநிதிகள் சந்திக்கு இழுக்கப்பட்டுள்ளனர், ஆனால், நடந்தவற்றுக்கெல்லாம் கலாநிதிப் பட்டம் காரணமல்ல. பிரச்சினையிலே சம்பந்தப்படாத எத்தனையோ கலாநிதிகள் இருக்கின்றார்கள். பிரச்சினையோடு சம்பந்தப்பட்டவர்களை விமரிசனஞ் செய்வதென்றால், பெயர்களையும் அவர்களுடைய ஆக்கங்களையும் குறிப்பிட்டுச் செய்யலாம். இச் சுதந்திரம் விமரிசன உலகில் எல்லோருக்கும் உண்டென்றே நம்புகிறேன். ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1977: பதற்றத் தணிவுப் பாதையில் மற்றொரு மைல்கல்

ஸ்பார்தக் பெக்லோவ்

சரியான பொறுப்பு உணர்ச்சியுடனும், சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புக்களின் நலன்களுக்கு மதிப்பு அளிக்கும் முறையிலும் செயல் பட்டால், பதற்றத் தணிவால் எவ்வளவு பயனுண்டு என்பதைச் சென்ற ஆண்டு காட்டியுள்ளது. ஒருதலைப்பட்ச ஆதாயங்களைத் தேடுதல், ஆழ்ந்த சமுதாய மாற்றங்களை யிரும்பும் நாடுகளை அரசியல் ரீதியில் மிரட்டுதல் என்ற பார்வையைப் பின் பற்ற முயலும் எந்தத் தரப்பும் படுகுழியில் விழ நேரிடும் என் பதை, இந்த ஆண்டும் வலியுறுத்துகிறது.

பதற்றத் தணிவின் இரு அம்சங்களையும், சோவியத் — அமெரிக்க உறவுகளிலுள்ள போக்குகள் தெளிவாக்குகின்றன. இவ்வுறவுகள் சம்பந்தமான ஐந்தாண்டுகளுக்கு முன்பு வகுக்கப்பெற்ற சோட்பாடுகளுக்கு முரணை ஒரு நடைமுறையைப் பின்பற்ற, வாஷிங்டன் முயலுகிறது; எளவே, கேந்திர ஆயுதங்களுக்கு வரம்பு கட்டுதல் பற்றிய பேச்சுக்கள் சிரமமான பாதையில் செல்லுகின்றன. சமத்துவம், பரஸ்பர மரியாதை, ஒருவர் மற்றவரது நலன்களைக் கருத்தில் கொள்ளுதல், பரஸ்பரம் உள்விவகாரங்களில் குறுக்கிடாதிருத்தல் ஆகியவை மேற்கண்ட அடிப்படைக் கோட்பாடுகளாகும். இந்த இலையுதிர் காலத்திலிருந்து சோவியத் — அமெரிக்க உறவுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது; ராணுவ ரீதியான வாதங்கள், கெடுபிடிப் போர் மனப்பான்மை ஆகியவற்றால் ஆட்டுவிக்கப்படும் சக்திகளின் செல்வாக்கிலிருந்து விடுபட வேண்டிய தேவையை இப்போதுதான் வாஷிங்டன் உணர்ந்துள்ளது.

துரதிருஷ்டவசமாக, பதற்றத் தணிவு உணர்வானது, மத்திய கிழக்கில் கடுமையான சோதனைக்கு உள்ளாகியுள்ளது. அரை குறையான, தனிப்பட்ட உடன்பாடுகளைத் தேடும் அதே வேளையில், ஜெனிவா மாநாட்டின் மூலமான ஒரு சர்வாம்சத் தீர்வுக்கு முயலுவது கடினமாகும்.

சர்வநாச ஆயுதமான நியூட்ரான் குண்டின் உற்பத்தி, 1978-ம் ஆண்டில் தடுத்து நிறுத்தப்படும் என நம்புவோம். பொது மக்களுக்கும், பொது அறிவுக்கும், இதில் தீர்மானமான பங்கு உண்டு. நியூட்ரான் குண்டை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வெறி, சில ராஜ்யவாதிகளைப் பிடித்து ஆட்டுகிறது; ஆனால் நியூட்ரான் குண்டின் உற்பத்தியைத் தடை செய்ய வேண்டும் என்ற கோடிக் கணக்கான மக்களின் விருப்பும் வெற்றிபெறும் என்று நம்புகிறோம்.

1977-ம் ஆண்டில் உலக அரசியலில், ஆப்பிரிக்காவுக்கு மிகுந்த் கவனம் அளிக்கப் பெற்றுள்ளது; ஏனெனில், புரட்சிகரமான புனரமைப்பின் ஆற்றல், அங்கு தெளிவாகவும் பரந்த அளவிலும் வெளிப்பட்டுள்ளது. 'இயூபாவின் தலையீடு' மற்றும் 'சோவியத் விஸ்தரிப்புக் கொள்கை' என்ற கட்டுக்கதைகள், ஆபிரிக்க நிகழ்ச்சிகளின் சாராம்சத்தைக் காணத் தவறி விடுகின்றன.

19 8-ஆம் ஆண்டு பிறப்பதற்கு முன்பு, சர்வதேச பதற்றத் தணிவை ஆழப்படுத்தல் மற்றும் வலுப்படுத்தல் பற்றிய பிரகடனம், ஐ. நா. பொதுச் சபையின் முதற் கமிட்டியில் ஒருமுகமாக அங்கீகரிக்கப் பெற்றது. சர்வதேச உறவுகளில் முழுமையான மாற்றங்கள் வேண்டும் என்ற லட்சியத்திற்காக ஒன்றுபட்டுள்ள சகல சக்திகளின் உறுதியை மேலும் வலுப்படுத்த இது உதவுகிறது.

# பதற்றத் தணிக்கை; விடுதலை இயக்கமும் பீங்கிக் நிலையும்

வி. வாசிலெக்

கடந்த அக்டோபர் மாதம் பிராண்ஸ் பிரஸ் டைரக்டர்— ஜெனரல் க்ளாள் ரூஸ்ஸலுக்கு அளித்த பேட்டியில், 'உலக மக்களுக்குத் தீங்கு ஒன்றையே விளைவிக்குமாதலால், பீகிங் பதற்றத் தணிவை எதிர்க்கிறது' என்று சீனத் துணைப் பிரதமர் தெங்-ஸியோ-பீங் மீண்டும் காரணம் கூறியுள்ளார்.

பதற்றத் தணிவுக் கொள்கையானது, அனைத்து நாட்டு உழைக்கும் மக்களுக்கும் 'பிரதிகூலமான போக்காகும்' என்று சீனப் பத்திரிகைகளும் அடிக்கடி கூறி வருகின்றன. தேச விடுதலை இயக்கத்திற்கு, பதற்றத் தணிவு ஏற்படுத்துவதாகக் கூறும் 'சேதம்' பற்றி சீனப் பத்திரிகைகளும் ரேடியோவும் இடைவிடாது அங்கலாய்த்து வருகின்றன. 'தேச சுதந்திரம், விடுதலை மற்றும் வளர்ச்சிக்காகப் போராடும் மக்களின் கைகளைப் பதற்றத் தணிவுக் கொள்கை கட்டிப் போடுகின்றது' என்று சீனப் பிரச்சாரம் கூறுகிறது.

அது உண்மையா?

சர்வதேச கெடுபிடி நிலை தளரத் தொடங்கிய அதே சமயம் தான் உண்மையில் தேச விடுதலைச் சக்திகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றன. உதாரணமாக 1975-ல் வியத்நாம், லாவோஸ், கம்போடியா நாடுகளின் மக்கள் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போரிட்டு வென்றதின் விளைவாக, இந்தோசீனவுக்கு அமைதி கிட்டியது. அதே சமயத்தில் ஆப்பிரிக்காவில் நடந்த தேச விடுதலை இயக்கத்தின் விளைவாக, உலகில் கடைசி போர்ச்சுக்கீசிய காலனியாதிக்க சாம்ராஜ்யம் சரிந்தது. அங்கோலா, மொசாம்பிக், கினி-பிசாவ், கேப் வெர்டே தீவுகள், சவோ-டோம், பிரின்ஸைப் போன்ற பல புதிய சுதந்திர நாடுகள் தோன்றின. ஆகவே, சர்வதேச பதற்றத் தணிவானது விடுதலைக்காகப் போராடும் மக்களுக்குத் தடையாக இல்லாமல், அப்பகுதிகளில் தேச விடுதலை இயக்கங்களின் கழுத்தை நெரிக்கத் திட்டமிடும் ஏகாதிபத்திய, காலனியாதிக்கவாதிகளின் கரங்களைக் கட்டிப் போடுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதற்றத் தணிவின் சாரம்

மேலும் பதற்றத் தணிவு என்பது, காலனி பாதிக்க, ஏகாதி பத்திய, நிறவெறியாளர்களால் நசுக்கப்படும் மக்கள் அவர்களின் ஒடுக்கு முறையைப் பொறுத்துக் கொள்ளவேண்டுமென்று அர்த்த மாகாது. மாறாக, உலகெங்கணுமுள்ள ஜனநாயக, முற்போக்குச் சக்திகளின் தீவிர முயற்சிகளே அது ஊக்குவிக்கிறது. பதற்றத் தணிவு என்பது, வெளியார் தலையீடின்றி தங்கள் வாழ்வைத் தீர் மானித்துக் கொள்ளும் வாய்ப்பை மக்களுக்கு அளிக்க வேண்டு மென்பதுமாகும். சர்வதேசப் பூசல்களுக்கு நியாயமான தீர்வும் நாடுகளின் சமத்துவமும் மட்டுமே நிரந்தர அமைதிக்கு நம்பக மான அடித்தளமாக இருக்க முடியுமாதலால், பதற்றத் தணிவா னது ஏகாதிபத்திய, பிற்போக்கு, நிறவெறி மற்றும் காலனி யாதிக்கவாதிகளுக்கு எதிரான போராட்டத்தை ஊக்குவிக்கின்ற தேயன்றி தடங்கல் செய்வதில்லை.

பதற்றத் தணிவுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம், சோஷலிச கூட்டுச் சமுதாய நாடுகள் தேச விடுதலை இயக்கங் களுக்கு ஆதரவளிக்க வேண்டிய தம்முடைய சர்வதேசியக் கட மையிலிருந்து பின்வாங்குகின்றன' என்று பீகிங் அடிக்கடி கூறி, சில தேச விடுதலை இயக்கத் தலைவர்களையும், வளரும் நாடுகளில்

அண்ணா கோப்பிக் கடை

4, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7413

தலைமையகம்:
அண்ணா தொழிலகம், இணுவில்.
தொலைபேசி: 7412

கிளை:
1, மத்திய சந்தை,
சுன்னாகம்.




தலைவர்களை நம்பச் செய்ய முயலுகிறது. இது உண்மையா? மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் 60-ஆம் ஆண்டு விழா நிகழ்ச்சியில்போது லியனித் பிரஷ்னேவ் கூறினார்: 'முற் போக்குப் பாதையில் செல்வதற்குத்தாக தயாரா இருக்கும் நாடுகளின் வளர்ச்சிக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும், ஆதரவை யும் அளிக்கத் தயாராக இருப்பதுடன், அந்நாடுகளின் உறுதி யான, நம்பகமான நண்பர்களாகவும் சோஷலிச நாடுகள் உள்ளன. இது நார்மீக, அரசியல், பொருளாதார, மற்றும் ஸ்தாபன ரீதி யான ஆதரவு என்பதுடன், அந்நாடுகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதாகும்'

**பீகிங்கின் நோக்கம்**

சோவியத் யூனியனின் மீது அவதூறுகளைப் பொழியும் அதே நேரத்தில் பீகிங் தலைவர்கள் தேச விடுதலை இயக்கத்திற்குத் தங் கள் ஆதரவைப் பறைசாற்றிக் கொள்ளத் தவறுவதில்லை. ஆனால் அவர்களின் செயல்கள் இதற்கு நேர்மாறாக இருப்பதை, உண்மை கள் புலப்படுத்துகின்றன. உதாரணமாக 1971-ம் ஆண்டு வியத் நாம் யுத்தம் உச்சகட்டத்திலிருந்தபோது, சீன பிரச்சாரம் வியத்நாமுக்குச் சாசுவதமான ஆதரவுக்கு மனப்பூர்வமாக உறுதி யளித்துவிட்டு, அதே உறுதியுடன் ஜெனிவாவிலும் பாரிஸ் கூடலி லும் அமெரிக்கத் தூதுப்புக்களையும், ராணுவ தளங்களையும் தக்க வைப்பதை சீனா விரும்புகிறது என்றும் அப்போது பீகிங்கிற்கு விஜயம் செய்த அமெரிக்க செனட்டர்களிடம் தெரிவித்தது.

மற்றுமொரு சம்பவமான நிகழ்ச்சியையும் உதாரணமாகக் கொள்ளலாம். புதிதாக விடுதலையடைந்த அங்கோலா குடியரசின் மீது போர் தொடுத்த ஏகாதிபத்திய ஆதரவாளர்களான கைக்கூலிக் கும்பல்களையும், தென் ஆப்பிரிக்க நிறவெறியர்களையும், எம். பி. எல். ஏ. இயக்கத் தலைமையின் கீழ் அங்கோலா மக்கள் எதிர்த்துப் போரிட்டு வந்தபோது, சோஷலிச நாடுகளும், ஜனநாயக சக்தி களும் மிகுந்த பெரும்பான்மையான வளரும் நாடுகளும், அங்கோலா தேச பக்தர்கள் ஆதரித்தனர். ஆனால் சீனாவோ அங்கோலா மக் களின் பகைவர்களுடன் கைகோத்து நின்றது. கைக்கூலிக் கும்பல் களின் முகாம்களில் சீன ஆயுதங்கள் குவிக்கப்பட்டதுடன், கூலி கக்காரர்களுக்கு சீனப் பயிற்சியாளர்கள் ஜாயிரேயில் பயிற்சியும் அளித்தனர். அங்கோலாவின் மீது தென் ஆப்பிரிக்க நிறவெறி யர்கள் தொடுத்த ஆக்கிரமிப்பை பீகிங் பிரசாரம் தொடர்ந்து நியாயப்படுத்துகிறது.

'உலகப் புரட்சிகர இயக்கத்திற்கு துரோகம், ஏகாதிபத்தி யத்திற்கு முழு ஒத்துழைப்பு' என்ற கொள்கையைச் சீனா தொடர்ந்து கடைப்பிடித்து 'வருகிறது' என்ற பிரேஸில் நாட்டுப் பத்திரிகை வெளிவருக்கு அளித்த போட்டியில், இயூபா பிரதமர் காஸ்ட்ரோ கூறினார்.

பதற்றத் தணிவு, சோஷலிச நாடுகள், தேச விடுதலை சக்தி கள் ஆகியவற்றின் மீதான விரோதம் என்பது, சீனாவின் நாசகர அயல்துறைக் கொள்கையின் ஒரு அம்சமாகும். நாடுகளின் சுதந் திரத்திற்கும், சமாதானத்திற்கும் இக் கொள்கை பேராபத்தை விளைவிக்கும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூத்தன புது மலர்கள்

அன்பு முகைதீன்

எங்கள் வீடு இருண்டு கிடந்தது
எங்கள் வீட்டின் எதிரே உள்ள
வாசற் கடையும், வயற் பரப்பும்
காடாய் முன்னே காட்சி தந்தன.

காலை உதிக்கும் கதிரோன் ஒளி
யும்
புதிதாய் வீசும் புயற் காற்றும்
நாட்டில் இன்று நடக்கும் மாற்ற
மும்
வீட்டுக் குள்ளே விழவே இல்லை.

எந்த ஒளியும் எங்கள் வீட்டில்
வந்து நிறைய வழியும் இல்லை!
அந்த வீட்டில் அமர்ந்து நாங்கள்
எந்தப் பொழுதும் இருளில் கிடந்
தோம்.

வீட்டைச் சுற்றி வேலி போட்டு
வாப்பா நன்கு வைத்துக் கொண்
டார்
எட்டி வெளியே எழவும் கூட
எமக்கு உரிமை இவ்வா திருந்
தோம்.

பாட்டி அணிந்த பழைய நகையும்
பாட்டன் சேர்த்த பழைய சொத்
தும்
கூட்டம் கூட்டமாய் குவுந்து எங்
கள்
வீட்டுக் குள்ளே விரவிக்கிடந்தன.

அந்தப் பொருளை அணிந்து பார்க்
கவும்,
அவற்றை உண்டுஅனுப விக்கவும்.
எவரும் இன்றி எல்லாப் பொரு
ளும்
சிதறிக் கிடந்தது; சீரழிந்தது.

அன்பை என்மேல் அள்ளிச் சொ
ரியும்
உம்மா நிதமும் ஒதுங்குப் புறமாய்
உள்ள குசினியே உலக மென்று
எண்ணி அதற்குள் இன்பம் கண்
டார்.

இரவில் எம்மை எழுப்பி வாப்பா
பழைய கதைகள் படித்துக் தரு
வார்.
அந்தக் கதைகள் அகத்திற் சிறிதும்
பதிய மறுத்து பறந்து போயின.

பட்டி பட்டியாய் பசுக்கள் வளவில்
கட்டிக் கிடந்த காட்சி பற்றியும்
எருமை மாடுகள் எண்ணில் அட
ங்கா
இருந்த கதையும் எமக்குச் சொல்
வார்.

வண்டி வண்டியாய் வயலில் இரு
ந்து
நெல்லு வந்து நிறைந்து குவிந்த
தும்
முட்டி முட்டியாய் வந்த தயிரை
கொட்டிய தாகவும் கூறிக் கொள்
வார்.

ஆதம் போடியை அறியா தோர்கள்
இந்த ஊரில் எவரும் இல்லை!
அந்தப் போடியின் அருமை மகனே
என்று தன்னை எமக்குச் சொல்வார்.

வாப்பா வுக்கோர் வண்டி இருந்
ததாம்
அந்த வண்டியில் அமர்ந்து கொண்
டால்
இந்த உலகை இரண்டே நொடியில்
சுற்றி வந்த தாகவும் சொல்வார்.

ஊரில் நாமே உயர்ந்தோ ரென்
பார்
உடமை எமக்கே அதிக மென்பார்
இந்த ஊரில் இருப்போ ரெல்லாம்
அன்று எமது அடிமை யென்பார்



உம்மா இதனை ஒப்புக் கொண்டு
ஓடி வந்து உறுதி செய்வார்
சும்மா நாங்கள் சொல்ல வில்லை!
உண்மை மக்கள்! உண்மை மக்கள்!

என்று உம்மா எடுத்துச் சொல்
வார்
வாப்பா சொல்லை வேத வாக்
காய்
ஏற்று உம்மா இதனைச் சொல்வார்
வாப்பா நிற்கும் வழியில் நிற்
பார்

எங்கள் வீடு இருண்டு தொப்ப
எங்கள் வழ்வும் இருண்டு தெரிந்
தது
இருளில் நாங்கள் இருப்ப தேனோ?
என்று நெஞ்சு எண்ணிக் கொண்
டது.

எல்லாம் நிறைய எமக்காய் இருந்
தும்
ஒன்றை இழந்த உணர்வு மட்டும்
நெஞ்சில் வந்து நிறைந்து கொண்
டது
நெஞ்சில் புதிய திகழ்ச்சி அசைந்
தது.

இனியும் நாங்கள் இருண்டவீட்
டில்
இருத்தல் கூடா என்று தம்பி
உடைக்க வீட்டை உறுதி செய்
தான்
உணர்ச்சி கொண்டு உன்னி எழுந்
தான்.

எங்கள் புதிய எழுச்சி கண்டு
உம்மா' வாப்பா, ஊரார் எல்
லாம்
ஓடி எங்கோ ஒளித்துக் கொண்டார்
ஓடி எங்கோ ஒளித்துக் கொண்
டார்.

பழைய அமைப்பில் இருந்த வீட்
டை
உடைத்து அதனை அளித்து விட்டு
புதிய அமைப்பில் போற்றக் தக்க
வீட்டை நாங்கள் விரைவாய்
அமைத் தோம்.

வசந்தக் காற்று வந்து போகவும்
புதிய ஒளிகள் புகுந்து தழுவவும்,
நாட்டின் மாற்றம் நன்கு தெரிய
வும்
ஏற்றப் போல இடங்கள் வைத்
தோம்

எம்மைச் சுற்றி இருந்த இருள்கள்
அகன்று அகன்று அப்பால் போ
னது
வாழ்வில் புதிய வசந்தக் காற்று
வந்து எம்மை வாழ்த்திச் சென்
றது.

காடாய் முன்னே காட்சி தந்து
எங்கள் சொத்தாய் இருந்த நில
த்தை
பங்கு போட்டு பகிர்ந்து அளித்
தோம்
நிலங்கள் அற்றோர் நிறையத்
தொடங்கினர்

நிலத்தில் எங்கும் நிறைந்து
கிடந்த
முள்ளுச் செடிக்கூ முற்றாய்
அகற்றி
அந்த நிலத்தை அழித்துக் கொ
த்தி
புதிய விதைகள் போடத் தொடங்
கினர்.

புதிதாய் அவர்கள் போட்ட விதை
யில்
புதிய மலர்கள் பூக்கத் தொடங்
கின
அந்த மலரின் அழகு கண்டு
நெஞ்சம் இழந்து நின்றோர்
பலபேர்.

வஞ்ச நெஞ்சம் வாய்த்த சிலபோர்
கொய்து விடவும் குறிகள் பார்த்
தார்
ஆன போதும் அழகு மலர்கள்
வானை நோக்கி வளர்ந்து விட்டன.

அந்த மலர்கள் அழகாய் நின்று
பூத்துப் பூத்து புன்ன கைத்தன.
வானை நோக்கி வளர்ந்த மலரின்
வாசம் இங்கும் வந்து சேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்த மலரின் புதிய வாசம்
நாட்டின் இன்று நான்கு திசையும்
எல்லா மக்களும் ஏற்றம் காண
எழுந்து நன்றாய் இனிது வீசும்.

நொந்து கிடப்போர் நோவு அக
லவும்
உழைத்து அலுத்தோர் உணர்ச்சி
பெறவும்
அடக்கப் பட்டோர்
அதிர்ந்து எழவும்
இந்தக் காற்று இனிமேல் வீசும்.

இந்தக் காற்று இனிது வீசும்
பூத்த மலரின் புதிய வாசம்

கொண்டு வந்து குளிரச் செய்யும்
ஓயா என்றும் உரத்து வீசும்.

## அஞ்சல் பெட்டி!

நடுச்சந்தி வனத்தின்
திறந்த மேனிப் புஷ்பம் நீ!
சிரித்த முகத்தோடு
இருக்கும் தாசியே!
உனக்குள் கடித
ஆண்மைகள் மரணிகின்
சுண்ணும்பை (றை,
முத்தமிட்ட விரல்கள்
உன்னில்—
தேய்ந்து...தேய்ந்து
உன் மேனியில்
இறுதி—
மேக நோயின்
வடுக்களாய்
பலவித கோடுகள்!
பொருளாதாரச் சமூகப்
பெண்மையின் சோகங்கள்
உனக்குள்ளே!
அதனால்—
நீ சிவந்தே
சீவிக்கிறாய்!

**'மேமன்கவி'**


மென்மை, சுவை, தரமானவைகளுக்கு

**பேக்கிங் பவுடர்**
**ஜெலி கிறிஸ்டல்**
**கஸ்ரார்ட் பவுடர்**

போன்றவற்றையே தெரிந்து வாங்குங்கள்

தயாரிப்பாளர்:

**Bird Industries**

294, ஜோர்ஜ் ஆர். டி. சில்வா மாவத்தை,
கொழும்பு-13

35422






## ஆவேசப் பிரசங்கம்

எனது ஆரம்ப கால நண்பன்; இலக்கியகாரன்; பல வருட காலமாக என்னுடன் நெருங்கிப் பழகியவன்; பட்டதாரி அல்ல; கொழும்பில் நிரந்தரமாக வாழும் இந்த நண்பன் அந்தக் காலங்களில்— பதினைந்து பதினாறு வருடங்களுக்கு முன்— யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி வரத் தலைப்பட்டான்.

யாழ்ப்பாணம் வரும் சந்தர்ப்பங்களிலெல்லாம் என்னைக் கண்டு அளவளாவிச் செல்வதையும் மறக்கமாட்டான்.

பொது விவகாரங்களில் ஆரம்பிக்கும் எங்கள் இருவரது நெருங்கிய நட்பு பேச்சு, கொஞ்சம் கொஞ்சமாகத் தனிப்பட்ட சொந்த வாழ்வின் அபிலாஷைகளையும் அந்தரங்கமாகப் பரிமாறக் கூடிய அளவுக்கு நெருங்கி வர ஆரம்பித்தது.

ஒருநாள் மிக உணர்ச்சி வசப்பட்ட நிலையில் என்னுடன் சம்பாஷிக்கும்போது, தான் ஒரு பெண்ணைக் காதலிப்பதாகவும் அவளும் தன்னையே மனமார விரும்புவதாகவும் கூறி, தனது மன உணர்ச்சிகள் இந்தக் காதல் விவகாரத்தால் அந்தரப் படுவதாகவும் இக் காதல் நிறைவேறுமோ நிறைவேறாதோ எனத் தான் ஐயப்படுவதாகவும் சொல்லி முடித்தான்.

வெகு நிதானமானவன்; ஒரு விதமான வம்பு தும்புகளுக்கும் போகாதவன்; பொறுப்பாகச் சிந்திக்கப் பழக்கப்பட்டவன். இப்படித் திடீரெனக் காதல் முடிச்சில் முடிச்சப் படுவான் என நான் சற்றும் சந்தேகப்படவில்லை.

— ஆனால் உண்மை அவனது வாய் மூலமே வருகின்றதே!

நானும் அவனது அந்த ஆழ்ந்த கவலையில் பங்குகொண்டு நிச்சயம் வெற்றி கிட்டும் என்பதையும், வாலிப உணர்வுடன் இந்தப் பிரச்சினையை அணுகாமல் பொறுப்புடன் சிந்தித்துக் காரியமாற்றும்படியும் ஆறுதல் கூறினேன்.

இதன் பின்னர் அந்த நண்பன் என்னைச் சந்திக்க வரும் போதெல்லாம் தகவல்களை என்னுடன் பரிமாறுவதும் தனது மன உளைச்சல்களையெல்லாம் என்னிடம் அவிழ்த்துக் கொட்டித் தீர்ப்பதுமாக இருந்தான்.

இப்படியே இரு வருடங்களுக்கு மேல் காலம் ஓடிவிட்டது.

ஒருநாள் ஆவேசத்துடன் வந்த அந்த இனிய நண்பன் வழக்கத்துக்கு மாறுக அழுவாரைப் போல என்னுடன் கதைக்கத் தொடங்கினான்.

நான் அவனை அழைத்துக் கொண்டு ஒரு குளிர்பானக் கடைக்குச் சென்றேன். இருவரும் குளிர்பானம் அருந்திக் கொண்டே நடந்தவற்றைச் சொல்லும்படி கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெண்ணுக்கு — அவனது காதலிக்கு — இன்னும் ஒரு கிழமையில் திருமணம் நடக்க இருக்கிறதாம்; தான் ஏமாற்றப் பட்டு விட்டதாகவும், அவளும் இந்தக் கலியாணத்திற்குச் சம்மதித்து விட்டதாகவும் சொல்லி விட்டு, விரக்தி அடைந்த நிலையில் 'நான் இனி என்ன செய்ய?' என்று என்னைக் கேட்டான்.

நான் ரொம்பவும் மதிக்கும் நண்பன், என்னிடம் சில சந்தர்ப் பங்களில் உண்டாகும் உணர்ச்சிக் கோபங்களற்றவன் என்ற காரணத்தால் என்னைக் கவர்ந்த அந்த இலக்கியகாரன் குழந்தையைப் போல உணர்ச்சி வசப் பட்டுத் துடிதுடித்தான்.

— காதல் எத்தனை விசித்திரமானது — திடமான மனசுள்ள இளைஞர்களைக் கூடத் திணறடித்து விடுகின்றதே!

எதற்கும் அமைதியாக இருக்கும்படியும், பொறுப்பாகச் சிந்தித்து நடவடிக்கை எடுப்பது தான் இந்தச் சந்தர்ப்பத்தில் புத்திசாலித்தனம் என்றும் ஆறுதல் கூறி அவனைத் தேற்றி அனுப்பினேன்.

அவன் கூறிய கதைகளையும் சம்பவங்களையும் யோசிக்க யோசிக்க எனக்கு ஆவேசம் வரத் தலைப்பட்டது.

ஒரு படித்த பெண், இப்படி ஒரு அருமையான இனிய பண்புள்ளவனை நம்பிக்கை ஊட்டி அதைச் சிதைப்பதை வேடிக்கை என எண்ணி விட்டாளா? என எண்ண எண்ண, ஏதாவது செய்ய வேண்டும் என ஓர் அங்கலாய்ப்பு என்னை உந்தித் தள்ளியது;

சைக்கிளை எடுத்துக்கொண்டு மிதித்தேன், அந்தப் பெண்ணின் வீட்டுக்கு அருகே எனது இன்னொரு நண்பனின் வீடு இருந்தது; ஒரே எல்லை பக்கம் பக்கம் வீடுகள்.

அந்த நேரம் அந்த நண்பன் இல்லை;

அவனது விருந்தையில் நின்று கொண்டு வாய்க்கு வந்தபடி இந்தக் காலத்துப் படித்த பெண்களின் கோழைத் தனத்தையும், ஏமாற்று வேலைகளையும், பண்பான நல்ல இளைஞர்களின் மனசை இவர்கள் இள்ளுக் கீரைகளாகப் பாவிக்கும் அயோக்கியத் தனங்களையும் பற்றி ஒரு பெரிய பிரசங்கமே பண்ணி ஓய்ந்தேன்.

அந்தப் பெண்ணும் அவர்களது குடினி ஜன்னலுக்குள் நின்று நான் பேசுவதைக் கேட்கக் கேட்க எனது பிரசங்கத் தொனி ஆங்கார ஓங்கார மிட்டது.

வந்துவிட்டேன்.

எனக்கொரு மனத்திருப்தி.

எனது மனசுக்கினிய நண்பனுக்குச் சரியான கடமை செய்து விட்டது போன்ற ஒரு பூரிப்பு —

முடிவில் அந்தப் பெண்ணுக்கும் திருமணம் நடந்தது. எனது நண்பனுக்கும் ஆறு மாதத்துக்குள் கலியாணம் நடைபெற்றது — பெண் வேறு.

சில ஆண்டுகள் கழித்துத் தான் தெரிந்தது; எனக்குக் கிடைத்த தகவல்கள் சிலவற்றில் உண்மை இல்லையென்று...

இருந்தாலும் என்ன?

இன்று அந்த இரண்டு பேரும் தங்கள் தங்கள் இல்லாள் — இனியவருடன் சுகமாகக் குழந்தை குட்டிகளுடன் வாழ்ந்து வருகின்றனர். ★



தரமான — நகைச்சுவையான — புதுமையான கேள்விகள் விரும்பப்படுகின்றன. ஒவ்வொரு கேள்விகளுக்குப் பின்னரும் ஒவ்வொரு நெருக்கு முண்டு என்பதை நாம் மறக்கவில்லை. அஞ்சலட்டையில் உங்களது கேள்விகள் அமைந்தால் நல்லது. இத் தொடர்பு நம்மை இன்னும் நெருக்கப்படுத்தும்.

—ஆசிரியர்




டொமினிக் ஜீவா

❖ மல்லிகையை வாரமிதழாக அல்லது மாதம் இருமுறையாக வெளிக் கொண்டுவர நாம் என்ன?

வதிரி. க. சுரதா

உங்களை விட எனக்கு இந்த ஆர்வமே மூச்சு சென்ற மாதக் கேள்வி — பதிலில் இதைக் தெரிந்து கொள்ளலாம். மாதம் இருமுறை இதழாக்கிப் பின் வார இதழ் ஆக்குவதே எனது திட்டம். அதற்கு சாதன வசதி மிக முக்கியம். அத்துடன் நிர்வாக விஸ்தரிப்பும் தேவை. ஓர் அச்சு இயந்திரம் அத்தியாவசியமாக மல்லிகைக்குத் தேவை. பல நல்லெண்ணம் படைத்தவர்களின் உதவியால் அதை வாங்குவதற்குரிய பணத்தில் பாதியளவைச் சேகரித்துப் பாதுகாப்பாக வைத்திருக்கின்றேன். இன்னும் பாதி தேவை. நல்ல இதயங்கள் உதவ முன் வந்துள்ளன. கடன் பட்டாவது இதைச் சாதிக்கலாம். ஆனால் நமக்குத் தோதான இயந்திரம் இன்னமும் சரிப்பட்டு வரவில்லை. கூடிய சீக்கிரம் அது சாத்தியப்படலாம். அதன் பின்னர் உங்களது ஆவல் நிச்சயம் பூர்த்தியாகும்.

❖ ஈழத்தில் புதுக் கவிதை என எழுதப்படுவன எல்லாம் இலக்கிய அந்தஸ்தைப் பெற முடியுமா? இன்றைய புதுக் கவிதை ஜீவன் இழந்து சூத்திரப் பாங்கானதாகக் காணப்படுகின்றதே, இதுபற்றி என்ன கருதுகிறது?

சுதுமலை. க. இந்துமதி

ஆரம்ப காலங்களில் புதுக் கவிதை ஒரு வீரியம் மிக்க புது அம்சமாகத்தான் இருந்தது. போகப் போக அதன் வீரியமும் சொல்லாட்சியும் தொய்ந்து தொய்ந்து சுலோகக் கவிதைகளாக வெளிவர ஆரம்பித்துள்ளன. 'வானம்பாடி' கவிஞர்களின் கவிதைகளை இன்று படிக்கும் போதும் அதன் உள்ளடக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் வீரியமும் வியக்கத்தக்க தாக இருக்கின்றது. இலக்கிய அந்தஸ்துப் பெறுவதாக அவை அமைகின்றன. ஆனால் அவற் றைப் பின்பற்றி வருவதாக இன்று வெளிவரும் புதுக்கவிதை கள் இலக்கிய அந்தஸ்து அல்ல; பிரசுர அந்தஸ்துப் பெறுவதற் கும் தகுதி படைத்தவைகளா என்பதே எனது சந்தேகம்.

❋ மல்லிகையில் தங்களது சிறு கதைகள் இடம் பெறுவ தில்லையே, ஏன்? இரண்டு மாதத் துக்கொருமுறையாவது உங்க ளது கதைகளை வெளியிட்டு வர வேண்டுமென விரும்புகின்றேன்.

வங்காலை. எஸ். தாவீது

நான் ரஸிகர்களுக்கு அறி முகமாகியதே சிறுகதை எழுத் தாளன் என்பதன் மூலம்தான். சஞ்சிகையாளனாகியது பின்னால் தான். சிறுகதை ஆசிரியனாக இருந்தபோது, பகுதி நேர வேலை யாகத்தான் அது இருந்தது. இன்று நான் முழு நேர மல்லிகை யாளன். எனது சகல திறமை களையும் ஆற்றல்களையும் உழைப் புக்களையும் அதன் வேரடிக்கே பசளையாக்கியுள்ளேன். ஆறுத லாக எனது படைப்பைச் சிந் தித்து எழுதுவதற்கு எனக்கு நேரம் போதவில்லை. அதற்கு நேரத்தைச் செலவிட்டால் வேறு எங்கேயோ வந்து உதைக் கும். ஆக்க இலக்கியவாதிகள் தம்மைத் தாமே பலி கொடுத் துத்தான் இந்த நாட்டில் சஞ் சிகை நடத்த வேண்டியுள்ளது. இந்தச் சூழ்நிலை சீக்கிரம் மாறும். சிறுகதையல்ல; ஒரு புதிய நாவ லையே உங்களைப் போன்றவர் களுக்காகச் சிருஷ்டித்துத் தரு கிறேன். அதுவரை எனது உழைப்புச் சிரமத்தைப் புரிந்து கொள்ளுங்கள். நண்பர்களுக்கும் சொல்லுங்கள்.

❋ மதிப்புக்குரிய இந்திய தேசியத் தலைவர்களான காந்தியடிகள், நேரு போன்ற வர்களைப் பற்றி வட இந்தியா வில் தரக் குறைவான நூல்கள் வெளிவந்துள்ளனவாமே அது உண்மையா?

ஊரெழு. எம். தனபாலன்

எம். ஸி. மத்தாய் என்ப வர் எழுதிய 'நேரு சகாப்தத் தின் நினைவுகள்' என்ற புத்தக மும், வேத் மேத்தா என்பவர் எழுதிய 'மகாத்மா காந்தியும் அவரது சீடர்களும்' என்ற புத்தகமும் ஆக இரண்டு புத்த கங்கள் வெளிவந்துள்ளன. மிக ஆபாசமாகவும் கீழ்த்தரமாகவும் அப் புத்தகங்களில் அந்தத் தேசியத் தலைவர்களைப் பற்றி எழுதியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நேருவுக்கு ஆறு பெண்களுடன் தொடர்பு இருந்தது என்பதும் அதில் ஒரு செய்தி.

மனிதர்கள் அப்பழுக்கற்ற தேவ தூதர்கள் அல்ல என்பது உண்மை. அதே சமயம் தம் மைச் சுதந்திர வேள்விக்கே அர்ப்பணித்துத் தேசிய சுதந்தி ரத்தை மீட்டுத் தந்த அந்தத் தலைவர்களைப் பற்றி அவர்கள் மறைந்த நீண்ட நாட்களுக்குப் பின்னர் அதே சுதந்திரத்தினால் லாபம் கண்டுள்ள சுயநலக் கூட் டம் இப்படிக் குறுக்கு வழியில் இறங்கி அவர்களது முகத்தில் கரிபூசுவது தேசத்துக்கே கரிபூசு வதாகும். நமது தேசத்திலும் இது நடைபெறலாம்: ஜனநா யக சக்திகள் மிக விழிப்பாக இருந்து இவை போன்ற அழுக் குத் தனங்களை இரு தேசங்களி லும் முறியடிக்க வேண்டும். இதில் அரசியல் பாகுபாடு இருக்கக் கூடாது.



❋ வடமராய்ச்சியின் எம். பி. யாகவும் முதல் இடதுசாரிப் பாராளுமன்ற அங்கத்தவராக வும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவ ராகவும் விளங்கிய தோழர் பொன். கந்தையா பற்றிய உங் களது கருத்து என்ன?

வல்வெட்டி. த. திருஞானம்

உண்மையாகச் சொல்லப் போனால் இந்த நாட்டில் இது வரை தோன்றிய சகல தலைவர் களையும் விட மேதை. மிகப் பெறுமதி வாய்ந்த அரசியல் சிந்தனையாளன். பலர் பாராளு மன்றக் கதிரை பற்றியே சிந்தித் தனர்; தமிழ்த் தலைவர்கள் உட் பட. ஆனால் கந்தையர் பல தலைமுறைகள் பற்றிச் சிந்தித் தார்; தமிழர், சிங்களவர், மூஸ்லிம்கள் உட்பட. நான் நேரில் பல காலம் அவருடன் பழகியிருக்கிறேன். அவர் உயி ருடன் இருந்தபோது அவருடன் பழகுவதற்கு நான் மாக்ஸிய அறிவு ரீதியாகப் பக்குவப்பட்டி ருக்கவில்லை. இழந்த பின்னர், அதுவும் காலம் போகப் போக அந்த இழப்பை மனசார என் னால் உணர முடிகிறது. அவரது ஆற்றலை மட்டுப் படுத்தியது அவரை அடிக்கடி தொந்தரவு செய்து வந்த இதய நோய்தான். நோயற்றவராக அவர் இருந்தி ருந்தால் இந்த நாடே அவரது அரசியல் தீர்க்க தரிசனத்தை இன்று அறுவடை செய்திருக் கும். உண்மையாகவே அவரது ஞாபகச் சின்னம் இன்று அவசி யம் தேவை. இளம் தலை முறைக்கு அவரது பெயரே தெரியாது. இது எவ்வளவு பெரிய துரதிர்ஷ்டம்! அவரை உண்மையாகப் புரிந்து கொண்ட வர்கள் அதைச் செய்யக் கட மைப்பட்டவர்கள். அவரைப் பற்றிய வாழ்க்கைச் சரித நூலொன்று வெளிவருவது மிக மிக அவசியம்.

❋ பூமி அல்லாத வான மண் டலத்தில் மனிதர்களைப் போன்ற ஜீவராசிகள் உண்டா? நாம் மற்றைய கிரகங்களுக்குப் போவது போல அவர்களும் இப் பூமண்டலத்துக்கு வருகை தந்துள்ளனரா?

கிளிநொச்சி. எம். ராகுலன்

இதற்கு வெறும் கேள்வி பதிலில் பதில் சொல்லிவிட முடி யாது. பிரமாண்டமான அண்ட வெளியில் பூமி ஒரு துகள். நமது விஞ்ஞானத்திற்கே தட்டுப் படாத பல கோடி அதிசயங்கள் இன்னமும் உண்டு. அதில் இது வும் ஒன்று. விஞ்ஞானிகளும் இதுபற்றி ஆராய்ச்சி செய்து கொண்டே வருகின்றனர். பாரன் — வாரா — ஊலா மலை களின் உச்சிக் குகைகளில் வசிக் கும் ஹோம். ட்ரோபா என இரண்டு இன ஆதிவாசிகளைப் பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். பலமற்றவர்கள்; ஒல்லியானவர்கள், உயரம் நாலடி இரண்டங்குலம், இவர் களை உலகத்திலுள்ள எந்த இனத்தாரோடும் சேர்க்க ஆராய்ச்சியாளர்களால் முடிய வில்லை. இக் குகைகளில் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனித எலும்புக் கூடுகளை அவர் கள் கண்டுள்ளனர். இவர்களது மூதாதையர் வானுலகிலிருந்து இப் பூமிக்கு 'க்ளைடர்' விமா னத்தில் வந்தவர்களெனச் சொல்லப்படுகின்றது. விஞ்ஞா னமும் ஆராய்ச்சியும் இவர்கள் விவகாரத்தில் தடுமாறுகின்றன.

டோரு கற்சிலைகளும் சுவர்ச் சித்திரங்களும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன. இதை வைத்து ஒரு காலத்தில் விண்வெளி மாந் தர் பூமிக்கு வந்து போயினர் என நம்பப்படுகின்றது. சீனா — திபேத் இடையேயுள்ள இந்த மலை உச்சியில் கண்டெடுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட நடுவில் துளையுள்ள பறக்கும் தட்டு ஒன்றை ஆராய்ந்தனர். அதில் பெரும் பகுதி கோபால்ட் என்ற உலோகத்தால் உருவாகியதாம். அத்துடன் நமக்குப் பழக்கமில்லாத இசை லயத்துடன் அது அதிர்ந்ததாம்! 1 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. இது பூமிக்குச் சொந்த மற்றதாம். இது விஞ்ஞானத்துக்கே ஓர் அறை கூவலாகும்.

இது சம்பந்தமாக இன்னும் ஏராளமான தகவல்கள் உண்டு. நமது விஞ்ஞான அறிவுக்கு எட்டாத பல புதுமைகளை வருங்கால ஆராய்ச்சியாளர்கள் துலங்கப்படுத்துவார்கள். அதுவரை இதுபற்றிப் படித்துக் கொண்டே இருப்போம்.

❋ யாழ்ப்பாணத் தெருக்களின் சீர்கேடுகள் உலகப் பிரசித்தி பெற்றதாகி வருகின்றனவே, இதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

மாதகல். ம. மரியதாஸ்

நவம்பர் மாதச் சிரித்திரனின் அட்டைப் படத்தைப் பாருங்கள். நமது பட்டினத் தெருக்களின் தகமை விளங்கும். உயர்தரமான நகைச் சுவை; நான் ரசித்த பகிடி. சந்சிகையாளருக்குக் கிண்டல் பணிச் சிரிக்கத்தான் தெரியும், ஆக்க பூர்வமான யோசனை சொல்லத் தெரியாது என்ற பரவலான குற்றச் சாட்டுக்கு இதோ பதில்: நமது பிரதேசத் தெருக்களுக்குப் பாவிக்கப்படும் கற்களும் சல்லிகளும் நொருங்கி மாவாகும் தன்மை பொருந்தியவை. ஐந்து வருடங்களுக்கு முன்னர் நமது பாதைகளில் ஓடிய பார வண்டிகளை விட இன்று அதிக பாரமான வண்டிகளும் ஏராளமான பொது வாகனங்களும் இத் தெருக்களைப் பாவிக்கின்றன. அத்துடன் எரிபொருள் விலை ஏற்ற காரணமாக இன்று மாட்டு வண்டிகள் பாவனை கூடுகின்றது. இதனால் மாத்தன்மை வாய்ந்த கற்கள் தார்க் கவசத்துக்குள்ளேயே குறுணியாகி விடுகின்றன. மாரி மழை தொடர்ந்து பெய்தவுடன் கவசத்தையும் மீறி தண்ணீர் உள்ளே சென்று குழம்பாகி விடுகின்றது. தார்க் கவசம் படை படையாகத் தனிப்பட்டு, ஒதுங்கி விடுகின்றது. வெறும் குறுணிக் கற்கள் தண்ணீரில் நனைந்து, பாரத்தினால் அழுத்தப்படப் பட குழிகள் தோன்றி நீர்த் தேக்கமாகி விடுகின்றது. இதுதான் இன்றைய நிலை. இதை மாற்ற இதோ ஒரு யோசனை முக்கியமான பாதைகளுக்கு இனிமேல் நமது ஊர்க் கற்களைப் பாவிக்கக் கூடாது. மாறாக கருங் கற்களையும் சல்லிகளையுமே பாவிக்க வேண்டும். ஆரம்பத்தில் செலவு பிடிக்கலாம். ஆனால் தொடர்ந்து நன்மை பயக்கும். வவுனியாப் பகுதியில் இருந்து ரெயில் மூலம் இறக்குமதி செய்யலாம், கருங் கற்களையும் சல்லிகளையும். யாழ்ப்பாண மாநகர சபை விசேட ஆணையாளர் இத் திட்டத்தை அமுல் நடத்தினால் பதினைந்து வருட காலங்களுக்கு தெருக்கள் எந்த மழைக்கும் தாக்குப் பிடிக்கும். நமது நகருக்கு ஏற்பட்டுள்ள அபவாதமும் மறையும். இதற்கு உள்ளூராட்சி அமைச்சரின் பூரண ஒத்துழைப்புத் தேவை என்பது எமக்குத் தெரியும். இலங்கையில் இரண்டாவது பெரிய பட்டினத்துக்கு இப்படியான இழுக்கு இருப்பது நல்லதல்ல. இதைப் பற்றிச் சகலரும் சிந்திக்க வேண்டும். யாழ் பட்டினம் எம். பி - க்களுக்கு இது சமர்ப்பணம்!

★



## மகத்தான பொங்கல் வெளியீடு!

இலங்கையில் பல பாகங்களில் காண்பிக்கப்படுகிறது

# நான் உங்கள் தோழன்

வி. பி. கணேசன், சுபாஷினி, யெனிட்டா தனரத்தினம், அரிதாஸ், ராம்தாஸ், சந்திரகலா, லோகநாதன், பஞ்சலிங்கம் சுதுமலை தம்பிராசா, கே. ஏ. ஜவாகர் மற்றும் பலர் நடித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ சட்டை

என். சண்முகவிங்கன்

இன்னற் கண்ணுடியிலே படர்ந்த பன்னியைக் கையினுலே தடவி வெளியே பார்க்கிறேன். இன்னும் மங்கலாகவே இருக்கிறது. கண்களைத் துடைத்துக் கொள்ளுகிறேன்.

அவன் இன்னும் போகவில்லையா? அப்படியானுல் இந்த 'பெஸ்ற் ஹெளஸ்' கூட அவனில் ஒருவித சலனத்தையும் ஏற்படுத்தவில்லையா!

அந்தத் தாமரைக் குளத்தின் கரையில் அமர்ந்தபடி கைவிரலினுலே புல்லிலே கீறிக் கொண்டிருக்கிறுனே..... கவிதை எழுதுகிறுளோ?.....

அவன் நிச்சயமாகப் போகவில்லைப் போலத்தான் இருக்கிறது. நான்....

என் மனது கொதிக்கின்றதா?

தேகம், வீசும் பனியால் குளிர்கின்றது.

கட்டிலின் கீழ் சப்பாத்துத் துடைப்பதற்காகப் போட்டிருந்த அந்தப் பழைய சட்டை எங்கே?

என்றோ ஒருநாள் அவன் தந்த சட்டை.

நல்ல வேளை இன்னும் அது துலைந்து விடவில்லை. அதை உதறுகிறேன். அதிலிருந்து தெறிக்கும் தூசிகளும் என்னைக் கேலி செய்கின்றன.

இல்லை... இல்லை... அவன் என்னைக் கேலி செய்யமாட்டான்.

'இடையிலே வந்து, வந்த வேகத்திலேயே விடையும் பெற்றுவிட்ட அவைகளுக்காக இனியும் நீ கவலைப்பட்டு வீணுகப் போகிறுயா'

'அவனிடம் போ நீ முன் போல மாறிவிடு'

'அன்று அவனும் நீயும்'

அனேகமாக ஒவ்வொரு ஆண்டிலும் முதலாம் பிள்ளைக்கான பரிசு, எல்லாப் பரடங்களிலுமே முதற் பரிசை வென்றெடுக்கும் அவன், எந்தப் பரிசளிப்பு விழாவிலும் கலந்து கொண்டதில்லை. பள்ளிக்கூடத்தையோ பரிசளிப்பையோ அசட்டை செய்வதாக அவன் கனவிலும் நினைத்ததில்லை. ஆனுல் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் அவன் அசட்டை செய்வதாகவே நினைத்தார்கள். உண்மையில் பரிசளிப்பில் கலந்து கொள்பவருக்கென அதிபர் விதித்த உடைச் சட்டங்களை அவனுல் மாற்ற முடியாததுதான். அவன் கலந்து கொள்ளாததற்கான காரணமாகும். இதனை உணர்ந்து கொள்ளாத அவர்களின் அதிகாரங்கள், நுண்ணறிவு நிலைகளைப்பற்றி அவன் கவலைப்பட்டதில்லை. நல்ல சட்டை இல்லையென்பதைச் சொல்லி யாரின் அனுதாபத்தையும் சேமிக்க அவன் விரும்பியதில்லை.

அவன் சட்டைகளைவிடவும் மோசமாக அணியும் நிலையிலிருந்த நீ, அவன் நண்பனுக இருந்ததாலேதான் இது உனக்குக் கூடத் தெரிகிறது'

உதறிய சட்டையிலிருந்து, உறுத்தும் நினைவுகளாய் உதிர்கின்றன.

'நீ பக்கத்து வீட்டில் இரவல் வாங்கியாவது நல்ல சட்டை, சப்பாத்துப் போட்டு பரிசளிப்பு விழாவிற்குப் போய் விடுவாய்..... இது அவனுக்குக் கொஞ்சமும் பிடிப்பதில்லை; காலப் போக்கில் அவனைப் பார்த்து அவனைப் போலவே இருக்க முயன்றுய்.

'உடுப்பிலே என்ன மேலை இருக்கு, நீங்க கவனமாய்ப் படியுங்கோ' உன்னுடைய அம்மா மட்டுமல்ல அவன் அம்மாவும் உங்களுக்கு அடிக்கடி கூறும் அறிவுரைகள். உண்மையில் நீங்கள் போடும் சட்டைகளை நினைந்து அவர்கள் வேதனைப் படுகிறுர்கள் என்பது உங்களுக்குத் தெரியாமலில்லை. 'நல்லாகப் படியுங்கோ' என்பதனுடாக, நல்லாகப் படித்து உத்தியோகமாகிவிட்டால் பின் விரும்பிய உடுப்பு வாங்கிப் போடுவீர்கள்தானே என்பதனை உணர்த்துகிறுர்கள் என்பதும் உங்களுக்கு விளங்கிவிடும்.

நல்லாகத்தான் படித்தீர்கள்;

கரப்படுத்தல்கள், தடைகள் இருந்தும் பல்கலைக்கழகத்திற்கு எடுபட்டீர்கள்; உங்களின் அதிர்ஷ்டமோ, அன்னையரின் வேண்டுதல்களோ இருவருக்கும் 'ஸ்கொலஷிப்' கிடைத்தது;

அதே சட்டைகளுடனேயே பல்கலைக்கழகத்திற்கும் வந்தீர்கள். உங்களது சட்டைகளைப் பார்த்து இரக்கத்தினுல் சிலர் 'ராக்கிங்' செய்யாமல் விட்டதும், பலர் அதனையே விநோதமாக்கி அலைத்ததும உனக்கு மறக்கமுடியாததாகின; ஆனுல் அவன் எப்பொழுதும் போலவே நிதானமாக,



நகைச்சுவை உலகில்
தனித்துவச் சஞ்சிகை

சிரித்திரன்

தொடர்ந்து படித்துப் பாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உனக்கள் ஒவ்வொருத்தனும் தங்கடை கொம்பிளெக்ஸுகளை காட்டுறுங்கள், உதைக் கவனிக்காமல் இரு' என்பான்.

அவனுல் அப்படிச் சொல்லி இருக்கவும் முடிந்தது. உன்னுல் கேட்க மட்டுமே முடிந்தது. எப்பொழுது சட்டையை மாற்றுவது என்பதிலேயே உன் முழுக் கவனமும் சென்றது.

பல்கலைக் கழகத்திற்கு வந்தும் ஒருவருடமாகிறது. உங்கள் சட்டைகள் மாறவில்லை. இதனுல் உங்களுக்கு ரவிக்கைகளும் இல்லை.

சட்டை மாற்றும் பைத்தியத்திலிருந்த உன் பலவீனத்துடன் இந்த ரவிக்கை மயக்கமும் சேர்ந்து கொண்டது. ஆமாம் வண்ண வண்ண ரவிக்கைகளுக்காய், சேலைகளுக்காய் ஏங்கும் எண்ணம் உனை உருக்குலைத்தபோது,

'ரவிக்கைகளுடன் சுற்றும் ஏனைய நல்ல சட்டைக்காரரை விட நீ உத்வேகத்துடன் காணப் படுகிறுய்'

அடக்கிவைத்த உன் ஆசைகளை அதன் வழியில் இன்று திறந்துவிட்டால் ஆபத்தடா என்று அவன் இடித்துரைத்த போது அவன்மீதான நட்பின் மேலேயே நீ ஆத்திரப்படத் தொடங்கினுய்.....

உன் முக அழகில் மயங்கிய ரவிக்கைகளும், நீ சட்டை மாற்றுத வரையில் உன்னிடம் சேருவதில்லை என்றபோது, அம்மாவின் கஷ்டத்தை உணர்ந்த வனுக, அவனுக்கு நண்பனுக இருந்த நீ... மாறினுய்,

கிராமத்தில் நீங்கள் இருந்த அந்தச் சின்ன வீடும், வளவும் ஈடாக, நீ நல்ல சட்டை போடத் தொடங்கினுய்..... வழமையாக நல்ல சட்டை போடுபவர்களை விடவும் நல்ல சட்டை போட ஆரம்பித்தாய்.

தினம் ஒரு ரவிக்கையுடன் சுற்றினுய்.....

தன் சட்டைகளைக் கேலி செய்யும் ரவிக்கைகளை அசட்டையுடன் பார்த்துச் செல்லும் அவனை நீ அசட்டையாக நடத்த ஆரம்பித்தாய், உன் புதிய சட்டைகளுடன் அவன் சட்டைகள் கொஞ்சமும் பொருந்தவில்லை என நீனைத்த நீ; உன் அன்புக் குரிய நண்பனையே தூரத் தூரத் தள்ளினுய்.

ஆரம்பத்தில் உனக்கு இடித்துரைத்துக் கூறுத்த அவன் தானுகவே ஒதுங்கிக் கொண்டான். இன்று நீ... நீ.....

உறுத்தும் நினைவுகளால் உதிர்த்து என்னையெனக்கறிவித்த என் குருநாதன், அந்தச் சட்டையை வேகமாக அணிந்து மீண்டும் ஜன்னலினூடாகப் பார்க்கிறேன்.

கலகலப்பான 'கோற்றுகள், ரைகள், ரவிக்கைகள், வானவில் போல அசையும் சேலைகள்'

ஆமாம் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் துடிப்புடன் பல்கலைக்கழக விழா மண்டபத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வழமையாக நல்ல சட்டை போடுகின்றவர்களும் அதிலே நிற்கிறுர்கள். அவன் அன்று சொன்னது போல, அவர்களை விடவும் நான் சட்டை போடுவதிலும், ரவிக்கை தேடுவதிலும் தீவிரமாக இருந்திருக்கிறேனே

ஆவலுடன் அவனிருந்த தாமரைக் குளத்தின் திசையில் பார்க்கிறேன். பெஸ்ற் கிளாஸில் பாஸ்பண்ணி நாளை விரிவுரையாளனுகப் போகும் அவன்



பல்கலைக்கழகப் பரிசளிப்பு விழாவுக்குச் செல்லாதது போலவே பட்டமளிப்பு விழாவுக்கும் சென்றுவிடவில்லை. அன்று அதிபரின் சட்டங்களுக்காகப் பயந்த நிலை நிச்சயமாக இன்றைய அவனிடம் இல்லை. அப்படியானுல் பெரும் புள்ளிகள் கலந்துகொள்ளும், கலகலப்பாக நடக்கும் விழாவில் பட்டம்பெற அவன் ஏன் இன்று விரும்பவில்லை. அதே சட்டையுடன் அமைதி தவழ அங்கேயே அந்தத் தாமரைக் குளத்தின் அழகிலேயே மூழ்கியிருக்கிறுன்...

என்னிடமுள்ள புதிய சட்டைகளையெல்லாம் அவனிடம் கொடுத்து, அவனிடமுள்ள பழைய சட்டைகளை அவனிடம் கேட்டு அழவேண்டும் போல இருக்கிறது.

அவனை முன்போல மச்சான் என்று இனி நான் கூப்பிடலாமா அல்லது 'றிப்பீற் எக்ஸாம்' எடுக்கப்போகும் எனக்கு விரிவுரையாளனுகும் அவனை 'சேர்' என்று சொல்ல வேண்டுமா.....

ஜன்னலினூடாக மீண்டும் அவனைப் பார்க்கிறேன். என்ன எழுந்து நின்றபடி. அவன் என்னைக் கைதட்டி அழைக்கிறுனு?

ஜன்னற் கண்ணுடி உடைகிறது. ஆமாம் அவனைக்காணும் விரைவு.


Wholesale
and
Retail
Sewing Thread
and
Trimmings Dealers

HUSSAIN IBRAHIM & SONS

156, MAIN STREET,
COLOMBO-11.

Tele : 24736




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மகா நதி'

முற்போக்குக் கலை இலக்கியத்தில் முழுமையான ஈடுபாடு கொண்ட படைப்பாளிகளும், விமர்சகர்களும் மதுரையிலிருந்து ஒரு நல்ல இலக்கிய இதழைக் கொண்டுவர நெடுநாட்களாகத் திட்டமிட்டு, இப்போது 'மகா நதி' 25-12-77-ல் வெளிவந்திருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள நல்ல எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும், விமர்சகர்களும், ஆராய்ச்சியாளர்களும் அடுத்து வரும் இதழ்களில் எழுத இருக்கிறார்கள். தமிழ் மொழி தவிர்த்த பிறமொழி, மற்றும் சிறந்த சர்வதேசிய இலக்கியங்களையும் அவ்வப்போது அறிமுகம் செய்வதும், எங்களுடைய இலக்கியப் பொது நோக்கங்களில் ஒன்று. நீண்ட பயணத்தைக் கொண்டுள்ள எங்கள் பாதையின் அறிமுகத்துக்கு இது போதும் என்று நினைக்கிறேன்.

**பொன்மணி**

---

**சந்தாதாரர்களுக்கு**

. உங்களது வீடு தேடி மல்லிகை வந்து சேர, தவறாமல் மல்லிகை இதழ்களை ஒருங்கு சேர்ந்து வைத்திருக்க, தொடர்ந்து இச் சஞ்சிகையைப் படிப்பதினால் ஏற்படும் சிந்தனைத் தெளிவை வலுப்படுத்த, நம் நாட்டில் ஏற்பட்டு வரும் இலக்கிய வளர்ச்சியின் தாக்கத்தைச் சரியான திசை வழியில் தெரிந்து கொள்ள, ஒரு தரமான இலக்கிய சஞ்சிகையின் இதய உணர்வுகளைச் சகோதர பாசத்துடன் தெரிந்து கொள்ள ஒரே வழி— சந்தாதாரராகுவதேயகும். மல்லிகைக் குடும்பத்தில் உங்களையும் ஓர் அங்கத்தவராக இந்தப் புது வருடத்தில் இணைத்துக் கொள்ளுங்கள்


**அச்சுக்கலை ஒரு அருமையான கலை**

**அதை அற்புதமாகச் செய்வதே எமது வேலை**

கொழும்பில் அற்புதமான அச்சக வேலைகளுக்கு எம்மை ஒரு தடவை அணுகுங்கள்.

தொலைபேசி:
**35422**

**நியூ கணேசன் பிரிண்டர்ஸ்**

**12, அப்துல் ஜப்பார் மாவத்தை,**
**கொழும்பு - 12**






## 'நான் உங்கள் தோழன்'

ஈழத்துத் தமிழ் சினிமா உலகில், அண்மையில் வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'நான் உங்கள் தோழன்' சினிமா தமிழ் சினிமாப் படங்களுக்கே உரித்தான மாமூலமான கதை அம்சங்களைக் கொண்டதுதான்.

தொழில் நுட்ப வளர்ச்சி, தரமான படப்பிடிப்பு, திறமையான டைரக்ஷன் போன்றவைகள் இப்படத்தில் முன்னேறி இருந்த போதிலும் நல்ல வலுவான கதையம்சம் இல்லாதது பெருங் குறையே.

எனினும், வளர்ந்து வரும் இலங்கைத் தமிழ்ச் சினிமாக் கலைக்கு நான் உங்கள் தோழன் இன்னொரு படிக்கல்.

கணேஸ் பிலிம்ஸாரின் விளம்பரப்படி கூறில்— 'கிளுகிளுப்பை ஊட்டும் கவர்ச்சி நடனங்கள் — உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் காதல் காட்சிகள் — காதுக்கினிய கீதங்கள் — வயிறு குலுங்க வைக்கும் நகைச்சுவை--' நிறைந்த படம், என்பதை மறுப்பதற்கில்லை. மாமூலான இந்தக் கலவையின் மொத்தம்தான் தமிழ்ப் படமா என்று சிந்திக்கக்கூடியது. கதையோடு ஒட்டாத சம்பவங்களும், பாத்திரங்களும் (அல்லது பாத்திரங்களோடு ஒட்டாத கதை) வெகு சிரமத்துடன் கதையை நகர்த்த எடுத்த முயற்சிகளும் திருப்தி தருவதாகவில்லை.

படத்தின் இயக்குநர் சந்திரன். கமரா வாமதேவன் இருவரும் தங்கள் கடமைகளைப் பரிபூரணமாகச் செய்திருக்கிறார்கள். 'டெக்னிக்கல் டிபெக்ஸ்' ஒலியிலோ ஒளியிலோ எங்கும் காணப்படவில்லை; இது பாராட்டத்தக்க அம்சம்.

இப்படத்தில் வி. பி. கணேசன், சுபாஷினி, ஜெனிட்டா, தனரத்தினம், அரிதாஸ், ராம்தாஸ், சந்திரகலா, லோகநாதன், பஞ்சலிங்கம், சுதுமலை தம்பிராசா, கே. ஏ. ஜவாகர் முதலானவர் நடிப்பில் பங்கு கொண்டிருக்கின்றார்கள். பொதுவாகக் குறை சொல்லமுடியாத அளவிற்கு நடிக்க முயன்றிருக்கிறார்கள், பாராட்டுக்கள்.

இறுதியாக, கணேஸ் பிலிம்சாருக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். கலைஞன் ரசிகர் வழி செல்லக்கூடாது; ரசிகர்களைத் தன் வழி எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் கலையின் வெற்றியும், சமூகப் பயனுமாக அது அமையும்.

**—கனகசபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயிகளே ! பண்ணையாளர்களே !

வியாபாரிகளே !

உங்களுக்குத் தேவையான

சகலவிதமான

உர வகைகளையும்
கால்நடை, கோழித்தீன் வகைகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

தரமானவைகளே விற்பனை செய்யும்
நேர்மையான ஸ்தாபனம்
எனப் பெயர் பெற்ற
ஸ்தாபனம் இதுவே

**ஸ்ரீ ஐயனர் ஸ்ரோர்ஸ்**

31–33, ஆட்டுப்பட்டித் தெரு.
கொழும்பு 13.

*With the Best Compliments*

*from*

**BOND'S INSTITUTE**

274/2, Hospital Road,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org